www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

Jude

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

நவ.01—07,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 281

## ஜனவரிக்குள் நெருக்கடி



## பலமுனை மோதல்



## சூப்பர் தொடர்

ராஜேஸ் குமார்

## டிசம்பர் பௌர்ணமி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மௌனியாக இருந்த காமினி

*அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.*

வடக்கு-கிழக்கு மாகாண
ஆளுநர்
காமினி பொன்சேகா
பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டார்!

காமினி பொன்சேகாவை
அரசாங்கம்
அலட்சியம் செய்துவிட்டது!

தேவையானபோது
பயன்படுத்திவிட்டு
தேவை முடிந்ததும்
தூக்கி எறியப்படும்
கறிவேப்பிலையாகியுள்ளார்
காமினி பொன்சேகா!

அதற்காக
அனுதாபப்படுவது நியாயம்!

ஆனால், அவரை
சிலர் அளவுக்கு மீறி
புகழ்வது அநியாயம்!

அவருக்கு தமிழ் தெரியும்
என்பதால் மட்டும்
தமிழ் பேசும் மக்களுக்காக
பேசினார் என்று
அர்த்தமாகிவிடாது!

யாழ் குடாநாட்டில்
காணாமல் போனோர் பிரச்சனை!

செம்மணிப் புதைகுழிகள்
பற்றிய பிரச்சனை!

பொருளாதாரத் தடைகளை
படையினர்
தம் இஷ்டப்படி
விதித்துவரும் பிரச்சனை!

திருமலைச் சந்தையை
திறக்கவிடாமல்
படைத்தரப்பு
தடுத்துவரும் பிரச்சனை!

லிங்கநகரில் இருந்து
தமிழ்க் குடும்பங்களை
வெளியேற்றும் மிரட்டல்கள்!

நிவாரண வெட்டுகள்!
இடம் பெயர்வுகள்!

மருந்தின்றி வாடும்
வன்னி மக்கள் நிலை!

யாழ் குடாநாட்டுக்கு
அரசு தனது ஏற்பாட்டில்
குறைந்த கட்டணத்தில்
கப்பல் சேவை நடத்த
முன்வராமல் இருந்தமை!

இவ்வாறான பல்வேறு
முக்கியமான பிரச்சனைகளில்-
ஆளுநர் ஒருவர் இருக்கிறார்
என்பதற்கான அறிகுறியே
நமக்குத் தெரியவில்லை!

வெறும் 'இரப்பர் ஸ்டாம்'பாக
நாற்காலியை அலங்கரித்தபடி
அமைதி காத்திருக்கிறார்!

கல்விக்குப் பொறுப்பான
அதிகாரி ஒருவருடன்
ஏற்பட்ட பனிப்போர்தான்
அவருக்கு தனிப்பட்ட
கௌரவப் பிரச்சனையாகியது!

குறிப்பிட்ட அதிகாரிமீதான
காமினி பொன்சேகாவின்
கோபம் நியாயம்!
குற்றச்சாட்டுக்கள் நியாயம்!

ஆனால் அவர் மட்டும்தான்
முறைகேடுகளின்
மொத்த வடிவமல்ல!

இன்னும் பல அதிகாரிகள்
மாகாணசபையில்
சுருட்டிக் கொண்டிருக்கிறார்கள்!
அவர்களில் சிலர்
காமினிக்கு
நெருக்கமாகவும் இருந்துள்ளனர்!

திருமலை நகரசபைத் தலைவர்
தொடர்பான விசாரணை
அறிக்கையையும்
நட்புக்கருதி
அமுக்கியே வைத்திருந்தார்!

அது மட்டுமல்ல,
மிக முக்கியமான
தகவல் ஒன்றையும்
தன்வாயால் கூறியுள்ளார்!

"வடக்கு-கிழக்குக்கு
ஒதுக்கப்படுவதாக
அரசால் உரத்துக் கூறப்படும்
நிதி எதுவும்
முறையாக வந்து சேர்வதில்லை!"
என்று கூறியுள்ளார்.

தன்னை உதாசீனம்
செய்யும் வரைக்கும்-
இத்தனை வருடங்களாக
அந்த உண்மையை
அவரும் ஒளித்து
வைத்திருந்தார் என்பதும்,
உடந்தையாக இருந்தார்
என்பதும் நெருடுகிறது!

வடக்கு-கிழக்கு
மக்களை மூச்சுத் திணறவைக்கும்
அரசியல், இராணுவ, பொருளாதார
அழுத்தங்களைக் குறைக்க
ஆளுநர் பதவியை வைத்து
'அவர் செய்தது என்ன?'
என்ற கேள்விக்கு விடை
பெரிய பூச்சியம்தான்!

வடக்கு-கிழக்கை
ஆள்வது
படைத்தரப்பாக இருக்கையில்
ஆளுநர் என்பதே
அலங்காரப் பதவிதான்!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*

## தொண்டின் பெருமை

தொண்டு செய்வதன் மூலம் தெய்வீகத்தன்மையை அடையலாம் என்பது ஆன்றோர் வாக்கு. உன்னைப் போல் பிறரையும்நேசி! அத்தகைய நேச மனப்பான்மை நம்மிடத்தில் தோன்றுமேயானால் தொண்டாற்றும் துணிவு நம்மிடம் தொற்றிக்கொள்ளும்.

தொண்டு என்றால் என்ன? யாருக்காகத்தொண்டு செய்ய வேண்டும்? மக்கள் சேவையே மகேசன் சேவை. சகல வசதிகளும் படைத்த ஒரு தனவானிடம் போய் அவனுக்கு உதவி செய்வது தொண்டாகுமா? இல்லை. எவருக்கு உதவி தேவையோ அவருக்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளைப் புரிவதுதான் உண்மையான தொண்டு. உயிர்களிடத்தில் அன்பு கொள்ள வேண்டும். எமது உள்ளத்தில் அன்பு ஊற்றெடுத்தால் மட்டுமே அந்த அன்பைப் பகிர்ந்து கொள்ளும் பண்பு உண்டாகும். அப்போது எவருக்கு நாம் தொண்டு புரிய வேண்டும் என்ற ஞானமும் தோன்றும்.

சிலர் ஆலயங்களில் தொண்டு புரிகின்றனர். வயது முதிர்ந்துவிட்ட பெற்றோருக்கும் உற்றவருக்கும் தொண்டு செய்கின்றனர். வறிய நிலையில் வாடுகின்றவர்களின் வறுமையைப் போக்கும் பொருட்டு, அவர்களுக்கு உதவிகளை வழங்கித் தொண்டாற்றுகின்றனர். நோய் வாய்ப்பட்டு முடங்கிக் கிடப்போருக்கு உதவும் பொருட்டும் தொண்டு புரிகின்றனர்.

எத்தகைய தொண்டை நாம் ஏற்றுக் கொண்டாலும் அதில் துளி அளவும் சுயநலம் இருக்கலாகாது. பிரதிபலன் கருதிப் புரியும் தொண்டினாலோ, ஏனையோர் பார்த்து எம்மைப் புகழ்ந்துரைக்கட்டும் என்ற கருத்துடனோ செய்யும் தொண்டு எந்த வகையிலும் நன்மை பயக்காது. தன்னலமற்ற தொண்டு புரியும் எவனும் எத்தகைய துன்பமும் அடைய மாட்டான். அவன் சிவனுடைய அரவணைப்புடன் என்றும் ஆனந்த மயமான வாழ்க்கையையே அனுபவிப்பான்.

ஞானேந்திரன்

# ஆன்மீகம்



## தொழுகையின் முக்கியத்துவமும், அதன் நன்மைகளும்

ஹஜ்ரத் உபாதா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "எனது அன்பர் நபி (ஸல்) அவர்கள் எனக்கு ஏழு உபதேசங்களைச் செய்தார்கள். அவற்றில் நான்கு வருமாறு: (1) நீங்கள் துண்டு துண்டாக வெட்டப்பட்டாலும், தீயில் எரிக்கப்பட்டாலும், அல்லாஹ்விற்கு எதையும் இணை வைக்காதீர்கள். (2) தெரிந்தே தொழுகையை விடாதீர்கள். தெரிந்தே தொழுகையை விடுபவர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறி விட்டார். (3) அல்லாஹ்வின் கட்டளைக்கு மாற்றமாக நடக்காதீர். அதனால் அல்லாஹ்வின் கோபம் உண்டாகிறது. (4) மது அருந்தாதீர்கள். அது எல்லாப் பாவங்களுக்கும் ஆணிவேராக இருக்கிறது."

மேலும், இப்னு கய்யூம் (ரஹ்) அவர்கள் ஒரு நூலில் எழுதியிருப்பதாவது: தொழுகை உணவைக் கொண்டு வருகிறது. அது உடல் நலத்தைப் பாதுகாத்து, நோய்களை நீக்கி, உள்ளத்தை உறுதிப்படுத்துகிறது. முகத்துக்கு அழகையும், பிரகாசத்தையும் தருகிறது. உயிருக்கு இன்பமளித்து, உறுப்புகளுக்கு உற்சாகத்தைக் கொடுக்கிறது. மனத்தெளிவைக் கொடுத்து உள்ளத்துக்கு ஒளியூட்டுகிறது. அல்லாஹ்வின் தண்டனையைத் தடுத்து, ஷைத்தானை விரட்டுகிறது. அல்லாஹ்வை நெருங்கச் செய்கிறது. மொத்தத்தில் உடல், உயிர் ஆகியவற்றின் நலன்களையும் பாதுகாத்து, ஈருலகிலும் தீமைகளை நீக்கி, எல்லாப் பலன்களையும் பெற்றுத் தருகிறது.

ஏ.சீ.முஹம்மது நியாஸ், இலண்டன்.

## கவிதைப் போட்டி இல.278



**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### பரிசுக்குரிய கவிதை

### புரியவில்லையா?

நாட்டில் நம்மவரை
நாளும் படப்பிடிப்பு!
வீட்டில் உனக்கு
நமது படப்பிடிப்பு!

க.சி.ஆ. தங்கரத்தினம்-
யாழ்வீதி, வவுனியா.

### செய்திகள்

அற்புதக் கற்பனை-
அதற்குத் தோதாக
அழகான படப்பிடிப்பு!
அடுத்த செய்தியறிக்கைக்கு
அவசரத் தயாரிப்பு!

சி.மு. சுந்தரேசன்-
மஸ்கெலியா.

### ஒ(வே)ற்றுமை

இங்கு நாயாக எம்நிலை.....
கவனிக்க யாருமில்லை-அங்கு
நாயாக இருந்தாலும்
கவனிப்பு பிரமாதம்!

கமலரம்யா- கல்லடி, மட்டக்களப்பு

### அறிவு

ஆறுக்கு வாயில் நன்றி
ஐந்துக்கு செயலில் நன்றி!

எல். கிரிசாந்தி-
புதியவன்னியனார் வீதி, மட்டக்களப்பு.

### என்னே வஞ்சனை?

நீங்கள் பிடித்தால் புகைப்படம்-தமிழர்
நாங்கள் பிடித்தால் சிறைக்கூடம்.

ச. மகாலிங்கம்- வெலிமடை குரூப், வெலிமடை.

### உற்ற தோழன்

சுதந்திரமாய் வாழும்
உரிமை எமக்கில்லை;
ஆதரவு தந்தெம்மை
அணைத்திடவும் ஆளில்லை;
ஓரறிவு கூடியென்ன
மாண்புறு குணங்களில்லை;
நன்றி விசுவாசம் காட்டி
துணையாகும் நாய் மேலாம்!

ம. திருவரசுராசா- வவுனியா.

### வித்தை

இரண்டுகால்களை
நான்குக்குச்
சமமாக்கும் வித்தை
போருக்கு மட்டுமே
தெரியும்!

அ. அச்சுதன்-
சேனையூர்-06.

### நாய்க்கவிதை

இனியென்ன....!
மரபுக் கவிதை,
மணிக்கவிதை
எல்லாம்போய்
நாய்க்கவிதை
என்றாகிவிடும்!

கு. திருமால்-
அமிர்தகழி, மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.281



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 07.11.1998

**முகவரி:** கவிதைப் போட்டி இல.281
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### ஜாக்கிரதை

குண்டு பிடிக்கும் நாயம்மா
இதை நீ படம் பிடித்தால்
உன்னைப் பிடித்திடுவாரம்மா
இரண்டெழுத்தாரிடம் உள்ள
இரண்டுவயதாள் என்பரம்மா!

யோசேறோ- கொழும்பு-13.

### நன்றி உள்ள நாய்கள்

நன்றி மறவாத நல்லவர்களை
நாடெங்கிலும் தேடினேன்....
நன்றி உள்ள நாய்களை
நான் கண்டு (படம்) பிடித்தேன்!.

'ஜோதி'- பிரதேச செயலகம்,
வவுனியா.

### ஆமாசாமி

எஜமானர்கள்
எதைச்செய்தாலும்
நாய்கள்
வாலாட்டுமென்பதால்
இங்கே
நாய்கள் அதிகம்!

எஸ். பிரபா- பதுளை.

# வாசக(ர்)சாலை

## எங்கிருந்தபோதும் ஏக்கத்துடன்....

அன்புடன் முரசு ஆசிரியர் அவர்கட்கு! வணக்கம். உங்கள் பத்திரிகையை வாரம் தவறாமல் வாசித்து வரும் இலட்சம் வாசகர்களில் நானும் ஒருவன். கடந்த 2 வருடங்களாக நான் வாசித்து வருகின்றேன். ஆனால் கடந்த கவிதைப்போட்டி இலக்கம் 274ல் அதற்குரிய பரிசுக் கவிதை என்னையும் என் நண்பர்களையும் மிகவும் பாதித்துவிட்டது.

"என்ன பார்க்கின்றாய்? தாமரைக் கிழங்குகள் தரையில் உள்ளவரை தவிக்க விடமாட்டேனடா!" என்ற கவிதை. இது கவிதை அல்ல. ஒரு காவியம். எப்படி எழுதுவது என்று எனக்குத் தெரியவில்லை. நாங்கள் இங்கு இருந்தாலும், எங்கள் உயிர் எப்பொழுதும் எங்கள் நாட்டில்தான். 'எப்ப திரும்பிவருவோம்?' என்ற ஏக்கம்தான் எங்கள் மனதில்.

முரசு இல: 276ல் 4ம் பக்கத்தில் மேல் இடது மூலையில் 'இடம்மாறும் மக்கள்' என்ற செய்தியுடன் ஒரு தாய் தனது கைக்குழந்தையுடன் நடந்து வரும் படம் போட்டிருந்தீர்கள். இந்தத் தாயின் விலாசம் அல்லது ஏதாவது ஒன்று உங்களால் தரமுடியுமா? நாங்கள் ஏதாவது ஒரு விதத்தில் அவருக்கு உதவி செய்யலாம். இது நான் உங்களிடம் கேட்கும் ஒரு உதவி. இந்தப் படங்களைப் பார்த்து மிகவும் வேதனையுடன் தான் இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகின்றேன். தயவுசெய்து நீங்கள் தவறாக நினைக்கவேண்டாம். 1985ல் திருகோணமலை வவுனியா பாதையில் வைத்து பஸ்ஸில் 15, 20, பேர் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டார்கள். அதில் எனது தாயையும் எனது உற்ற ஒரு நண்பனையும் இழந்தவன் நான்.

அன்புடன் வாசகர், நியூயோர்க், அமெரிக்கா.

*அன்பின் முரசே!*

முரசில் அதி பாசம் கொண்ட வாசர்களில் நானும் ஒருத்தி. அதிலும் நீ சுமந்து வரும் கதையம்சமான 'முள்நிலவு' கதையினை படிப்பதில் மிகவும் பிரியம் கொண்டவள் நான். இந்தவாரம் கதையினைப் படித்துவிட்டு சற்று அதிர்ச்சியும், ஏமாற்றமும் அடைந்தேன். ஏனெனில் கிருஷ்ணகாந்தைப் போல் ஓர் ஆணையும் இக்கதையின் முடிவையும் நான் எதிர்பார்க்கவில்லை. கதையை எழுதிய ராஜேஸ்குமாருக்கு எனது வாழ்த்துக்கள். இருந்தும் 'முள்நிலவை நீளவிட்டு முடிவில் கிருஷ்ணகாந்தையும், நிலாவையும் ஒன்று சேரவிட்டிருக்கலாமே' என்று எனக்கு கவலையாக இருக்கிறது.

ரி.திலகா, ஜிந்துப்பிட்டி.

முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் கடல் கடந்து சென்று கதைகள் பல எழுதிவரும் யோகனின் கதைகள். உண்மைகளைத் தொடுகின்றன. அவருக்கு எனது பாராட்டுக்கள்.

ம.சுதா, கிருஷ்ணன் கோவில்வீதி, வந்தாறுமூலை.

'முள்நிலவு' கதாநாயகி நிலாவுக்கு இதயத்தில் இடம் ஒதுக்கியே தீர வேண்டும் என குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால் நாங்கள் இதயத்தையே நிலாவுக்கு ஒதுக்கிவிட்டோம்.

த.சகிலா, பரிமளா, சாவற்கட்டு, மன்னார்.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:-1772, கொழும்பு.**
**பக்ஸ்- 074-513266**

### எது உண்மையான பேச்சு?

'இந்த நாட்டுக்கு சொந்தமில்லாத சிறுபான்மையினர்' என்று ஜனாதிபதி கூறியதாக அரச தொலைக்காட்சி செய்தியறிக்கையில் தெரிவித்தது. அது தவறானால் குறிப்பிட்ட செய்தி தயாரித்தவர் தூக்கி எறியப்பட்டிருப்பார். மறுப்பு அறிக்கையும் வந்திருக்கும். ஏன் இரண்டும் நடக்கவில்லை? இவ்வாறிருக்க 'இலங்கை பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமல்ல' என்று இங்கு ஒரு நிகழ்ச்சியில் ஜனாதிபதி கூறியதாக ஒரு பத்திரிகையில் செய்தி கண்டோம். பேச்சுக்கள் பலவிதம். எது உண்மையான பேச்சு?

ஜெ.தமாசேகரம், மட்டக்களப்பு.

### குத்திய முள்

'முள் நிலவு' என்ற பெயர் வைத்தது பொருத்தம்தான். எங்கள் மனதை கடைசி அத்தியாயம் குத்திக் கிழித்துவிட்டதே. ராஜேஸ்குமார் நெகிழவைத்து விட்டார்.

செல்வி ஆ.சியாமளா,
கந்தப்பளை.




ராஜேஸ்குமாரின் கதை- அதுவும் முரசில் இடம்பெறும் கதை- என்றால் தரம் பற்றி கேட்கவா வேண்டும்? 'முள்நிலவு' சூப்பரப்பா!

எஸ்.பர்சானா, கல்கிசை.

எதிர்பாராத முடிவைத் தருவதில் வல்லவரான ராஜேஸ்குமார் 'முள் நிலவு'லும் அப்படி ஒரு முடிவைத் தந்து எங்கள் குடும்பம் முழுவதையும் சோகத்தில் ஆழ்த்திவிட்டார்.

ஆர்.தவலோகநாயகி, மட்டக்களப்பு.

முரசின் வாசகர்களுள் நானும் ஒருவன். முரசை ஒவ்வொரு வாரமும் எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்க வேண்டிய நிலையிலும், இவ்விடம் காலம் தாழ்த்தியே முரசு கிடைக்கின்றது. அதுபோக 30/= முரசின் விலை. எது எப்படியிருந்தாலும் விடமாட்டேன். 'இடி அமீனின்' தொடரும் 'சதாமின்' தொடரும் அசத்தல். 'இலக்கிய நயம்' படு தூள். அது தரும் ரசிகனுக்கு எனது நன்றிகள்.

சி.வசீகரன், புதுக்குடியிருப்பு.

*அன்பின் முரசே!*

நீ தாங்கி வந்த 'முள் நிலவு' தரம் நிறைந்த தொடர். 'அரசியல் தொடர்' மூலம் பல உண்மைகளை வெளிப்படுத்தும் அற்புதன் அவர்களைப் பாராட்டலாம். முரசே. நீ இலங்கையில் மட்டுமன்றி ஐரோப்பாவிலும் வீறு நடைபோடுகின்றாய். உனது வரவை எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்.

ப.ம.சீலன், சுவிஸ்.

### வாக்கெடுப்பு நடத்தலாம்

'இனப் போராக மாறிவரும் கொடும் போர்' -இராஜதந்திரியார் அலசல் பிரமாதம். அதைவிடப் பிரமாதம், 'அமிரின் வாளும், பிரபாவின் ஹெலியும்'. புலிகளை தமிழ் பேசும் மக்கள் தங்கள் தேசியத் தலைமை யாக அங்கீகரித்துள்ளனரா? இல்லையா? என்பதை கண்டறிய பொது வாக்கெடுப்பு ஒன்றை வடக்கு-கிழக்கில் அரசு நடத்திப் பார்க்கலாமே!.

சி.ரவிமாறன், கொழும்பு-09.

### தேயாத நிலா

அழ வைத்துவிட்டாள் நிலா. ஒரு வாரம்கூட தவறவிடாமல் நிலாவுடன் உருகிப்போனோம். ராஜேஸ்குமாரின் நிலா தேயாத நிலா. எம் மனதை விட்டு நீங்காத நிலா.

திருமதி இ.தர்சிகா, கொழும்பு-11.

நான் லெபனான் வந்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. ஒவ்வொரு சனிக்கிழமையும் என் கையில் 'தினமுரசு' கிடைப்பதை இட்டு மிக மகிழ்ச்சி. தமிழ் பத்திரிகை என்றால் இங்கு முரசுதான் பெயர். நான் இலங்கையில் இருக்கும் போது தொடர்ந்து முரசை வியாழன் தோறும் வாங்கிப்பார்ப்பேன். இங்கு வந்தும் தொடர்ச்சியாக முரசைப் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

இ.சந்திரகுமார், லெபனான்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# "விநியோகப் பாதைகளை சீர்குலைப்போம்!"

## பாதுகாப்பு தரப்புக்கு புலிகள் எச்சரிக்கை!

கிளிநொச்சி சமரை அடுத்து யாழ் குடாநாட்டுக்குள் உள்ள படைநிலைகள் தாக்கப்படலாம் என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அது உண்மைதான் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ் குடாநாட்டில் புலிகளால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"யாழ் குடாநாட்டில் உள்ள படையினர் மீளவழியில்லாதபடி அவர்களுக்குரிய இராணுவ விநியோகப் பாதைகள் சீர்குலைக்கப்படும். தாக்குதல்களும் தொடுக்கப்படும்!" என்று புலிகள் தமது பிரசுரத்தில் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளனர்.

படை முகாம்கள் அருகே உள்ள குடியிருப்புக்களில் இருக்க வேண்டாம் என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சியை விட்டு ஒட்டுமொத்த

(நமது நிருபர்)

மாக வெளியேறுமாறு புலிகள் சுவரொட்டி ஒட்டியதாகச் செய்திகள் பரவியிருந்தன.

ஆனால் முகாம்களுக்கு அருகில் உள்ளோரை மட்டுமே விலகியிருக்குமாறு புலிகள் கூறியுள்ளனர்.

தென்மராட்சியில் மட்டுமன்றி யாழ் குடா நாடெங்கும் உள்ளோருக்கு பொதுவானதாகவே புலிகளால் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

புலிகளது பிரசுரம் பற்றிய தகவல் அறிந்த படையினர் தேடுதல் நடவடிக்கையை மேலும் முடுக்கிவிட்டுள்ளனர்.

### ஒத்திகை

வடகடலில் கடற்புலிகள் தாக்குதல் ஒத்திகைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

கிளிநொச்சி சமரில் கடற்புலிகள் தரைச் சண்டைகளிலும் பங்குகொண்டனர்.

அதன்பின்னரே கடற் சண்டைக்கான ஒத்திகைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ■

# தலைநகரில் 'ஓயாத அலைகள்'

## ஆங்கில பத்திரிகை ஆச்சரியம்

கிளிநொச்சித் தாக்குதல் குறித்து புலிகள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் வீடியோப் படங்கள் தயாரித்து கொழும்பில் செய்தியாளர்கள், பிரமுகர்கள், தூதரகங்கள் ஆகியவற்றுக்குப் பிரதிகளை அனுப்பிவைத்துள்ளனர். இவற்றிலிருந்து பிரதி பண்ணப்பட்ட படங்களும் சில பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

யுத்த காலச் செய்திகளை வெளியிடுவதன் மூலம் அரசாங்கத்தின் இரகசியங்கள் எதிரிகளுக்கு (எல்.ரி.ரி.ஈ.யினருக்கு) அம்பலமாக்கப்பட்டு விடுகின்றன. இதனால்தான் இராணுவச் செய்தித்தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று இராணுவத்தரப்புக் கூறுகிறது.

அரச துருப்புகள் கிளிநொச்சி-பரந்தன் சமரில் பட்டபாடுகளை அம்பலப்படுத்தும் புலிகளின் வீடியோ விவரணம் பட்டவர்த்தனமாகப் பகிரங்கப்படுத்திவிட்டது.

வீதித்தடைகள், அரச மற்றும் இராணுவ உளவுத்துறைகளால்- மேற்படி வீடியோக்கள் தலைநகருக்குள் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்பட்டதனைத் தடுக்க முடியவில்லை. புலிகளின் தற்கொலைப்படைகள் ஊடுருவுவதையும், ஆயுதத்தளபாடங்கள் தலைநகருக்குள் கொண்டு வந்து குவிக்கப்படுவதையும் கண்டறிந்து தடுக்க எவ்வாறு சாத்தியப்படும்? இவ்வாறு 'சண்டே ரைம்ஸ்' கேள்வி எழுப்பியுள்ளது.

# சிலுவையூன்றா சவச்சாலை

## செம்மணி பற்றி புலிகள்

செம்மணியை சிலுவையூன்றாத சவச்சாலை என்று புலிகள் விவரித்துள்ளனர். செம்மணி என்ற தலைப்போடு கவிதை நூல் ஒன்றும் புலிகளால் வெளியிடப்பட்டுள்ளது.

'அமைதி நகரின் மன்னம்பெரிகள்', 'சந்ததி அழிக்கும் தந்திரம்', 'கருவறையில் இருந்து புதைகுழிக்கு' போன்ற பல கவிதைகள் அதில் இடம்பெற்றுள்ளன.

செம்மணி புதைகுழி விவகாரத்தில் மனித உரிமை அமைப்புக்கள் காட்டிய அக்கறையை தமிழ்க் குழுக்கள் காண்பிக்கவில்லை. சந்திரிக்கா அரசுக்கு முட்டுக்கொடுத்துவரும் தமிழ்க் குழுக்கள் நினைத்திருந்தால் இந்த புதைகுழி விவகாரத்தை வைத்தே தமிழினப் படுகொலையை சட்ட பூர்வமாக சர்வதேச சமூகம் முன்பாக அம்பலப்படுத்தியிருக்கலாம் என்றும் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். ■

# தோல்விக்குக் காரணம் அரசியல்வாதிகள்

## படைவட்டாரம் குற்றச்சாட்டு

கடந்த 18 மாதங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் ஜெயசிக்குறுய் நடவடிக்கை எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாமற்போனமைக்குக்காரணம், நடைமுறை சாத்தியமற்ற நிலையில் போடப்பட்ட திட்டங்களாகும். அனுபவம் பெற்ற இராணுவ ரீதியான திட்டங்கள் வகுக்கப்படாமல், அரசியல்வாதிகளால்-அரசியல் லாபம் கருதி மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் வெற்றி பெற முடியவில்லை, என்ற கருத்தை சில இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

"இதுவரை விட்ட தவறுகளை உணர்ந்து முப்படைகளுக்கும் தலைவராகவும் பாதுகாப்பு அமைச்சராகவுமுள்ள ஜனாதிபதி, சீரிய நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால், ஏற்படப்போகும் சீரழிவு படுமோசமாக இருக்கப்போகிறது. இன்றுள்ள நிலையில் இதனை நாம் எதிர்கொள்ளும் நிலையிலில்லை!" என்று தன்னை வெளிப்படுத்த விரும்பாத உயர்தர இராணுவ அதிகாரி கருத்து வெளியிட்டார்.

மற்றுமொரு-அதே வரிசை அதிகாரி இவ்வாறு கூறுகிறார்: "எமது அதிகாரிகளும் படையினரும் மதிப்பிடற்கரிய தமது உயிரையும் தங்கள் அவயவங்களையும் தியாகம் செய்துள்ளனர். ஆகவே அரசியல் தலைவர்கள் இதற்கான மதிப்புவாய்ந்த நன்றியறிதலை உரியமுறையில்-வெளிப்படுத்தட்டும் என்றுதான் நாம் கோருகிறோம்!" என்று அவர் கூறினார்.

# வர்த்தக சம்மேளன வேண்டுகோள்

## மீறிவிட்டாராம் ஜனாதிபதி

வர்த்தக சம்மேளனப் பிரமுகர்களை அலரி மாளிகையில் அக்டோபர் 20ம் திகதி மாலை 4.00 மணிக்கு ஜனாதிபதி சந்திப்பதாக ஏற்பாடாகி இருந்தது. அமைச்சர் பீரிஸ் உட்பட ஏனையோர் குறிப்பிட்ட நேரத்தில் அலரி மாளிகையை வந்தடைந்த போதும் ஜனாதிபதி சந்திரிக்கா ஒன்றரை மணி நேரம் தாமதித்தே கூட்டத்துக்கு வந்து சேர்ந்தார். தான் கூட்டத்துக்கு வரத் தாமதமானமைக்குக் காரணம்- தனது செயலாளர், கூட்டத்தைப் பற்றித் தனக்கு நினைவூட்டத் தவறிவிட்டார், என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

"இன்றுள்ள நிலையில், அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுப் பொதியை பாராளுமன்றத்தில் சட்டமாக்குவதற்கு 16 வாக்குகள் தேவைப்படும். இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பு அவசியம் தேவைப்படும்!" என்று ஜனாதிபதி கூறினார். அவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்தாசை தேவைப்படுமானால் அக்கட்சியை விமர்ச்சிப்பதை ஆளும் கட்சியினர் கைவிட வேண்டும் என்று வர்த்தக சம்மேளன பிரதிநிதிகள் வலியுறுத்தினர். ஜனாதிபதி, தமது கட்சி மேற்கொண்டு எதிர்க்கட்சியை விமர்சிப்பதைத் தவிர்க்க முயற்சிக்கும் என்றார்.

அடுத்த நாள் 21ம் திகதியன்று மொறட்டுவையில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிக்கா, ஐக்கிய தேசியக் கட்சியைக் கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார். ஐ.தே. கட்சியை மேற்கொண்டு விமர்சிப்பதில்லை என்று வாக்களித்து 24 மணி நேரத்துள் ஜனாதிபதி, தான் அளித்த வாக்குறுதியை மீறியமை வர்த்தகப் பிரமுகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ●

# அரச வானொலிச் செய்தியும் படை வீரர்களின் பேட்டியும்

அண்மையில் புலிகளால் விடுவிக்கப்பட்ட 6 படையினர் கூறியதாக செய்தி ஊடகங்கள் வெளியிட்ட கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக இருக்கின்றன.

செவ்வாய்க்கிழமை (27ம் திகதி) காலை 6.30 இலங்கை வானொலி தமிழ்ச் செய்தி அறிக்கையில், தங்களை புலிகள் கொடுமைப்படுத்தியதாக படையினர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. மாங்குளத்தை தாங்கள் மரணமானபோதும் அரசப் படைகளிடம் பறிகொடுக்க மாட்டோம் என்று புலிகள் சபத மெடுத்ததாகவும் கூறினர். புலிப்படையில் 11 முதல் 13வயது வரையிலான ஆண்,பெண் சிறுவர்கள் இருப்பதாகவும் வேறு பல கருத்துக்களையும் அவர்கள் வெளியிட்டதாகச் செய்தியில் கூறப்பட்டது.

அதே நாளன்று, இலங்கை வானொலிச் செய்தி அறிக்கை முடிவடைந்த சில நிமிடங்களில் 6-45க்கு சூரியன் எஃப்.எம். செய்தி அறிக்கையில், தாங்கள் புலிகளால் மனிதாபிமான அடிப்படையில், கௌரவமாக நடத்தப்பட்டதாக, விடுதலையான படையினர் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலும், புலிகள் தம்மை நன்கு நடத்தியதாக கூறியது மட்டுமல்லாமல், படைமுகாமில் பீதியோடு இருந்ததாகவும், புலிகளது முகாமில் பயமின்றி இருந்ததாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அரச பிரசார சாதனங்கள், படையினரை புலிகள் விடுவிக்கும் செயற்பாட்டை குழப்பும் விதமாக திரிபுபடுத்தப்பட்ட செய்திகளை வெளியிட்டுள்ளதாக அதிருப்திகள் எழுந்துள்ளன.

# 'வீர முழக்கம்' முடிவுற்றது! 7 புலிகள் பலி!

அக்கரைப்பற்று- கஞ்சிகுடிச்ச ஆறு காட்டுப் பகுதியில் புலிகளின் 24 தளமுகாமைத் தாக்கியழிப்பதற்காக 'வீரமுழக்கம்' (வீர கிகும்) என்னும் படை நகர்வொன்றை ஆரம்பித்த விசேட அதிரடிப்படையினர் மூன்றாவது நாளில்- 24.10.98 அன்று மீண்டும் தமது பழைய நிலைகளுக்குத் திரும்பி விட்டனர்.

இந் நடவடிக்கையால் 7 புலிகள் கொல்லப்பட்டனர். புலிகளின் சடலங்களை வழி நெடுகிலும் ஊர்மக்களுக்குக் காட்டியபின் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு வந்து வைத்திருந்தனராம்.

கொல்லப்பட்டவர்களில் அப்பகுதிப் பிஸ்டல் குழுத் தலைவர் தாஸ் என்பவரும் அடங்குகிறார் என்று படையினர் கூறுகின்றனர்.

இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் புலிகள் இருவர் படையினரிடம் சரணடைந்திருந்தார்கள். அவ்விருவரும் கொடுத்த தகவலின் பேரிலும், வழிகாட்டலிலுமே படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக மேலும் கூறப்படுகிறது.

கிழக்கில் பாரிய பதிலடித் தாக்குதல் ஒன்றுக்குப் புலிகள் தயாராகக்கூடும் என்ற பரவலான ஊகங்கள் அடிபடுகின்றன. பாரிய அழிவை ஏற்படுத்தி படையினருக்குப் பின்னடைவை உண்டாக்க புலிகள் திட்டமிடுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

செங்கலடியில் பொதுமக்கள்போல் பாசாங்கு செய்து வந்து புளொட் இயக்கத்

## தமிழ்க் கட்சி உறுப்பினர்களில் சந்தேகம்

தினரைச் சுட வந்த புலி உறுப்பினர் சுடப்பட்டார். அவரது ஆயுதம் கைப்பற்றப்பட்டது. சடலம் ச.செ.சி. சங்கத்தினூடாகப் புலிகளிடம் கையளிக்கப்பட்டது.

### ஓட்டம்

இது இவ்வாறிருக்க செங்கலடியிலுள்ள ரெலோ முகாமில் இருந்த ரெலோ உறுப்பினர் இருவர் T-56 ரக துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு புலிகளிடம் ஓடி விட்டனர். இவர்கள் ரெலோவில் இருந்தபோது கொம்மாதுறை இராணுவ முகாமுக்குள்ளும் நன்கு ஊடாடி வேண்டிய விவரங்களைச் சேகரித்துக் கொண்டே சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இதற்கு முன்னரும் செங்கலடியிலுள்ள ரெலோ மற்றும் புளொட் முகாம்களிலிருந்த அவ்வியக்க உறுப்பினர்கள் சிலர் அவ்வப் போது ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு புலிகளிடம் தப்பியோடியுள்ளனர் இதனால் படையினரின் கணிப்பிலும் அவ்வியக்க உயர் மட்டத்திலும் செங்கலடியிலுள்ள உறுப்பினர்கள் பற்றிய சந்தேகம் நிலவுகிறதாம். விசுவாசமான உறுப்பினர்கள் போலவே நீண்டகாலம் கூடத் திரிகிறார்கள். பின்னர் ஆயுதங்களையும் தூக்கிக் கொண்டு புலிகளிடம் ஓடுகிறார்கள். இதனை எண்ணி சந்தேகம் எழுந்துள்ளதாம். எந்த அமைப்பில் யார் இருக்கிறார்கள் என்பது தெரியாமல் தலையைப் பிய்க்கிறார்களாம். ●

# அஞ்சி நடுங்கவைத்த மின்னலும் பேரிடியும்!

## ஒரு மணித்தியாலம் இடைவிடாத போராட்டம்!

(ஏறாவூர் நிருபர்)

நீண்ட நாள் அகோர வரட்சிக்குப்பின் மட்டக்களப்பு மாவட்டத்தின் குறுகிய சில பகுதிகளில் நினையாப் பிரகாரமாக பலத்த மின்னல் இடி முழக்கத்துடன் பெய்த மழையைப் பற்றி பெரிதும் ஆச்சரியமாகப் பேசப்படுகிறது.

20.10.98 அன்றைய தினம் இரவு சுமார் ஒன்றரை மணித்தியாலம் ஒரு கணப்பொழுது கூட இடைவெளி இல்லாது கண்ணைப் பறிக்கும் மின்னலுடன் பேரிடி முழக்கம் காதைப் பிளந்து குலை நடுங்க வைத்தது. சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் பயந்து நடுங்கி அடங்கி ஒடுங்கி ஓலமிட்டு அழுதனர். பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டனர்.

அன்றையப் பேரிடி முழக்கத்தையும், மின்னலையும் பற்றி 75, 80 வயதைக் கடந்த முதியவர்கள் பலரும் தமது விசித்திரமான பேரதிர்ச்சி அனுபவத்தை வாய்விட்டுக் கூறினர். "எங்கள் அறிவுக்கெட்டிய காலந் தொடக்கம் இத்தகைய பயங்கரத்தை ஏற்படுத்திய பேரிடி முழக்கத்தையும் மின்னலையும் அனுபவப் பட்டதில்லை!" எனக்கூறினர். அன்றைய இரவுப் பொழுதை பெரும்பாலான முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் இறை தியானத்தில் கழித்ததாகத் தெரிவித்தனர்.

பாதுகாப்புப் படையினர் கூட அன்றைய இராப்பொழுதை இடி முழக்கத்தின் தாக்கத்தினால் சந்தேகத்துடன் கழித்ததாக மறுநாள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

ஏறாவூரையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலுமே மின்னல் இடிமுழக்கத்தின் தாக்கம் கடுமையாக இருந்தது. மைலம்பாவெளி மீள் குடியேற்றக் கிராமத்தைச் சேர்ந்த பிபிறேமாவதி (40) என்பவர் அதிர்ச்சியினால் மூர்ச்சித்து இறந்தார். மேலும் பல இடங்களில் மின்னல் தாக்கியபோதிலும் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை. அதிகமான குழந்தைகளும் முதியோரும் இடி முழக்கம் ஏற்படுத்திய தாக்கத்திலிருந்து இன்னமும் மீளவில்லை என்று கூறப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் மீள்குடியேற்றக் கிராமமான ஏறாவூர்-மீராகேணி, மட்டக்களப்பு-திருப்பெருந்துறை போன்ற இடங்களில் மின்னல் தாக்கியதில் 12, 40, 72 வயதுடைய மூவர் பலியாகினர். ●

# முஸ்லிம்களுக்கு புலிகள் அனுமதி

## நல்ல சகுனம் என்கிறார்கள் மக்கள்!

கிழக்கில் சமூக வன்முறைகளும், படுகொலைகளும் நடத்தப்பட்ட நாள் தொடக்கம் செய்கை பண்ணப்படாது கைவிடப்பட்டு தரிசு நிலங்களாகக் கிடக்கும் முஸ்லிம்களின் வயல் நிலங்களை மீண்டும் செய்கை பண்ணுவதற்குப் புலிகள் இயக்கத்தினர் இப்போது அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதி முஸ்லிம்கள் புலிகளின் வசமுள்ள தமது விவசாய நிலங்களைக் கைவிட்டிருந்தனர். தற்சமயம் புலிகளின் அனுமதியின் பேரில் சுமார் 2000 ஏக்கர் வயல் நிலங்கள் மீண்டும் செய்கை பண்ணப்படவிருக்கின்றன என்று மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் சொன்னார்.

கிழக்கில் முஸ்லிம்கள் கணிசமானோர் தமது இருப்பிடங்களையும், தொழிற்துறைகளையும் கைவிட்டு இடம்பெயர்ந்திருப்பதால் பல வகையான கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள். ஆதலினால் அவர்கள் விவசாயச் செய்கையை மேற்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று ஆரம்பத்தில் புலிகளுக்கு எடுத்துக் கூறியிருந்த போதிலும் யுத்த சூழ் நிலைகளைக் காரணம் காட்டி புலிகள் மறுத்து வந்துள்ளனர்.

எனினும் தொடர்ந்து முன்னெடுத்த பகீரதப் பிரயத்தனங்களின் விளைவாக இது சாத்தியமாகியுள்ளதென்று அவர் மேலும் சொன்னார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்புணர்வுகளை நீக்கும் வண்ணம் புலிகள் ஆக்கபூர்வமாகச் செயற்படுவது நல்ல சகுனம் என்று தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்தை விரும்பும் பொதுமக்கள் கூறுகிறார்கள். ●

# முகாமுக்கு வேலைக்கு அழைப்பு

## மறுத்தால் தொழிலுக்குத் தடை

மட்டக்களப்பு விமான நிலையத்தைச் சூழவுள்ள வாவியில் மீன் பிடிப்பதற்கான அனுமதியை அங்குள்ள விமானப்படையினர் இதுவரை திருப்பெருந்துறை மீள்குடியேற்றக் கிராமவாசிகள் சிலருக்கு வழங்கிவந்தனர்.

ஆயினும் இந்த அனுமதியைப் பெறுவதற்காக விமானப்படையினர் கூப்பிடும் போதெல்லாம் அந்த முகாமுக்குச் சென்று ஊழியம் செய்ய வேண்டும். குப்பை கூழங்களை அள்ளி கழுவித் துப்புரவு செய்தல், மரங்கள் வெட்டுதல், காவல் அரண்களை அமைத்தல், மண்மூட்டைகளை அடுக்குதல், பொருட்களை ஏற்றி இறக்குதல், முகாமைச் சுற்றி முட்கம்பி போடுதல், கண்ணிவெடிகள் புதைத்தலும், அகற்றுதலும் போன்ற இன்னோரன்ன பல வேலைகளுக்கு அவர்களைப் பயன்படுத்துவதுண்டாம். இவற்றுக்காக கூலியும் வழங்கப்படுவதில்லை.

அத்துடன் இரவெல்லாம் வாவியில் கிடந்து மீன்பிடித்துக் கொண்டு வரும்போது தமக்கு விரும்பிய மீனையும் இலவசமாக (அபகரிப்பு) எடுத்துக் கொள்வதுண்டாம்.

விமானப்படையினரால் அனுமதி வழங்கப்பட்டிருந்த மீனவரிற் பலர் சமீபத்தில் விமானப்படை முகாமுக்கு வேலைக்குச் செல்லாததால் மீன்பிடிப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் மீன்பிடியை நம்பியிருந்த ஏராளமான குடும்பங்கள் வேறு வழியின்றித் திண்டாடுகின்றன.

1985ம் ஆண்டு விமான நிலைய விஸ்தரிப்புக் காரணமாக இடம்பெயர்ந்தவர்களும் அம்பாறை- சம்மாந்துறையில் 1990ஆம் ஆண்டுக் கலகத்தின்போது இடம்பெயர்ந்தவர்களுமாக சுமார் 300 தமிழ்க் குடும்பங்கள் திருப்பெருந்துறையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். ●

# இளம் பெண்களை வைத்து விபச்சாரம்

## ஊர் ஒன்றுபட்டு தர்ம அடி!

(திருமலை நிருபர்)

ஒழுக்கக் கேடான விஷயங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகக் கூறப்படும் விடுதியொன்று பொதுமக்களின் நேரடிச் சீற்றத்துக்குள்ளான சம்பவம் இடம் பெற்றுள்ளது.

திருமலை உவர்மலை கீழ்வீதியில் அமைந்துள்ள இந்த விடுதியில் நீண்டகாலமாக விபச்சாரம் இடம்பெற்று வந்ததாகவும் உரிய இடங்களில் பல தடவைகள் முறையிட்டும் எவரும் இதனைக் கவனிக்க முன்வராதபடியால்தான் தாங்களே கவனிக்க வேண்டி ஏற்பட்டதாக இப்பகுதியிற் குடியிருப்போர் 'முரசு'க்குத் தெரிவித்தனர்.

தீபாவளியன்று அதிகாலை இவ்விடுதியில் விபச்சாரத்துக்காகத் தங்கியிருந்த இரு இளம் பெண்கள் அயல் இளைஞர்களால் பச்சைமட்டை கொண்டு தாக்கப்பட்டுள்ளார்கள். நிர்வாகமும் எச்சரிக்கப்பட்டது. எனினும் இது தொடர்ந்து இடம்பெற்றதால் வெள்ளி இரவு விடுதிக்குள் நுழைந்த இளைஞர் கோஷ்டி ஏழு பெண்களையும் அவர்களோடிருந்த ஆண்களையும் தாக்கி துரத்திவிட்டனர். நிர்வாகத்தினர் சகலரும் தலைதெறிக்க ஓடிவிடவே அங்குள்ள கதிரை மேசைகள் சிலவற்றை உடைத்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

ஞாயிறு இரவும் ஒரு பெண் கட்டி வைக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இளைஞர்களின் இந்தச் செய்கை ஊர்மக்கள் மத்தியில்- குறிப்பாக குடும்பத் தலைவிகள் மத்தியில்- நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது. ■



படிப்பகம்

www.padippakam.com

## "செய்தித் தணிக்கையால் பலன் இல்லை!"
## வெளிநாட்டமைச்சர் தெரிவிப்பு!

செய்தித் தணிக்கையால் எத்தகைய நன்மையும் கிடைக்கவில்லை என்று வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் தெரிவித்திருக்கிறார். இலண்டன் சென்றிருந்தபோது அவர் பி.பி.சி. ஆங்கில சேவைக்களித்த பேட்டியின்போதே இக் கருத்தை வெளியிட்டார்.

"எனது தனிப்பட்ட அபிப்பிராயப்படி செய்தித் தணிக்கை எங்களுக்கு எத்தகைய பயனையும் அளிக்கவில்லை. ஆகவே வெகுச்சீக்கிரத்தில் தணிக்கையை நீக்கிவிட வேண்டும்." என்று தெளிவாகக் கூறியிருக்கிறார். "செய்தியாளர்கள் தாங்களாகவே போர்முனை சென்று தகவல்களை அறிந்துவர அனுமதி கோருகிறார்கள். நாங்கள் வெளியிடும் தகவல்கள் உண்மை என்பதனால், அதே உண்மைகளைத் தாங்களும் கண்டறிய விரும்புகிறார்கள். ஆகவே விரைவில் இத்தணிக்கையை நீக்கவேண்டி வரும்!" என்றார் அமைச்சர்.

"நன்கு பயிற்றப்பட்ட ஒரு தேசிய இராணுவத்துக்கு இத்தகைய பெரும் அழிவினை ஒரு கெரில்லாப் படையால் எவ்வாறு ஏற்படுத்த முடிகிறது?" என்று கேட்ட கேள்விக்கு, அமைச்சர் பதிலளிக்கையில், "இத்தகைய நிகழ்வுகள் வியட்நாம் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலும் நடைபெற்றுள்ளது" என்று கூறினார்.

"பயிற்றப்பட்ட மரபுமுறை இராணுவத்தைப் பார்க்கிலும் கெரில்லாப்படையினருக்கு பல சாதகமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. அவர்கள் பதுங்கியிருந்து தாக்கிவிட்டு ஓடி ஒளிந்து விடுவார்கள்; பின்னர் ஒன்று சேர்ந்து தாக்குவார்கள். சில சந்தர்ப்பங்களில் பின்புறமாக வந்தோ, சற்றும் எதிர்பாராத நிலையிலோ திடீரெனத் தாக்குவார்கள். மரபுரீதியான படைகளால் இது சாத்தியமில்லை. எதையும் திட்டமிட்டு, பலருடைய ஆலோசனைகளைப் பெற்றுத்தான் போர்முனைக்குச் செல்லுவார்கள்!" என்றார்.

"இராணுவத்துக்குப் புதியவர்களைச் சேர்ப்பது மிகக் கடினமாக இருக்கிறதா?" என்றும் ஒரு வினா விடுக்கப்பட்டது. காலத்துக்குக் காலம் அத்தகைய சூழ்நிலை எழவே செய்யும் என்று கூறிய அமைச்சர், "இன்னும் 6 மாதங்களில் இன்றுள்ள நிலை முற்றாக மாற்றமடைந்து விடும்!" என்று தெரிவித்தார்.

## கசிப்பு வியாபாரிகளால் தொல்லை

சட்டவிரோதக் கசிப்பு வியாபாரிகளால் பெரும் தொல்லைகள் ஏற்படுவதாக மூதூர் மக்கள் முரசுக்குத் தெரிவிக்கிறார்கள்.

பிரதேசசபை, வைத்தியசாலை, கல்வி அலுவலகம், தபால் அலுவலகம் போன்ற பிரதான காரியாலயங்கள் அமைந்துள்ள இடத்தின் நடுவிலேயே கசிப்பு வியாபார நிலையங்களும் அமைந்துள்ளதால் மேற்படி அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்கள் பெரிதும் சங்கடப்படுவதாக மக்கள் கூறுகிறார்கள்.

பொதுக் காணிகளில் அத்துமீறிக் குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே கசிப்பு வியாபாரத்தில் கொடி கட்டிப் பறப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதான வீதியில் இவர்களது கசிப்பு நிலையங்கள் அமைந்துள்ளதால் இவர்களின் வாடிக்கையாளர்கள் அரை நிர்வாண, முக்கால் நிர்வாணக் கோலங்களில் நின்று தகாத வார்த்தைகள் பேசிப் போவோர் வருவோருக்கு இடைஞ்சல் உண்டு பண்ணுவதாக அறியப்படுகிறது.

படைத்தரப்பும் இக் கசிப்பு வியாபாரிகளின் கொட்டத்தைக் கண்டும் காணாமல் இருப்பது ஏன் எனப் பொதுமக்கள் விசனத்துடன் கேட்கிறார்கள்.

இதேவேளை திருக்கோணமலை நகரிலும் சட்டவிரோத கசிப்பு விற்பனை நிலையங்கள், கள் விற்பனை நிலையங்கள், சாராய விற்பனை நிலையங்கள் என்பவை பெருகி வருவதோடு போதை வஸ்துப் பாவனையாளர்களும் பெருகி வருவதாக ஊர்ப் பெரியவர்கள் கவலைப்படுகிறார்கள்.

## "மாணவர்கள் பூங்கன்று போன்றவர்கள்!"

(திருமலை நிருபர்)

"மாணவர்கள் பூங்கன்றுகளைப் போன்றவர்கள். ஆசிரியர்கள் என்ற தோட்டக்காரர்கள் அவர்களை நல்ல முறையில் பேணிக்காத்து வர வேண்டும். அவர்களுக்குப் பிடித்த துறைகளில் அவர்களை ஊக்குவித்து, உயர்ந்த பயன்களைப் பெறவேண்டும். பெற்றோர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நல்ல மாணவர்களே நாளைய நல்ல பிரஜைகளாகி எமக்கு உயர்வைத் தேடித் தருவார்கள்."

இவ்வாறு ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கோணேஸ்வரா வித்தியாலய முன்னைநாள் அதிபர் திரு.க.வேலுப்பிள்ளை குறிப்பிட்டார்.

இப்பரிசளிப்பு விழா கல்லூரித் திறந்த வெளியரங்கில் இரண்டு நாட்கள் நடைபெற்றன. 14,15ம் திகதிகளில் நடைபெற்ற இவ்விழாவின் முதல்நாள் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் நிகழ்ச்சியாகவும் இரண்டாம் நாள் இடை நிலை, கல்லூரி நிலை மாணவர்களின் நிகழ்ச்சியாகவும் நடைபெற்றன.

முதலாம் நாள் நிகழ்ச்சிக்கு மாகாணக் காணி ஆணையாளர் திரு.சொ.அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகவும், திரு.வேலுப்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் பிரதம விருந்தினராகவும் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.க.தங்கராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இரண்டு நாள் நிகழ்ச்சிகளுக்கும் கல்லூரி அதிபர் சி. தண்டாயுதபாணி தலைமை தாங்கினார்.

மூன்று நாட்கள் சித்திரக் கண்காட்சியும் இடம்பெற்றது. கண்காட்சியை கல்விப்பணிப்பாளர் திரு.சி. கமலநாதன் திறந்துவைத்தார்.

## தொழில் நுட்ப பயிற்சி நெறிகளுக்கான பிரவேசம்

(காரைதீவு நிருபர்)

சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் 1999ஆம் கழக ஆண்டிற்கான பயிற்சி நெறிகளில் சேர்ந்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன. விண்ணப்ப முடிவுத் திகதி 06.11.1998 ஆகும். விபரங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

பொதுக் கல்வியினைப் (ஜீ.சி.ஈ. சாதாரணம், உயர்தரம்) பூர்த்தி செய்த பின்னர், வேலை வாய்ப்பினைப் பெறாத, அல்லது பல்கலைக்கழகப் பிரவேசம் கிடைக்கப் பெறாத தமிழ் பேசும் இளைஞர்- யுவதிகள் தமக்குப் பொருத்தமானதொரு தொழில் நுட்பப் பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதற்கு இது அரிய சந்தர்ப்பமாகும்.

கணனிப் பயிற்சி நெறிகள், மின்சார இலத்திரவியல் பயிற்சி நெறிகள் போன்ற புதிய பயிற்சி நெறிகளோடு, 25 நவீன தொழில் பயிற்சி நெறிகளைப் பயிற்றுவதற்குரிய போதிய வளங்களோடு தற்போது கல்லூரி இருப்பதாக, சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ஜனாப் எம்.எச்.முஹம்மட் ஆதம் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் அதிபர் தெரிவிக்கையில், முழு நேரப் பயிற்சி நெறிக்காகத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்காக நாளாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவாக நாளொன்றுக்கு ரூபா 20 வீதம் மாதமொன்றுக்கு ரூபா 450க்கு மேற்படாத கொடுப்பனவு வழங்கப்படுவதோடு வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் முழு நேரப்பயிற்சி மாணவர்களுக்கு ரூபா 2500/- சகாயப்பணக் கொடுப்பனவும் வழங்கப்படும் என்று கூறினார்.

## முஸ்லிம் பகுதி வாகனங்கள் திடீர் சோதனை

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, கல்முனை, காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி போன்ற இடங்களிலிருந்து பொலன்னறுவை- கதுறுவெலைக்குச் செல்லும் முஸ்லிம்களின் பஸ்களும் அதில் பயணம் செய்வோரும் அங்கு வரும் படையினரின் விசேஷ குழு ஒன்றினால் சல்லடைபோட்டுச் சோதிக்கப்படுகின்றனர்.

கதுறுவெல நகருக்கு வருவோரும் அங்கிருந்து வேறிடம் செல்லும் பயணத்திற்காகக் காத்திருப்போரில் தமிழர்களும் முஸ்லிம்களும் மாத்திரம் அடையாளம் காணப்பட்டுத் துருவித் துருவி விசாரிக்கப்படுகின்றனர். அந்நகரத்தில் இவ்விதம் குறிப்பாகத் தமிழ் பேசுவோரை மாத்திரம் சோதனையிடுவதை அங்கு கூடி நிற்கும் பெரும்பான்மை இனத்தவர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள். இந்த சீருடையினரின் பின்னால் சிவிலுடையில் ஒரு குழுவினர் அவர்களுடனேயே உலாவருகின்றனர்.

இத்தனைக்கும் மத்தியில் கதுறுவெல நகரத்திலிருந்து சற்றுத் தூரத்திலுள்ள மாதுறு ஓயாச் சந்தியில் வைத்து மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து செல்லும் சகல வாகனங்களும் பயணிகள் இறக்கப்பட்ட நிலையில் வேறோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு வாகனங்களின் சகல பாகங்களும் சோதிக்கப்படுகின்றன.

பயணிகள் அனைவரும் அவ் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு வீடியோக் கமராவின் முன்னால் சோதனைக்குட்படுத்தப்படுகிறார்கள். ஆனால் சிங்களப் பிரதேசங்களில் இருந்து இச் சந்தியைக் கடக்கும் பஸ்கள் எவ்வித சோதனைக்கும் உட்படுத்தப்படுவதில்லை. இதுவே கடைசிச் சோதனை நிலையமாகவுமுள்ளது. தமிழ்ப் பகுதிகளிலிருந்து செல்லும் பஸ்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் இவ்விடத்தில் 24 மணி நேரம் தரித்து நிற்கவேண்டும்.


### காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P: 586218

### New Victors



பழுது பார்க்கும் இடம்
நியூ விக்ரஸ்
40 1/3, காலி வீதி,
(அலெக்சான்ற்ரா வீதிக்கு அருகில்)
வெள்ளவத்தை.

### எச்சரிக்கை

வீடியோ கசற்றின் நாடாக்கள் பங்கஸ் (Fungus) படிவுகள் மூலம் அழிந்துவிடும். காலம் தாழ்த்தாது நாடாக்களில் உள்ளதை V-CDயில் பதிவு செய்து 100 வருட உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளுங்கள். 2000ம் ஆண்டளவில் வீடியோ நாடாக்கள் பாவனையிலிருந்து விலகி V-CD பாவனைக்கு வந்துவிடும். காரணம் பல. அவற்றில் சில:

| விபரம். | வீடியோ -டெக் | வீடியோ C.D.தட்டு |
|---|---|---|
| சந்தைவிலை | அதிகம் | குறைவு |
| தரம் | 30% - 70% | 95% |
| பிரச்சனைகள் | அதிகம் | குறைவு |
| நாடாக்கள், தட்டு | வெட்டும்! கசங்கும் | --- |
| கணனியுடன் தொடர்பு | --- | கணனியில் (Computer) பார்க்கலாம் |

**STUDIO CHHAYA**
40 1/1, GALLE ROAD, (NEXT TO HONGKONG BANK)
WELLAWATTA, COLOMBO-06. T.P:- 594492

**வத்தளையில்** புதிய கணனி வகுப்புகள் (A.L முடித்த மாணவர்களுக்காகவும்) (Page Maker. Corel Draw. MS Excel. MS Access. MS Word. Word perfect. Lotus 1-2-3. dBase III+. Diploma in Desk Top Publishing. Diploma in Windows) திங்கள், புதன், வெள்ளி, ஆகிய நாட்களில் ஆரம்பமாகின்றன. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. அத்துடன் Type Setting செய்து கொடுக்கப்படும்.
D.S. COMPUTER STUDIES
6A, HEKITTA ROAD, WATTALA TEL: 075-349247

### சித்தர் மாந்திரீகம்

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடி யாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந் திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறிய லாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு 21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465. (பொலிஸ் நிலைய எதிரில்)

வியாழன் விடுமுறை

### மலையாள மாந்திரிகம்





மலையான மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இந் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

### 250 புலமைப்பரிசில்

முதன் முதலாக குழந்தைகளுக்கான கம்பியூட்டர் பாடத்தை புலமைப் பரிசில் மூலம் அறிமுகப்படுத்திய எமது நிறுவனம் உங்கள் குழந்தைகளும் ரூபா 5000 பெறுமதியான கீழ்கண்ட பாடநெறியை மீண்டும் புலமைப்பரிசில் மூலம் இலவசமாகக் கற்று, கம்பியூட்டர் உலகிற்கு காலடி எடுத்துவைக்க இன்னுமொரு சந்தர்ப்பத்தை பெருமையுடன் வழங்குகின்றோம்.

நான்கு தொகுதிகளாக ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது பாடநெறியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர்.

- Computer Technology
- Setting up Hardware, Software
- Database, Spread sheet, Graphics, Word Processing, Basic
- Internet & E-mail
- Application of Micro processer Basic technology in the field of music.

உங்கள் குழந்தைகளும் புலமைப்பரிசைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது- கீழ்கண்ட கூப்பனை நிரப்பி ரூபா 100 இனை காசுக்கட்டளையாக இணைத்து கீழ்கண்ட முகவரிக்கு 25.11.98 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி உங்கள் குழந்தையை புலமைப் பரீட்சையில் தோற்ற வாய்ப்பளியுங்கள். (காசுக்கட்டளை வெள்ளவத்தை தபாற் கந்தோருக்கு எடுக்கப்படல் வேண்டும்) பரீட்சைக்கான நேரம்-இடம்-திகதி பரீட்சார்த்திகளுக்கு பின்னர் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

**Metro Computer World**
17, Charlemont Road, Colombo-06.
T.P : 599479, 074-511164

Specimen form

Name :...........................................
Address :.......................... School :..........................
Class :.................. Sex :............... Phone :..........................

பாடநெறி முடிந்ததும் என்ன செய்வது என்ற கவலை வேண்டாம். உங்கள் குழந்தைகள் எமது கணனி நூலகத்தில் ஒரு உறுப்பினர்கள். எந்த நேரத்திலும் கணனியைப் பயன்படுத்த முடியும்.

குழந்தைகளின் கணனி உலகம்
**Metro Computer World**
இப்பாடநெறி ஆரம்பமாகும் திகதி **12.12.1998**


### மரண அறிவித்தலும் 31ம் நாள் நினைவஞ்சலியும்

## திருமதி இளையாச்சி ஐயாத்துரை

தோற்றம்:1930 மறைவு:-30.09.1998

காங்கேசன்துறை தையிட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் யாழ் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இளையாச்சி ஐயாத்துரை அவர்கள் 30.09.1998 அன்று அதிகாலை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. ஆறுமுகம் ஐயாத்துரை (யாழ் அம்பாள் கபே உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், அருளானந்தன் (யாழ்ப்பாணம்), கனடாவில் வசிப்பவர்களான சதானந்தன், தேவன் என அழைக்கப்படும் விவேகானந்தன், திலீபன் என அழைக்கப்படும் முருகானந்தன், ஜெயானந்தன், ஜெயந்தி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசம் மிகு தாயாரும், திரு. ஆசைப்பிள்ளை (முன்னாள் உப அதிபர் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி), காலம்சென்ற திருமதி. மீனாட்சி, திருமதி. லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பவானி, செல்வி, வனிதா, தர்ஷினி ஆகியோரின் அன்பு மாமியாரும் வித்யானி, ஆரா அமுதன், கீர்த்தன், மதுரா, அனிருத்தன், அஜனிகா, ஆர்வலன், ஆரணன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், சிவகுருநாதன்(சுவிஸ்), மங்கையற் கரசி(யாழ்ப்பாணம்) ஆகியோரின் சிறிய தாயாரும், திருமதி மணி நடராஜா (கனடா), காலஞ்சென்ற கந்தையா, நடராஜா, கமலராணி ஆகியோரின் மைத்து னியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

தகவல்:- அருளானந்தன் (இலங்கை)

| | | | |
|---|---|---|---|
| சதானந்தன் | (கனடா) | தொ.பே. | 416-663-9831 |
| விவேகானந்தன் | (கனடா) | " | 416-667-8326 |
| முருகானந்தன் | (கனடா) | " | 905-264-9262 |
| ஜெயானந்தன் | (கனடா) | " | 905-264-9262 |
| ஜெயந்தி | (இலங்கை) | " | |

### ஆண்டொன்று அகன்றேகியதே!

இ
க
த்
தி
ல்
23
11
1938



ப
ர
த்
தி
ல்
08
11
1997

**ஸ்ரீமான் வைரமுத்து விநாயகமூர்த்தி**
**புங்குடுதீவு 10ம் வட்டாரம் கிழக்கு**

திதி ஐப்பசி மாதம் வளர்பிறை அட்டமி (திதி) 28.10.1998 புதன்கிழமை

பொட்டிழந்து பூவிழந்து பொற்றாலி நாளிழந்து, விதவையெனும் பெயரிட்டு ஓராண்டு ஆகிவிட்டது. இந்தப் பாவிக்கு அருட் குறைவிலை; பொருட்குறையேதும் மனைகுறையேதும் வைக்காத ஐயனே, நானறியாமல் என் நெற்றியில் குங்குமம் குறையினை ஏன் வைத்தாய்? நான் உனக்கு செய்த குறையெதுவோ? உன்னை இழந்து ஆண்டொன்று அகன்றும் நீயின்றி நிறைவில்லை. இன்டென்றும் எனக்கு கொள்ளிக்கு யாரை வைத்து சென்றாய்? என்றும் இறை கழலடியில் வீற்றிருப்பாய். நின் நித்திய ஆத்ம சாந்திக்கு இறைவனை உன் மனைவியே துதிக்கிறேன்.

தகவல்- மனைவி (ராஜேஸ்வரி விநாயகமூர்த்தி 15/12 2 வது மாளிகாகந்தை லேன், மருதானை, கொழும்பு-10.



படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஜனாதிபதி தேர்தல் கனவும் பிரபாகரனின் திட்டங்களும்

வன்னிப் போர்முனையில் எதிர்பாராத முனையில் புலிகள் பாய்ச்சல் ஒன்றை நடத்துவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

படைத்தரப்பு ஆனையிறவு இராணுவ தளத்தை துரிதகதியில் பலப்படுத்தி வருகிறது.

ஆனையிறவு இராணுவ தளத்தில் புலிகளுக்கு ஒரு கண் இருந்தாலும், அதற்கிடையே வன்னியில் வேறு முனையில் அதிரடிப் பாய்ச்சல் நடத்தக்கூடும் என்று தகவல்கள் கூறுகின்றன.

வன்னிச் சமரில் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையின் இலக்கு புலிகளின் பலத்தை கரைப்பது.

ஒரு வருடமும் ஆறுமாதமும் நீண்டுவிட்ட 'ஜயசிக்குறுய்' அனுபவமானது, புலிகளின் பலம் கரைகிறதோ இல்லையோ, பாதையை திறந்ததாக காட்டினாலாவது போதும் என்று அரசாங்கத்தை எண்ணவைத்துள்ளது.

ஆனால் 'ஜயசிக்குறுய்' என்று ஆரம்பமானதோ அன்று முதல் இன்றுவரை 'ஜயசிக்குறுய்' தொடர்பான புலிகளின் கொள்கை ஒன்றுதான்.

'எம்மை முற்றுகையிட வந்தவர்களை, மீளமுடியாத முற்றுகைக்குள் சிக்கவைப்போம்' என்பதையே அழுத்தம் திருத்தமாக கூறுகின்றனர்.

வன்னி களத்தில் இதுவரை காலத்தில் பல நீண்ட தற்காப்புச் சமர்களை புலிகள் நடத்தியுள்ளனர்.

ஓமந்தை, புளியங்குளம், புதூர், மன்னகுளம், ஒலுமடு, மாங்குளம், கிளிநொச்சி இப்போது பரந்தன் என்று பல்வேறு தற்காப்பு முனைகளில் சமர்கள் பலமாதங்கள் நீண்டுள்ளன.

இம்முனைகளில் தமக்கு சாதகம் இல்லாதபோதும், அல்லது வேறு உத்திகள் நிமித்தமும் தற்காப்பு சமரை நிறுத்தி புலிகள் பின்நகர்ந்தும் உள்ளனர்.

ஓமந்தை இறம்பைக்குளம் பகுதியில் இருவாரங்கள் தற்காப்புச் சமரில் ஈடுபட்ட புலிகள் திடீரென்று பின்நகர்ந்தனர்.

படையினரும் பெரும் எடுப்போடு பனிக்க நீராவி நோக்கி முன்னேறினர். ஓமந்தையில் இருந்து 5 கிலோமீட்டர் தூரத்தில் இருந்த பனிக்க நீராவியை கைப்பற்றிய வெற்றிச் செய்தியை படையினர் அறிவித்தனர்.

அச் செய்தி அறிவித்துக் கொண்டிருந்தபோது புலிகளின் தாக்குதல் அணிகள் 1997 ஜூன் 10ம் திகதி தாண்டிக்குளத்தில் ஊடறுத்து பாரிய தாக்குதலைத் தொடுத்து பேரழிவை உண்டாக்கினர்.

வவுனியா-யாழ் சாலையில் படையினரை முன்னேற அனுமதித்துவிட்டு, அவர்கள் கவனம் நிலப்பிடிப்பில் இருக்க, புலியணிகள் தாண்டிக்குளத்தில் பாய்ச்சல் நடத்தின.

தாண்டிக்குள சமரின் பின்னர் இதுவரை பல தாக்குதல் சமர்களையும், தற்காப்பு சமர்களையும் வன்னிக் களம் சந்தித்துள்ளது.

இச் சமர்களில் புலிகளின் பிரதான நோக்கம் நிலப்பகுதிகளை தக்கவைப்பதாக மட்டுமல்லாமல், படைபலத்தை படிப்படியாக கரைப்பதுமாகவே இருந்துள்ளது.

'எதிரியின் அழிவில்தான் உண்மையான தற்காப்பு பூர்த்தியாகிறது' என்பது யுத்தக் கோட்பாடுகளில் ஒன்று.

இக் கோட்பாடு புலிகளுக்கும் பொருந்தும். படைகளுக்கும் பொருந்தும்.

வன்னியில் படையினர் நிலைகொள்ள வேண்டுமானால் பங்கர்களோ, பாரிய காப்பரண்களோ, கனரக ஆயுதங்களோ மட்டும் போதாது. புலிகள் அழிக்கப்பட்டால்தான் வன்னியில் படைத்தரப்பின் பாதுகாப்பு உத்தரவாதமாகும்.

அதேபோல புலிகளின் தளப் பிரதேசத்தினதும், வன்னியினதும் நிரந்தர பாதுகாப்புக்கு படைத்தரப்பு முற்றாக அங்கிருந்து அகலும்வரை அச்சுறுத்தல் இருக்கும்.

அழித்தொழிப்பு யுத்தத்தில் எத்தரப்பு வெற்றி பெறுகிறதோ அத்தரப்பே வன்னிச் சமரில் இறுதி வெற்றியை எட்டும்.

இந்த நோக்கத்தை எட்டும் முயற்சியில் படைத்தரப்பைவிட புலிகளே முன்னணியில் நிற்கின்றனர்.

மிகவும் திட்டமிட்டு களநிலவரத்தை தமது கைமீறிப் போகாத அளவில் வைத்திருக்க புலிகளால் முடிகிறது.

புளியங்குளத்திலோ, பின்னர் மாங்குளத்திலோ படையினர் பலமாதங்கள் புலிகளுடன் சண்டையிடவேண்டி இருந்தது.

வான்படையின் பலத்த தாக்குதல்கள், ஆட்டிலெறி மற்றும் மோட்டார் ஷெல் வீச்சுக்கள் என்பவற்றையும், டாங்கிப் படையணிகளது கனல் கக்கும் முன்னேற்றங்களையும் எதிர்கொண்டு ஒவ்வொரு தற்காப்பு சமரிலும் தாக்குப் பிடிக்கின்றனர்.

பின்னர் எப்போது விலகுவது என்று தாம் வகுத்த திட்டப்படி பின் நகர்ந்து கொண்டு, அதற்கு ஈடாக இன்னொரு முனையை கைக்குள் எடுக்கின்றனர்.

ஓமந்தையை பிடித்தது முதல் மாங்குளத்தை பிடித்ததுவரை அவை எல்லாம் புலிகளது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என்றே அரச தரப்பு கூறியது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்றால் என்ன?

யுத்தத்தை பொறுத்தவரை கேந்திர முக்கியத்துவம் என்பது, படையணிகளுக்கான விநியோகம், படையணி நகர்வுகளுக்கு ஏற்ற புவியியல் அமைப்பு என்பவற்றை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது.

புலிகளின் பிரதான தளமான முல்லைத் தீவில் இருந்து ஜயசிக்குறுய் படைகளுக்கு எதிரான சமரில் ஈடுபடும் புலிகளுக்கான விநியோகப் பாதையை படைத்தரப்பு தடுக்குமானால், அதனை கேந்திர முக்கியத்துவமான பாதை தடுக்கப்பட்டது, பகுதி கைப்பற்றப் பட்டது என்று கூறலாம்.

கிளிநொச்சி படையினரிடம் இருந்தபோதே, கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து வன்னிக்கு செல்லக்கூடிய பாதைகள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன.

இரணைமடு, கொக்காவில் பாதைகளூடாக பொது மக்கள் பயணம் செய்தனர். மாங்குளம் ஒட்டிசுட்டான் பாதையில் தடைப்பட்ட பொதுமக்கள் போக்குவரத்து இரணைமடு ஊடாக நடைபெற்றது.

புலிகளது வாகனங்களும் முல்லைத் தீவுக்கு தாராளமாக சென்றுவந்தன.

தற்போது பரந்தன்வரை புலிகள் வசம் இருப்பதால் முல்லைத்தீவுக்கு புலியணிகள் சென்றுவர மேலும் புதிய பாதைகளும் உள்ளன.

எனவே ஒரு பகுதியில் புலிகள் நீண்ட தற்காப்பு சமரில் ஈடுபடுவதை வைத்து அதனை கேந்திர முக்கியத்துவமான பகுதி என்று கூறிவிட இயலாது.

வன்னியில் ஒவ்வோர் அடியை கடப்பதற்கும் பெரும் விலையை செலுத்த வைத்தால்தான் படையினரின் ஆட்பலம், உளவியல் பலம் என்பவை வீழ்ச்சியடையும் என்பதும், இறுதியில் பாரிய அழித்தொழிப்பு சமருக்கு சாதகம் கிட்டும் என்பதுமே பிரபாகரனது நோக்கம்.

எனவே, வன்னிக் களத்தில் நிலங்களை கைப்பற்றுவது என்பதோ, முன்னேறும் கிலோமீற்றர் கணக்குகளோ சமரின் முடிவை தீர்மானிக்கப்போவதில்லை.

தாம் நினைப்பதை செய்து முடிக்கும் நிலையில் புலிகள் உள்ளதால், படையினர் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் புலிப் பொறிக்குள் வைக்கப்படுகிறதா? இல்லையா? என்பதை ஊகிப்பது கடினம்.

கிளிநொச்சி சமரில் 300 புலிகள் பலியாகியுள்ளனர். இந்த எண்ணிக்கை புலிகளது ஆட்பலத்தில் தாக்கத்தை கொடுத்தாலும், அச் சமரின் பின்னர் புதிய உறுப்பினர்கள் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. ஆயுத தளபாட பலமும் கணிசமாக உயர்ந்துள்ளது.

ஆனால் படைத்தரப்பு அவ்வாறான உற்சாகத்தை ஏற்படுத்த முடியாமல் உள்ளது. படையைவிட்டு தப்பியோடுவோர் தொகை ஏறிக்கொண்டிருப்பதாக கொழும்பு ஆங்கில தினசரிகளே கூறுகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சி சமரின் வெற்றி தந்த உற்சாகத்தை வைத்து பாரிய பாய்ச்சலுக்கான திட்டங்களை தீட்டி வருகிறார் பிரபாகரன்.

'ஜயசிக்குறுய்' முடிவதற்கான காலக்கெடுவாக ஜனவரியை குறித்துவைத்து, ஜனாதிபதித் தேர்தல் கனவில் இருக்கும் அரசுக்கு பாரிய அதிர்ச்சியை கொடுப்பதுதான் பிரபாகரனின் திட்டம்.

'ஜயசிக்குறுய்' களத்துக்கு வெளியேயும் தாக்குதல்கள் தீவிரமாக்கப்படலாம்.

தற்போது யாழ் குடாநாட்டில் புலிகள் பல்வேறு ரூபங்களில் உள்ளனர். கட்டளைகளுக்காக காத்திருக்கும் கரும்புலிகள் யாழ் நகருக்குள்ளேயே இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதேபோல வவுனியா நகருக்குள்ளும் புலிகள் ஊடுருவி முதற் கட்டமாக தகவல்கள் சேகரித்து வருகின்றனர்.

படையினரது கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாவுக்குள் சமீபத்தில் அறுபது பேர் கொண்ட புலியணி ஒன்று உட்புகுந்து, நிதானமாக இருந்து சமைத்து சாப்பிட்டுவிட்டு போயிருக்கிறார்கள்.

அவர்கள் போனபின்னர் சென்ற படையினர் சமையல் செய்து கொடுத்ததாக ஒருவரை கைது செய்துகொண்டு திரும்பினார்கள்.

மட்டக்களப்பு மாநகர சபை பகுதிக்குள் மாமாங்க பொலிஸ் காவலரண் 26.10.98 அன்று தாக்கி அழிக்கப்பட்டது. காவலரணைவிட்டு அகன்றதால் பொலிசார் பாரிய உயிரிழப்பின்றி தப்பினார்கள்.

தலைநகரான கொழும்பில் புலிகள் அமைதி காத்து வருகின்றனர்.

பாதுகாப்பு தரப்பின் சோதனைகள், மற்றும் தேடுதல்களால்தான் புலிகளால் எதுவும் செய்ய முடியவில்லை என்று கருதினால் அது தப்புக்கணக்கு.

கிளிநொச்சி சமர் வீடியோ படங்கள் தலைநகருக்கு கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்பட்டது ஒன்றே போதும், புலிகளால் எந்தளவுக்கு ஊடுருவ முடியும் என்பதற்கு.

சோதனைகள், தேடுதல்கள், புதுப்புது விதிமுறைகள் என்பன பொதுமக்களை மட்டும் தான் கட்டுப்படுத்தலாம். அவற்றுக்கு எப்படி தண்ணிகாட்டுவது என்பதை புலிகள் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள்.

தமக்கு தேவையான தருணத்தில் எங்கு வேண்டுமோ அங்கு தாக்குதல் நடத்தக்கூடிய வலைப்பின்னலான ஏற்பாடுகளை புலிகள் செய்து வைத்துள்ளனர்.

புலிகள் தமது நடவடிக்கைகளை நிறுத்திவைத்தால் பாரிய நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகிறார்கள் என்பதே அர்த்தம். கள முனையிலானாலும், தலைநகரிலானாலும் அப்படித்தான் இதுவரை நடந்து வந்திருக்கிறது.

எப்படியோ ஜனவரிக்குள் பாரிய நெருக்கடிகளை புலிகளிடம்இருந்து அரசு எதிர்நோக்கியே ஆக வேண்டும்.

**நாரதர்**



ஓயாத அலைகள்-02க்கு திட்டத்தை தளபதிகளுக்கு விளக்குகிறார் பிரபாகரன். அருகில் கருணா, தீபன்





கிளிநொச்சி நகரில் புலிகளின் தளபதி தீபன் உரையாற்றுகிறார்

---

## அதிரடி அய்யாத்துரை



**ரெண்டு எழுத்தாரை** பிடித்ததாக பேட்டிகள், புகைப்படங்கள் என்று செய்த பிரசாரமெல்லாம், ரெண்டு எழுத்தாரால் விடுதலையானவையின் பேட்டிகள் முன்னால் தூளாய்ப்போய்விட்டது. பிடித்து வைத்துக் கொண்டு, பிடித்து வைத்திருப்பவை பேட்டி எடுத்தால் அவைக்கு பிடித்தமாகத்தான் பேட்டி வரும். ரெண்டு எழுத்தாரால் விடுதலையானவை யார் தூண்டுதலும் இல்லாமல், எப்படி பேட்டியளிப்பது என்று யாரும் ரெயினிங் கொடுக்காமல் தாமாக பேட்டியளித்திருக்கினம். இதுதான்(டா) பேட்டி. இவையை அரச பிரசார சாதனங்கள் ஏன் பேட்டி எடுக்கவில்லை?!

**அதிகாரமுள்ள சக்தியானவர்** தனது ரி.வி. பேட்டியில் ரெண்டு எழுத்தார்தான் ஈரோஸ், புளொட் தலைவர்களை சுட்டதாக கூறிப்போட்டார். ஈரோசில் தலைவர்கள் யாரும் கொல்லப்படவேயில்லை. புளொட் தலைவர் உமா கொலைக்கும் அவை காரணமில்லை. அதெல்லாம் கிடக்க கூட்டணித் தலைவர், ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களின் கொலைக்குப் பிறகுதானே ரெண்டு எழுத்தாருடன் பேசினவை! நெல்சன் மண்டேலா, அரபாத் என்று சந்திரமான தலைவியே போற்றியவர். எனக்கு ஒரே குழப்பமாகக் கிடக்கு!.

**பயணிகளுக்குச் சேவை** எண்டு பாவ்லா காட்டிக் கொண்டு சீருடையினரை கப்பலில் ஏற்றி முடித்துப்போட்டு, முக்கால்வாசி பயணிகளை திருப்பி அனுப்பிப்போட்டினமாம். 'லங்கா முதித்த'வில் சுவச யானை போகுது. திரும்பிவரும்போது சீருடையினரோடு வருகுது. இதனை மட்டும் டமில் கட்சிகள் கண்டுகொள்ள மாட்டினமாக்கும்!

**கதிரரின் இலண்டன்** சுற்றுப் பயணப் பிரசாரத்துக்கு பதிலடி கொடுப்பதற்காகத்தான் குமாரர் திடீர் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திரும்பினாராம். கதிரர் சந்தித்த சில புள்ளிகளையும் குமாரர் சந்தித்து விளக்கம் கொடுத்ததாகவும் தகவல்.

**யாழ் குடாநாட்டில்** எக்கச்சக்கமான வதந்திகள் பரவுவது தெரிந்த கதைதான். இப்பவெல்லாம் வதந்திக்கு சனம் வைத்துள்ள பெயர் 'வசந்தி'. 'வசந்தி உலா வருகிறாள்!' என்று கூறிக் கொள்ளுகினமாம்.

**கிழக்கின் தனித்துவத்** தலைவர் கொழும்பில் பிறந்தநாள், திறப்பு விழா என்று அமர்க்களம் பண்ணிப் போட்டார். மலைப்பகுதியின் தனித்துவத் தலைவரது ரேஞ்சுக்கு வரவேண்டும் என்பதுதான் இலக்காம்! அதுதான் தொண்டர் பாணியிலேயே இவரும் தலைநகரில் கட்டடம் எழுப்பி ஜமாய்த்திருக்கிறார் என்று திறப்பு விழாவிலேயே சிலர் குசுகுசுத்தனராம்.

**"எங்களை ரெண்டு** எழுத்தாருக்கு சார்பாளர்கள் என்று சிலர் கூறுகினம். எங்களுக்குத்தான் பெரும் சங்கடம். கொஞ்சம் பிசகினாலும் குறி திரும்பி விடுமோ? என்று திக், திக் என்று ஹாட் அடிக்குது!" எண்டு கூறினாராம் கிழக்கின் தமிழ் வெகுஜனப் பிரதிநிதி ஒருவர்.

**வர்த்தகர்களில்** பச்சைக் கட்சிக்கு சார்பானவர்கள்தான் அதிகம். என்றாலும் நீல அணி அதிகாரத்தில் இருந்தால் அடக்கித்தான் வாசிப்பினம். இரு அணிக்கும் எலக்ஷன் செலவுக்கு நல்ல கலெக்ஷன் கொடுத்துப் போட்டு, எது வென்றாலும் கொடுத்ததுக்குப் பலன் உண்டு எண்டு இருப்பவையும் உள்ளனர். சமீபத்தில் தலைநகரில் கூடிய வர்த்தகர்களில் பலர் பச்சைக் கட்சிக்கும் அள்ளிக் கொடுத்தவைதானாம். கூட்டத்திற்கு தலைமை தாங்கிய லலித் கொத்தலாவல சேர் ஜோன் கொத்தலாவலயின் உறவினர். சிலிங்கோ ஹவுஸ் உரிமையாளர்.

**ஐ.நா.சபை** வரையும் வை.கோ.பிரச்சனையைக் கொண்டு போயிருக்கிறார். செம்மணி விவகாரத்தை தமிழ்க் கட்சிகளால் இங்குள்ள தூதரகம் வரைகூட கொண்டுபோக முடியவில்லை. மனம் உண்டானால் மார்க்கமுண்டு. இவைக்குத்தான் மனமே இல்லையே!.

**யாழ் குடாநாட்டில்** சோதனை மேல் சோதனை. ஆனாலும் ரெண்டு எழுத்தார் ஹாயாக வலம் வருகினம். யார் என்ன செய்கினம்? என்ற தகவல்களையும் விலாவாரியாகத் திரட்டி வருகினமாம்.

**குடாநாட்டு மினிச் சபைகளில்** பலர் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துகொண்டிருக்கினம். பிரச்சனை இல்லை என்றால் அனுபவிச்சுப் பார்ப்போம் எண்டு கதிரையில் ஏறுகிறவை; பிரச்சனை வந்தால் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓடுகினம்.

**பிறநாடுகளில் இருந்து** விடுமுறையில் யாழ் போய் மாட்டுப்பட்டு நிற்கிற ஆட்களின் கதை சோகக் கதை. விசா முடிய முன்னர் திரும்ப வேணுமல்லோ?. கப்பல் பயணத்துக்காக யாழில் அலைகினம். தங்கள் நலனைக் கவனிக்க இலண்டன் செல்ல இருப்பவை, கனடா செல்ல இருப்பவை, மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்ல இருப்பவை எண்டு தனித்தனி சங்கங்கள் அமைச்சுப் போட்டினம். ஒரே சங்கமாக அமைத்திருக்கலாமே? தமிழர்கள் சங்ககாலத்தில் இருந்தே பிரிந்துதானே நிற்கிறார்கள்? அதுதான் இந்தக் காலத்திலும் தனிச் சங்கங்கள். எல்லாம் ஒரு பாரம்பரியப் பற்றுத்தான்!

**ரெண்டு எழுத்தாரின்** ஹெலி-பிளேன் என்று நினைச்சு பயணிகள் பிளேனை போட்டுத் தள்ளப் போகினமோ தெரியாது. தங்கள் ஹெலியை கண்டுகூட குறிவைக்கும் குழப்பம்கூட ஏற்படலாம். குட்டித்தீவுக்குள்ளே இரண்டு எயார் போஸ் இருந்தால் குழப்பங்கள் எட்டிப்பார்க்கும்தான்!.

**இவ்வாரப் பொன்மொழி:**

"முட்டாளைச் சமாளிக்க சுருக்கமான வழி மௌனமாக இருப்பதுதான்!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

**1990ல்** மாவீரர் தினத்தின் இறுதி நாளன்று (27.11.90) தேசியக் கொடியாக புலிக் கொடியை பிரகடனம் செய்தனர் புலிகள்.

அதுபற்றி புலிகள் பின்வருமாறு தெரிவித்திருந்தனர்.

1977ம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்து வரும் புலிக்கொடியில் உள்ள எழுத்துக்கள் நீக்கப்பட்ட கொடியே தமிழீழ தேசியக் கொடியாகும்.

தமிழீழத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அரச கட்டடங்கள், காவல் நிலையங்கள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் தமிழீழ தேசியக் கொடி கம்பீரமாகப் பறக்கிறது.

தமிழீழத் தேசியக் கொடியை மூன்று நிறங்கள் அலங்கரிக்கின்றன. ஒவ்வொரு நிறமும் ஒவ்வொரு காரணத்தைப் பிரதிபலிக்கின்றன.

**மஞ்சள்:** தமிழீழ மக்கள் ஒரு தனித் தேசிய இனம். அவர்களுக்கென்று தனித் தாயகம் உண்டு. தன்னாட்சி உரிமை அவர்கள் பிறப்புரிமை. தாயகத்தை விடுதலை பெறச் செய்ய தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள போராட்டம் அறம் மிக்கது. மனித தர்மத்தை அடிப்படையாக கொண்டது என்பதை மஞ்சள் நிறம் குறிக்கிறது.

**சிவப்பு:** தமிழீழ சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். வர்க்க, சாதி முரண்பாடுகள் அகற்றப்பட வேண்டும். பெண் அடிமைத்தனம் நீக்கப் படவேண்டும். இதற்கு சமுதாய அமைப்பில் புரட்சிகர மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதை சிவப்பு நிறம் குறிப்பிடுகிறது.

**கறுப்பு:** விடுதலைப் பாதை கரடு முரடானது. சாவும், அழிவும், தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இத்தனையையும் தாங்கிக்கொள்ள இரும்பு போன்ற இதயம் வேண்டும். அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும் என்பதை கறுப்பு நிறம் குறிக்கிறது.

மேற்கண்டவாறு புலிகள் கூறியிருந்தனர்.




இந்த விருப்பம் மிக அண்மையில் ஏற்பட்டதொன்றல்ல.

இந்திய-புலிகள் போர்க்காலத்தில் வன்னிக் காட்டுக்குள்ளேயே இத்தகைய விருப்பங்கள் வெளிப்படத் தொடங்கிவிட்டன.

பிரதானமாக தலைவர் பிரபாகரன் தங்கியிருந்த மணலாற்றுக் காட்டுக்குள்ளேயே இவ்விருப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டதுடன் செயல் வடிவங்களும் கொடுக்கப்பட்டன.

இந்திய ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராக கடும் சமர்கள் நடந்த இடம் மணலாறு.

எனவேதான் போராளிகளது உடல்களை புதைத்து கல்லறை எழுப்பி அதனை என்றென்றும் உயிர்த்துடிப்புள்ள ஒரு சினைவுச் சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகிறோம்." என்று புலிகள் தமது விளக்கத்தில் கூறியிருந்தனர்.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலரது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளது உடல்கள் தமது மத சம்பிரதாயத்துக்கு மாறாக புதைக்கப்படுவதை விரும்பவில்லை.

வேறு சிலர் பொது மயானத்தில் புதைக்கப்படாமல், தங்கள் குடும்ப மயானத்தில் இறுதிக் கிரியைகள் நடக்க வேண்டும் என்று கோரினார்கள்.

அதனையும் கருத்தில் கொண்டு தமது உறுப்பினர்களது பெற்றோர்களுக்கு புலிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

"அன்புக்குரிய எமது பெற்றோர்களே! மக்களே! எமது இயக்கத்தின் முடிவை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

இந்த முடிவு காலம் காலமாக இருந்து வந்த சம்பிரதாயம், சாஸ்திரங்களுக்கு முரணாக இருப்பதாக நீங்கள் கருதலாம்.

ஆனால் உங்களது பிள்ளைகளான புலி வீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் அனைத்தையும் கடந்த நிலையில் இந்த நாட்டின் பொதுச் சொத்தாக, பொதுப் பொக்கிசமாக இருக்கிறார்கள்.

பல்லாயிரக்கணக்கான இப்பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும் எண்ணிக்கையாகவும் மட்டும் இல்லாமல் பொருள் வடிவில் என்றென்றும் எம் மண்ணில் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.



வந்து கலந்துகொள்ள முடியாவிட்டாலும், நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளைகளின் நினைவாக நாங்கள் எதைக் காட்டப்போகிறோம்?

எனவேதான் தமது பிள்ளைகளது உடலைப் பார்க்காவிட்டாலும்கூட அவர்கள் புதைக்கப்பட்ட கல்லறையைப் பார்த்து ஓரளவு ஆறுதல் அடைய நாங்கள் உதவுவோம்.

அத்துடன் அடிக்கடி அக் கல்லறைக்குச் சென்று நினைவுகளை மீட்டுப் பார்ப்பதுடன், ஒரு ஆத்ம திருப்தியையும் அவர்கள் அடைந்து கொள்வார்கள்.

புதைத்து எழுப்பப்பட்ட கல்லறைகளை இராணுவம் அழிக்காதா? என்று கேள்வி எழலாம்.

அப்படி நடந்தால் போராளிகளை அவமதிப்பது போல் ஆகாதா?

தியாகி சிவகுமாரனுக்கு உரும்பிராயில் அமைக்கப்பட்ட சிலையும், மன்னார் தளபதி லெப். கேணல் விக்டரது கல்லறையையும் சிறீலங்கா படையினர் சிதைத்தனர்.

போரில் கொல்லப்பட்ட எதிரிப்படை வீரனது கல்லறைக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்பது சாதாரண போர்த்தர்மம். ஆனால் அதனை சிறீலங்கா படையினர் கடைப்பிடிப்பர் என உறுதியாக கூறமுடியாது.

ஆக்கிரமிப்பு இராணுவமாக இங்கு செயற்பட்டு அதனால் பலியான இந்திய ஜவான்களுக்கு இந்திய அரசு எமது மண்ணில் அமைத்த நினைவுச் சின்னங்களை, இந்தியப் படைகள் வெளியேற்றப்பட்ட பின்பும்கூட நாம் உடைத்தெறியவில்லை.

ஆனால் எமது மண்ணில் எமது போராளிகளது நினைவுத் தூண்களை சிறீலங்கா படையினர் உடைத்தெறிவதையிட்டு நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. அதனையிட்டு சிங்கள இனம் வெட்கப்படவேண்டும்." எனவும் புலிகள் கூறியிருந்தனர்.

1995ல் ரிவிரெச இராணுவ நடவடிக்கையின் போது யாழ் குடாநாட்டில் இருந்த 'மாவீரர் துயிலும் இல்லங்கள்' படையினரால் புல்டோசர்களால் அழிக்கப்பட்டன என்பதை இந்த இடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

## பலியானோருக்கு மரியாதை

1990 நவம்பரில் மாவீரர் தினம்வரை இரண்டாயிரம் புலிகள்வரை பலியாகி இருந்தனர்.

பலியான தமது உறுப்பினர்களது புகைப் படங்கள், அவர்கள் சம்பந்தப்பட்ட நினைவுகளை பாதுகாப்பதிலும், அடிக்கடி நினைவு கூருவதிலும் புலிகள் ஆரம்பகாலம் முதலே மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றனர்.

ஏனைய இயக்கங்களைப் பொறுத்தவரை பலியான தமது உறுப்பினர்கள் பற்றிய நினைவுத் தடயங்களே இல்லாதவையாக இருந்து வருகின்றன.

புலிகளுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையான உறுப்பினர்களை இழந்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

இந்தியப் படை காலத்தில் புலிகளுக்கு எதிரான வேட்டை என்ற பெயரில் தமது உறுப்பினர்களை திட்டம் இல்லாத மோதல்களில் பலி கொடுத்தனர்.

நாட்டைவிட்டு தப்பியோடும்போது பலியானது யார், தப்பியது யார் என்ற விபரமோ, மொத்தம் எத்தனைபேர் பலியானார்கள் என்ற தகவலோ இன்றுவரை ஈ.பி.ஆர்.எல்.எஃப் பிடம் கிடையாது.

ஏனைய இயக்கங்களின் நிலையும் இதுதான்.

இவ்வாறான காரணங்களும் ஏனைய இயக்கங்களின் உறுப்பினர்கள் போர்க்குணமற்றுப் போவதற்கும், தலைமைகளை வெறுப்பதற்கும் காரணமாக இருந்துள்ளன.

கட்டுப்பாடானதும், தியாகத்திற்கு அஞ்சாததுமான இயக்கங்களாக தமது இயக்கங்களை ஏனைய தலைமைகள் வளர்க்க முடியாமல் போனதற்கு இதுபோல பல காரணங்கள் உள்ளன.

## முற்றுகை மோதல்

1991ம் ஆண்டு மார்ச் மாதம் சிலாவத்துறையில் பாரிய சமர் ஒன்று மூண்டது.

இலங்கையில் அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான முதலாவது பாரிய சமர் என்று அதனைக் குறிப்பிடலாம்.

மன்னார் மாவட்டத்தில் உள்ளது சிலாவத்துறை.

மன்னார்-மடு பிரதான வீதியில் முருங்கனிலிருந்து சுமார் பத்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் கரையோரப் பகுதிதான் சிலாவத் துறை.

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி நடத்தப்பட்டது.

வெள்ளாங்குளம் என்னும் இடத்தில் நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதல்தான் முதல் தாக்குதலாகும்.

# காட்டுக்குள் எழுந்த கல்லறைகள்

## பிரபா கூறியது

1990ல் சுவிற்ஸர்லாந்து பத்திரிகையாளரான மார்ட்டின் ஸ்ரெஸ்சிங்கர் பிரபாகரனை யாழ்ப்பாணத்தில் சந்தித்தார்.

அந்தச் சந்திப்புப் பற்றி அவர் கூறும் போது; "பிரபாகரனை நான் ஒரு போராளியாகத்தான் கேள்வியுற்றேன். அவருடைய நடவடிக்கைகளையும் பலவருடகாலம் அவதானித்தேன்.

அவர் உலகிற் சிறந்த கெரில்லாப் போராளி என்றும் எனக்குத் தெரியும். இத்தகைய ஒருவர் இரண்டரை வருட காலமாக இந்திய இராணுவத்திற்கு எதிரான போராட்டத்தின் பின்னர் போர்க்குணமானவராகவும், மூர்க்கமானவராகவும் இருப்பார் என்று நினைத்தேன்.

ஆனால் கடந்த ஞாயிறு அன்று அவரை நேரில் சந்தித்த சமயம் நகைச்சுவை உணர்வுடன், மலர்ந்த முகத்துடன் உரையாடுவதை என்னால் அவதானிக்க முடிந்தது.

ஒரு தீர்வு கிட்டும் பட்சத்தில் நீங்கள் எப்படிச் செயலாற்றுவீர்கள் என்று வினாவினேன்.

'நான் ஒரு சமூக சேவையாளராக கடமையாற்றுவேன்' என்று கூறினார்.

'எப்பேற்பட்ட சமூக சேவை?' என்று நான் வினாவினேன்.

அதற்கு அவர்: "ஊனமுற்றவர்களை பொறுப்பேற்று பராமரிப்பது எனது முக்கிய பணியாக இருக்கும்" என்று கூறினார் என சுவிஸ் பத்திரிகையாளர் குறிப்பிட்டு ஆச்சரியம் தெரிவித்திருந்தார்.

## புதைப்பது ஏன்?

புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலியானால், அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தோராக இருந்தாலும் அவர்களது உடல்கள் புதைக்கப்பட வேண்டும் என்று புலிகள் முடிவு செய்தனர்.

இவ்வாறான முடிவுக்கான காரணத்தையும் புலிகள் விளக்கியிருந்தனர்.

"இதுவரை காலமும் வீரமரணமடைந்த போராளிகளது உடல்களை அவர்களது குடும்பங்கள் கைக்கொள்ளும் மத சம்பிரதாயங்களின் அடிப்படையில் புதைக்கப்படுவதோ, தகனம் செய்யப்படுவதோ வழக்கமாகும்.

ஆனால் இனிமேல் வீரமரணமடையும் புலிகளின் உடல்களை புதைப்பது என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம்.

புதைக்கப்பட்ட இடத்தில் அவ்வப் போராளியின் பெயர் கூறும் கல்லறைகள் எழுப்பப்பட்டு, அவை தேசிய நினைவுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்படும்.

தாங்கள் வீரமரணமடைந்தால் தங்களுடைய உடல்களை மாவீரர் துயிலும் இல்லங்களில் புதைத்து, அங்கே நினைவுக் கற்கள் நாட்டப்படவேண்டும், என்பதே போராளிகளது விருப்பமாகும்.

இந்தியப் படைகளுடனான போரில் நாம் சந்தித்த வெற்றிக்கு அத்திவாரமாக இருந்தது மணலாற்றுக் காட்டில் நாம் கண்டவெற்றிதான்.

தங்களுடைய போராட்ட வாழ்வில் ஒன்றாகக் கலந்து, உறுதுணையாக இருந்த அந்த நிலத்திலேயே தங்களது உடல்களும் புதைக்கப்பட வேண்டும் என புலிகள் விரும்பினார்கள்.

இந்த விருப்பத்தை எழுத்து மூலமும், வாய் மூலமும் தலைவர் பிரபாகரனிடம் தெரிவித்தும் இருந்தனர்.

அதன்படியே அவர்களது விருப்பங்கள் நிறைவேற்றப்பட்டும் வந்தன.

இதன் காரணமாக இன்று மணலாற்று காட்டுக்குள் பெரியதொரு மாவீரர் துயிலும் இல்லம் போராட்டக் கதைகளை கூறிக் கொண்டே இருக்கிறது.

## மரபுப் பழக்கம்

மரபு வழியாக இந்துக்களிடம் இருந்துவரும் சம்பிரதாயப்படி இறந்தவர்களை தகனம் செய்வதே வழமையென அறிந்து வைத்திருக்கிறோம்.

## இறுதிச் சடங்கு

இது ஒரு புறம் இருக்க, எமது சக தோழர்கள் சிலரது வீர மரணத்தின்பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதைப் பாதித்திருக்கின்றன.

பெற்றோரோ, உடன் பிறந்தவர்களோ, உறவினர்களோ இல்லாது நடைபெற்ற இறுதிச் சடங்குகளை நாம் கண்டிருக்கிறோம்.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள்

# புலிகள் அறிவித்த தேசியக்கொடி


மாவீரர் துயிலும் இல்லம்

ஆனால் போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. முழு இனத்தினதும் காவலர்கள். வழிகாட்டிகள்.

இவர்களது சாவுகள் வரலாற்றுச் சின்னமாக நிலைத்து நிற்கவேண்டும். மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டிக் கொண்டேயிருக்க வேண்டும்.

அதன்பின்னர் பல தாக்குதல்கள் மன்னாரில் நடந்துள்ளன. விக்ரர் புலிகளின் மன்னார் தளபதியாக இருந்தபோது நடைபெற்ற சமரும் முக்கியமானது.

1984ல் மன்னார் மாவட்டத்தில் பொலிஸ், இராணுவ, கடற்படை முகாம்கள் மொத்தம் ஒன்பது இருந்தன.

புலிகளின் தாக்குதல்கள் காரணமாக 1991ல் மன்னார் மாவட்டத்தில் நான்கு படை முகாம்கள் மட்டுமே இருந்தன.

அந்த நான்கில் ஒன்றுதான் சிலாவத்துறை இராணுவமுகாமாகும்.

மிகப் பாதுகாப்பான பலமான முகாமாக இது அமைந்திருந்தது.

சிலாவத்துறை இராணுவமுகாமுக்கு பக்கபலமாக அதன் அருகாமையில் இருந்த உதவி அரசாங்க அதிபர் விடுதியிலும், பாடசாலைக் கட்டடத்திலும் இரண்டு மினி முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அத்துடன் சிலாவத்துறை முகாமிலிருந்து நாலு கிலோமீட்டர் தொலைவில் உள்ள கொக்குபுடையானில் ஒரு இராணுவ முகாமும், ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ள கொண்டைச்சி மர முந்திரிகைப் பண்ணையில் ஒரு முகாமும் இருந்தன.

இவ்விதமாக சிலாவத்துறைப் பகுதி இராணுவ வலயப் பகுதியாக இருந்தது.

இம்முகாமை தாக்க நாள் குறித்தனர் புலிகள்.

எவ்வாறு தாக்கினார்கள்?

எவ்வாறு தமது படையணிகளை நகர்த்தினார்கள்?

எவ்வாறு சமர் தொடர்ந்தது?

போன்ற முக்கியமான தகவல்களுடன் அடுத்தவாரம் சந்திக்கலாம்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# புவியியல் பிரிப்பும் உளவியல் பிரிப்பும்

## அலசுவது- இராஜதந்திரி

கிழக்கு மாகாணத்தில் புலிகள் ஆட்திரட்டலில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய ஆட்திரட்டல்களால் புலியணிகள் பலம் பெற்றுவிடலாம் என்று கருதும் சக்திகள் பிரதேச வாதங்களை கிளப்பும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

புலிகள் ஆட்திரட்டுவது சரியா? தவறா? என்பது ஒரு புறமிருக்க, இப் பிரச்சனையில் பிரதேசவாதம் கிளப்பப்படுவது அபாயகரமானதொன்றாகும்.

புலிகளின் ஆட்திரட்டலுக்கு எதிரான பிரசாரம் என்ற போர்வையில் வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு ஏற்ற மனோபாவத்தை கிழக்கில் ஏற்படுத்தவும் சில சக்திகள் முயன்று வருகின்றன.

தமிழ்த் தேசிய இனத்தை இரண்டாம் தரப் பிரஜைகளாக்குவதற்கும், படிப்படியாக அவர்களையும், அவர்களது பாரம்பரிய பிரதேசங்களையும் சிங்கள பௌத்த மயப்படுத்துவதற்கும் பேரினவாத சக்திகள் கடந்த 50 ஆண்டுகாலமாக நுட்பமாக திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றன.

தமிழ் பேசும் மக்களது தாயகப் பிரதேசத்தை புவியியல் ரீதியாக துண்டாடுவது, விழுங்குவது போன்ற திட்டங்களுடன் திட்டமிட்ட குடியேற்ற வெள்ளம் வடக்கு-கிழக்கை நோக்கி திறந்துவிடப்பட்டது.

வடக்கு-கிழக்கின் இதயப்பகுதியான மணலாற்றுப் பகுதிகளில் நடைபெற்ற குடியேற்றங்கள் பாரம்பரிய பிரதேச புவியியல் தொடர்ச்சியை வெட்டித் துண்டாடும் நோக்கம் கொண்டவை.

கிழக்கில் திருமலை, அம்பாறை போன்ற மாவட்டங்களில் நடைபெற்ற குடியேற்றங்கள் பாரம்பரிய நிலத்தை படிப்படியாக விழுங்கும் திட்டத்தோடு மேற்கொள்ளப்பட்டவை.

தென்னிலங்கையில் நடைபெற்ற இனக்கலவரங்களில் இருந்து தப்பிப் பிழைப்பதற்கு வடக்கு-கிழக்கை நோக்கியே தமிழர்கள் கடந்த காலங்களில் புகலிடம் தேடி ஓடினார்கள்.

தற்போது இராணுவத் தீர்வு முனைப்போடு நடத்தப்படும் யுத்தத்தில் இடம்பெயர்வுகளுடன் மக்கள் தாக்குப் பிடிப்பதற்கும் தமக்கான பிரதேசங்கள் இருப்பதே காரணமாகும்.

இல்லையெனில் இடம் பெயர்ந்து செல்வதற்கு இடமில்லாத நிலையில் குண்டுவீச்சுக்களுக்கும், ஷெல் அடிகளுக்கும் இலக்காகி பாரிய அழிவுகள் நேர்ந்திருக்கும்.

எந்தவொரு இனமும் தனது தனித்துவம், கௌவரம், பாதுகாப்பு என்பவற்றை நிலைநாட்டுவதற்கு பலமே முக்கியமானதாகும்.

அப்பலத்தின் அடிப்படையாக விளங்குவது பாரம்பரியமான, புவியியல் தொடர்ச்சியுடைய நிலப்பகுதியேயாகும்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பதுபோல, நிலம் இருந்தால்தான் எந்தவொரு இனமும் தனித்துவத்துடன் தலை நிமிர்ந்து வாழ முடியும்.

தமிழ் பேசும் மக்கள் தங்கள் பாரம்பரிய தாயகத்தின் முக்கியத்துவம் பற்றி அறிந்ததைவிட, பேரினவாத சக்திகள்தான் அதிகம் அறிந்துவைத்துள்ளன.

அதனால்தான் ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன முன்னணி போன்ற இரு துருவங்களான கட்சிகள்கூட வடக்கு-கிழக்கு பிரிப்பில் ஒரே கருத்தையே கொண்டுள்ளன. பிரித்தாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து வருகின்றன.

தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தில் தாயகக் கோட்பாடே அடிப்படையானது.

அதேபோல இலங்கைத் தீவு முழுவதையும் பௌத்த நாடாக்கும் பேரினவாத கொள்கையின் அடிப்படையாக இருப்பது தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசத்தை பிரிப்பதேயாகும்.

ஆகவே, வடக்கு-கிழக்கை புவியியல் ரீதியாக மட்டுமன்றி, உளவியல் ரீதியாக பிரிக்கும் சூழ்ச்சி வலைகளும் அவ்வப்போது விரிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

வடக்கு-கிழக்கை விழுங்குவதற்கு புவியியல் சதியையும், அதற்கு எதிரான போராட்டத்தை ஒடுக்க உளவியல் சதியையும் பேரினவாதம் முன்னெடுத்து வந்துள்ளது.



மட்டு-அம்பாறை தளபதி கருணா, வன்னிக் களத்தில் தாக்குதல் திட்டத்தை விளக்குகிறார்.

வடக்கு என்றும் கிழக்கு என்றும், யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான் என்றும் பிரதேச பேதங்களை உருவாக்கி இன ஒற்றுமைக்கு வேட்டு வைக்கும் முயற்சிகள் நீண்டகாலமாக நடைபெற்று வருகின்றன.

ஆனால் இவற்றையெல்லாம் மீறி பேரினவாதத்துக்கு எதிரான தமிழ் தேசிய உணர்வு கிளர்ந்தெழுந்தது.

அமரர் அமிர்தலிங்கத்துக்கு அடுத்தபடியாக 1970களில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் பேரபிமானம் பெற்றவராக விளங்கியவர் கவிஞர் காசி ஆனந்தன்.

கிழக்கில் இருந்ததைவிட வடக்கில் காசி ஆனந்தன்மேல் பாரிய பற்றுதலும், மாபெரும் வரவேற்பும் இருந்தது.

கிழக்கில் காசி ஆனந்தன் உரையாற்றிய கூட்டங்களைவிட வடக்கில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டங்களே அதிகமாகும்.

"வீட்டுக்கு ஒரு வீரனே விரைந்து வா!" என்று காசி ஆனந்தன் ஆற்றிய உணர்ச்சிமிகு உரைகளும், கவிதைகளும் வடக்கில் பலநூற்றுக்கான இளைஞர்களை எழுச்சிகொள்ள வைத்திருந்தது.

"வெறிகொள் தமிழர் புலிப்படை, அவர் வெல்வார் என்பது வெளிப்படை!" என்ற கவிதையை எழுதியவரும் காசி ஆனந்தனே. அதன்பின்னரே விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்றம் பெற்றது.

விடுதலைப் புலிகள் என்ற பெயர் உருவாகுவதற்கு காசி ஆனந்தனும் ஒருவகையில் காரணமாக இருந்திருக்கிறார்.

வடக்கு-கிழக்கு என்று பேதங்களை உருவாக்க நினைத்தவர்களுக்கு இத்தகைய எழுச்சிகள் சகிக்க முடியாதவையாக இருந்தன.

வடக்கு தலைமைகள் தங்கள் நலனுக்காக கிழக்கு இளைஞர்களை தவறான வழியில் இட்டுச் செல்வதாக பிரசாரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் வடக்கில் மோதல்களில் பலியாகும்போதும் பிரதேச வாதங்களை கிளப்பும் முயற்சிகள் நடந்திருக்கின்றன.

கிழக்கு இளைஞர்கள் வடக்கில் பலியாகிறார்கள் என்று பேரினவாத சக்திகள் நீலிக்கண்ணீர் வடிக்கின்றன.

தென்னிலங்கையில் உள்ள கிராமங்களில் இருந்து சிங்கள இளைஞர்களை வடக்கு-கிழக்குக்கு அனுப்பி போர் நடத்துவதை தாய்நாட்டு நலனுக்காக என்று இதே சக்திகள்தான் விபரித்து வருகின்றன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் காரைநகர் கடற்படை முகாம்மீது தாக்குதல் நடத்தியபோது முக்கிய பாத்திரம் வகித்தவர்கள் அந்த இயக்கத்தின் கிழக்கு தளபதிகளேயாவர்.

அத்தாக்குதல் துரதிஷ்டவசமாகத் தோல்வியில் முடிந்திருந்தது. கிழக்குத் தளபதிகள் பலர் உயிரிழந்தனர். காரைநகர் முகாம் தாக்குதலில் கைப்பற்றும் ஆயுதங்களை வைத்து கிழக்கிலும் பாரிய தாக்குதல் ஒன்று தொடுப்பதற்காகவே திட்டமிடப்பட்டிருந்தது.

முதன் முதலில் கிழக்கு மாகாண முக்கிய உறுப்பினர்கள் வடக்கில் பலியான களம் காரைநகர் முகாம்மீதான தாக்குதலேயாகும்.

புலிகள் அமைப்பில் வடபகுதியைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் கிழக்கில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பொறுப்பாக இருந்துள்ளனர். பல்வேறு இராணுவ நடவடிக்கைகளுக்கும் அங்கு தலைமை தாங்கியுமுள்ளனர்.

தனது மெய்க்காப்பாளர்களாக இருந்து, நம்பிக்கைக்குரியவர்களாகவும், ஆற்றல் உள்ளவர்களாகவும் இருந்த சிலரையும் கிழக்கிற்கு அனுப்பி வைத்திருந்தார் பிரபாகரன்.

கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் விதமாகவே அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

திருமலையில் வெற்றிகரமான பல தாக்குதல்களை நடத்தியது சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவாகும். அதில் வடபகுதியைச் சேர்ந்தவர்களே அதிகமாக இருந்ததுடன், மோதல்களிலும் பலியாகினர்.

வடக்கு-கிழக்கு என்று பேதங்கள் ஏற்படாதிருக்க வடபகுதியைச் சேர்ந்த புலியணிகளை கிழக்கிலும், கிழக்கைச் சேர்ந்த புலியணிகளை வடக்கிலும் செயற்பட வைத்தார் பிரபாகரன்.

எங்கே, எந்த திசையில் முக்கிய கவனம் செலுத்துவது என்பதை யுத்தச் சூழல்தான் தீர்மானிக்கிறது.

மூன்றாம் கட்ட ஈழப்போரின் முதல் முழக்கம் திருமலையிலேயே கேட்டது. கடற்படை கப்பல்கள்மீது நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதலே அந்த முழக்கமாகும்.

கிழக்கில் போரை விஸ்தரிக்கும் திட்டத்துடனும், அங்குமேலும் பல பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரவுமே புலிகள் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால், ரிவிரெசவும், ஜயசிக்குறுய்யும் புலிகளது திட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தின.

எந்தவொரு யுத்தத்திலும் தளப்பிரதேசம் என்பது முக்கியமான ஒன்றாகும்.

தலைமைப்பீட பாதுகாப்பு, போரை முன்னெடுக்கும் விநியோகம், ஆயுத களஞ்சியம், மருத்துவ வசதிகள் போன்ற பல பிரதான தேவைகளுக்கு தளப்பிரதேசம் அவசியமாகும்.

கிழக்கில் தளப்பிரதேசம் ஒன்றை நிறுவி தக்க வைக்கக்கூடிய புவியியல் சூழ்நிலை இல்லையென்பதால் வடக்கில் வன்னியில் உள்ள தளப்பிரதேசத்தை பாதுகாப்பது புலிகளுக்கு மிக முக்கியமானதாகும்.

அத் தளப்பிரதேசத்தை பாதுகாப்பது மூலமே புலிகள் அமைப்பின் ஒட்டுமொத்தமான பலமும் விரிவடையும் என்பது இராணுவரீதியிலான உண்மையுமாகும்.

பல்லாயிரம் படைகளை இறக்கி, பல ஆயிரம் கோடிகளை கொட்டி 'ஜயசிக்குறுய்' ஆரம்பிக்கப்பட்டதில் இருந்தே வன்னியின் முக்கியத்துவம் எத்தகையது என்பது நன்கு புலனாகியது.

புலிகளின் பலத்தை முறியடிப்பதுடன், அரைகுறையான தீர்வுப்பொதியை தமிழ் பேசும் தரப்பின் தலையில் கட்டியடிக்கும் நோக்கத்துடனும் முன்னெடுக்கப்படும் யுத்தத்தின் பிரதான முனையாக வன்னி மாறியுள்ளது.

அதன் காரணமாகவே வன்னிக் களத்தில் சமீபத்திய பேரழிவைக் கண்டும் பேரினவாதிகள் கவலை கொள்ளவில்லை. தமிழ் பேசும் தரப்பை வெற்றிகொண்டு மேலாதிக்கம் செலுத்துவதற்கு கொடுக்கப்பட்ட நியாயமான விலை போன்றே கருதிவருகின்றனர்.

அதனால்தான் படையில் இருந்து தப்பி ஓடியோர் தொடர்பாக பொதுமக்களே தகவல் கொடுக்கின்றனர். படைபலம் பெருகி 'ஜயசிக்குறுய்' இலக்கை எட்டவேண்டும் என்று விரும்புகின்றனர்.

பௌத்த மத பீடங்களும், தீவிர இனவாத குழுக்களும் இதுதான் இறுதிப்போர். இதனை வெற்றிபெற வைப்பதே முக்கியம் என்று தோள்தட்டி நிற்கின்றனர்.

பாடசாலை மாணவிகளையும், மாணவர்களையும் மருத்துவ மனைகளுக்கு அனுப்பி காயப்பட்ட படைவீரர்களுக்கு உற்சாகமளிக்கப்படுகிறது.

இன்றைய யுத்தத்தை சிங்கள மக்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு புனித யுத்தமாக சித்தரிக்கும் முயற்சிகள் வேகம்பெற்று வருகின்றன.

இதன் காரணமாக தமிழர்கள் மத்தியில் சில சந்தேகங்களும் தோன்றியுள்ளன. வன்னியில் ஏற்படும் வெற்றி தோல்விகள் தம்மையும் பாதிக்கும், தம் முதுகில் பேரினவாதிகள் சவாரி செய்ய இடமளிக்கும் என்று சந்தேகிக்கின்றனர்.

எனவே, வன்னிப் போர்முனை வடக்கில் இருக்கிறதா? கிழக்கில் இருக்கிறதா? என்பதல்ல முக்கியம். தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போகும் போர் முனையாக இருக்கிறது என்பதுதான் முக்கியமாகும்.

யுத்தம் தொடர்பாக தென்னிலங்கையில் செய்யப்படும் பிரசாரங்களும், மனப்போக்குகளுமே மேற்கண்ட எண்ணங்களை உருவாக்கியுள்ளன.

இவ்வாறான நிலையில் வன்னிப்போர் முனையில் கிழக்கு இளைஞர்களும், பெண்களும் சமரில் ஈடுபடுவதை பிரதேசவாதமாக்கும் திட்டங்கள் பயனளிக்கப்போவதில்லை.

பிரதான போர்முனை எது? மறு தரப்பின் பிரதான தந்திரோபாயம் என்ன? என்பதை கணிப்பிட்டே வியூகங்கள் வகுக்கப்படுகின்றன. அதற்கேற்பவே படையணிகள் ஒன்று குவிக்கப்படுவதும், பிரிக்கப்படுவதுமான நிகழ்வுகளும் நடக்கின்றன.

அரசு தனது படைத்தரப்பை வன்னியில் குவித்துள்ளது. தென்னிலங்கையில் எங்கோ குக்கிராமங்களில் இருந்தெல்லாம் சிப்பாய்களாக பலர் சென்றுள்ளனர்.

புலிகளும் தமது பிரதான அணிகளை வன்னியில் குவித்துள்ளனர். வடக்கு-கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தோர் உறுப்பினர்களாக, புலியணியினராக நிற்கின்றனர்.

பிரதேச வாதங்களுக்கு அப்பாற்பட்ட ரீதியில் படைத்தரப்பும், புலியணிகளும் தங்கள் பிரதான களம் எதுவென்று கணித்து சமரில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் தமிழ் பேசும் தரப்புக்குள் மட்டும் பிரதேச வாதங்களை கிளப்பிவிடுவது, உளவியல் ரீதியான பிரிப்புச் சதி போன்றே அமைந்திருக்கிறது. யுத்தத்தில் வெல்வதற்கும் பிரதேசவாதம் ஓர் ஆயுதமாக மாறியுள்ளது என்பதும் புலனாகிறது.

பிரதேசவாதங்களை தூண்டும் துண்டுப்பிரசுரங்கள் யார் மூலமாக வெளியிடப்படுகின்றன என்பதையும் கிழக்கு மக்கள் உடனடியாக இனம் கண்டு விடுகின்றனர்.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

சமீபத்தில் கிழக்கில் 'வீரவிக்கும்' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

'வீரவிக்கும்' என்றால் வீரமுழக்கம் என்று அர்த்தமாம். யாருக்கு எதிராக இந்த முழக்கங்கள்?

தமிழர்களை விடுவிக்கவே யுத்தம் செய்வதாக உலகின் செவிகளில் விழக்கூடியதாக கூறுகிறது அரசாங்கம்.

ஆனால் இராணுவ நடவடிக்கைகள் அனைத்துக்கும் கடைந்தெடுத்த சிங்களப் பெயர்கள்தான் சூட்டப்படுகின்றன.

ரிவிரெச, எடிபல, சத்ஜய, ஜயசிக்குறுய்..... தமிழர்களை விடுவிக்க தனிச் சிங்களப் பெயர்களில் இராணுவ நடவடிக்கை! சபாஷ்! சரியான பூச்சுற்றல் என்றுதானே சொல்லத் தோன்றும்!

யுத்தம் என்றால் என்ன? இரு நாடுகளுக்கிடையே, இரு நாட்டுப் படைகளுக்கிடையே நடைபெறுவதுதான் யுத்தம்!

ஜனாதிபதி முதற்கொண்டு அனைவருமே யுத்தம் என்பதை அழுத்தம் திருத்தமாக உச்சரித்து வருகின்றனர்.

ஜே.வி.பி.யுடனான மோதல் காலங்களில் எவ்வாறு கூறினார்கள்?

ஜே.வி.பி.யின் வன்முறைக்கு முடிவு கட்டுவோம். ஜே.வி.பி. கிளர்ச்சியை ஒடுக்குவோம். ஜே.வி.பி.பயங்கரவாதிகளை முறியடிப்போம்! என்றுதான் கூறினரே தவிர, எக்கட்டத்திலும் யுத்தம் என்ற வார்த்தை அரசாலோ, படைகளாலோ, எதிரணியாலோ பயன்படுத்தப் படவில்லை.

உள்நாட்டுக்குள் நடைபெறும் மோதல்கள் தீவிரமானால் உள்நாட்டு யுத்தம் என்று கூறப்படலாமே தவிர யுத்தம் என்று பொதுவாக கூறப்படுவதில்லை.

### அறிவுசீவிகளின் ஹீரோயின்

எனவே, யுத்தம் என்று அரசே கூறுவதும், இராணுவ நடவடிக்கைகளுக்கு தனிச் சிங்களத்தில் உணர்ச்சியூட்டக்கூடிய பெயர்கள் மட்டுமே சூட்டப்படுவதற்கும் காரணம் என்ன? என்ன? என்ன?

விடையை நீங்களே அறிவீர்கள். விளக்கம் தேவையில்லை.

***

வர்த்தகர் சம்மேளனம் கொழும்பில் நடத்திய கூட்டம் ஒரு கூத்து. அரசியல் தலைவர்களுடன் பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்வது, ஆளும் கட்சிக்கு அனுசரணையாக நடந்து கொள்வது என்பது வர்த்தகர்களுக்கு பலவழிகளில் உபயோகம்.

சரக்கு கப்பலான பிரின்செஷ் கேஷ் தாக்கப்பட்டது. தமிழ் வர்த்தகர்கள் பலர் பல கோடி ரூபாய்களை இழந்தனர்.

பனையேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக அந்த வர்த்தகர்களை பிடித்து உள்ளே போட்டனர்.

கப்பல் கடத்தப்படும் என்ற விபரம் முன் கூட்டியே தெரிந்திருந்தால் கப்பலில் அனுப்பிய பொருட்களையெல்லாம் வர்த்தகர்கள் காப்புறுதி செய்து தொலைத்திருப்பார்கள். அதுவும் இல்லாமல் கையறு நிலையில் நின்று தவித்தவர்களை, புலிகளுக்கு ஆயுதம் அனுப்பியதாக சந்தேகித்து தூக்கி உள்ளே போட்டனர்.

தாம் கப்பலை தாக்கி அழித்ததை நியாயப்படுத்த தமிழ் வர்த்தகர்களின் தலையில் பழி போடப்பட்டது.

இத்தனை அப்பட்டமான அநியாயங்கள் நடக்கும் போதெல்லாம் இந்த வர்த்தக சம்மேளனம் எங்கே போனது?

தமிழ் வர்த்தகர்களை பாதிப்பில் இருந்து காப்பாற்ற எப்போதாவது குரல் கொடுத்திருக்கிறதா? இல்லை.

தற்போது நடந்த மாநாட்டில்கூட தமிழ் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் இனரீதியான பாதிப்புக்கள் தொடர்பாக ஆராயப்பட்டதா? அதுவும் இல்லை.

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர்கள், வானம் ஏறி வைகுந்தம் போவது எப்படி?

தமது சக வர்த்தகர்களான தமிழ் வர்த்தகர்கள் படாதபாடுபடும்போதும் விடாது வாய் மூடியிருப்பவர்களுக்கு நாட்டு மக்கள் நலனுக்காக பாடுபடும் ஆர்வம் வந்திருக்கிறது என்றால், சந்தேகம் கொள்வதற்கு ஏராளமான காரணங்கள் உள்ளன.

•••

புலிகளுக்கு சார்பாக தமிழ்ப் பத்திரிகைகள் நடந்துகொள்வதாக தம்மை அறிவுசீவிகளாக கருதும் சிலர் கூறிவருகின்றனர். அதற்கு வியாபார நலன் என்றும் தங்கள் அறிவைச் சீவிக் கண்டுபிடித்துள்ளனர்.

இன்றுள்ள நிலையில் அதிக இலாபமான, சுலபமான வழி என்ன தெரியுமா?

அரச செலவில் பத்திரிகை, அல்லது சஞ்சிகை வெளியிட்டு, நடுநிலை மாதிரி அரச சார்பு கருத்துக்களை திணிப்பது. கணிசமான சம்பளத்துடன் வசதிகளும் கிட்டும்.

அல்லது அரச சார்பாக தனியான பத்திரிகை நடத்தினால் போதிய விளம்பரங்கள் பெறலாம். பத்திரிகை விற்கிறதோ இல்லையோ, அந்த வருமானமே போதும்.

□□□

யாழ் பல்கலைக் கழக ஆசிரியர்கள் என்ற பெயரில் ஒரு குழு கொழும்பில் தலைமறைவாக இருந்து குப்பை கொட்டிக் கொண்டிருக்கிறது.

இவர்களுக்கு லறி விஜயரத்ன ஜென்டில்மேன். இயக்கங்கள் கயவர்கள்!

யாழ் பல்கலைக் கழகத்தைவிட்டு இவர்கள் வெளியேறி பல்லாண்டுகளாகப் போகின்றன. இன்னமும் அந்தப் பெயரை ஒட்டவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முன்னர் இவர்களது அறிக்கைகள் பாராட்டும்படியாக இருந்தன. தற்போது அரச சார்பு நிலைக்கு சென்று கொண்டிருக்கிறார்கள்.

இவர்களது அறிக்கை ஒன்று திருமலையில் சிங்களக் குடியேற்றத்தை நியாயப்படுத்தியது. அது பல்லின நகராம். இப்படிப்பட்டவர்களால் போராட்டங்களை புரிந்துகொள்வது முடியாத காரியம்.

சகல இயக்கங்களிலும் பெண் உறுப்பினர்கள் பலர் இருந்தனர். புலிகளில் பல பெண்கள் பலியாகி உள்ளனர். எவ்வித பிரதிபலனும் கருதாமல் போராடிய அவர்களின் செயலில் நியாயம் இருப்பதாக ஜனாதிபதிகூட கூறியுள்ளார்.

ஆனால் நமது மாண்புமிகு கனவான்ளான இந்தக் குழுவினருக்கு சரோஜினிதான் ஹீரோயின். படித்த மேல் தட்டு வர்க்கப் பெண் அல்லவா! ஏனைய பெண்கள் பயங்கரவாதிகளாகத்தான் தெரிவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

அதிர் இடி 33

கடந்தவாரம்

நீர்வீழ்ச்சிகளிலும்
மலையடிவாரங்களிலும்
பிணங்கள் காணப்படுகின்றன.
ஒபேடேயின் படைகள்
என்ற போர்வையில்
தமது எதிரிகள் அனைவரையும்
தீர்த்துக்கட்டுகின்றனர்.
தனது செயலாளர் சியம்பாவை
கலாசார அமைச்சராக
நியமிக்கிறான் அமீன்.

இனி....

# இடி அமீன்

அமீனின் உத்தரவை மீற முடியாத சியம்பா கலாசார அமைச்சராக விழாவில் கலந்துகொண்டார்.

பதவிப் பிரமாணம் செய்யாமலேயே ஒருவர் அமைச்சராக நடந்துகொள்வது கேலிக்கூத்து. அந்தக் கேலிக்கூத்தையும் அதிகாரத்திற்கு பயந்து அங்கிருந்த அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

பலர் சியம்பாவுக்கு வாழ்த்துக் கூறினார்கள். முன்பிருந்த அமைச்சர்மீது குறைகூறினார்கள்.

சியம்பா தனக்குள் சிரித்துக் கொண்டார். நாளை தனது பதவி பறிபோனாலும் இப்படித்தான் கூறுவார்கள் என்பதை நினைத்தே சிரித்தார்.

பட்டமளிப்பு விழாவில் பரிசுகளை வழங்கி விட்டு நேராக அமீனிடம் சென்றார்.

அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்த அமீன்: "என் பரிசாக நான் ஒன்று தரப்போகிறேன். நீர் நினைத்துப் பார்க்க முடியாத பரிசு." என்றுவிட்டு அறைக் கதவை திறந்தான்.

உள்ளேயிருந்து வந்தவளைக் கண்டதும் சியம்பாவுக்கு மூச்சே நின்றுவிடும் போல இருந்தது.

அத்தனை அழகாக, இளமையாக, புத்தம் புதிய ஆப்பிள் மாதிரியிருந்தாள்.

"உமது செயலாளராக இருந்தவரை தீர்த்துக் கட்டியதற்கு இந்த அழகான நஷ்டஈடு!" என்று கூறிவிட்டு தன் வழக்கமான சிரிப்பை உதிர்த்தான்.

"வழக்கமாக எனக்குத்தான் இப்படியான பரிசுகளை அனுப்பி வைப்பார்கள். நான் இப்படியான பரிசு கொடுப்பது இது தான் முதல் முறை!" என்றும் கூறினான்.



சியம்பாவுக்கு பழைய சபலம் தலை தூக்கியது. அவரது நாடி நரம்புகளில் எல்லாம் தீ பரவிக் கொண்டிருப்பது மாதிரியிருந்தது.


அமீனுக்கு நன்றி கூறிவிட்டு அவளுடன் புறப்பட்டார். புறப்படும்போதுதான் அமீன் கூறினான்: "இனிமேல் உமது செயலாளர் இவள்தான்!"

தன்னைக் கண்காணிக்கத்தான் இந்தப் பரிசு என்பதை சியம்பா உணர்ந்து கொள்ளாதளவுக்கு, அவளது அழகும், அதனை விரைவாக அடையும் ஆர்வமும், ஆசையும் அறிவை மழுங்கப்பண்ணி விட்டன.

கட்டிலில் சியம்பாவை அவள் ஆக்கிரமித்தாள். சியம்பாவுக்கு அது புதுமையாக இருந்தது.

'சியம்பா நாட்டைவிட்டு தப்பியோடக் கூடும்' என்று அமீனுக்கு தகவல் ஒன்று கிடைத்தது.

தனது செயற்பாடுகளுடன் சியம்பாவுக்கு முழு உடன்பாடு கிடையாது என்பதையும் அமீன் அறிந்திருந்தான்.



சியம்பா நாட்டைவிட்டுப் போனால் பல இரகசியங்கள் அம்பலமாகும். சியம்பாவை தீர்த்துக்கட்டுவது ஒரு பிரச்சனையல்ல.

ஆனால் சியம்பா மாதிரியான ஒரு விவேகி கிடைக்கமாட்டார். சியம்பாவின் தேவை தனக்கு இருப்பதால் அவரைத் தீர்த்துக்கட்டுவதைவிட பிடிக்குள் வைத்திருந்து உபயோகிக்கவே விரும்பினான்.

அதனால்தான் அழகான தன் அந்தரங்க உளவாளியை சியம்பா பக்கத்தில் இருக்குமாறு செய்தான்.

"சியம்பாவை உன் பிடியில் வைத்திருக்க வேண்டும். நீ சியம்பாவின் பிடியில் போய்விடாதே. போனால் ஒன்றுமில்லை. உன்னைத் தழுவிய இந்தக் கைகளுக்கு வேறு வேலை கொடுக்க வேண்டியிருக்கும்!" என்றுவிட்டு அமீன் சிரித்த சிரிப்புக்கு அவள் ஆடிப் போனாள்.

கட்டிலில் களைத்துப்போயிருந்த சியம்பா, அவளது கழுத்தை தன் முக்கால் உரசிக்கொண்டு, "அதிபர் அமீனுடனும் உனக்கு அனுபவம் உண்டுதானே?" என்று கேட்டார்.

"சில முறைகள் மட்டும்!" என்றாள் அவரது முதுகை வருடிக்கொண்டு.

சியம்பாவுக்கு கேட்டுவிட வேண்டும் போல் இருந்தது, கேட்டேவிட்டார்: "நானா அமீனா? யாரைப் பிடித்திருக்கிறது?"

"சொல்லப் பயமாக இருக்கிறது!"

"சொல்லு, நான் ஏன் சொல்லப்போகிறேன்" என்று அவளை இறுகத் தழுவிக் கொண்டார்.

"நீங்கள்தான் நல்லவர். வல்லவர். அதிபர் மிகவும் முரட்டுத்தனமானவர். சித்திரவதை செய்து இன்பம் காண்பவர். எத்தனை இரவுகள் வதை தாங்காமல் துடித்திருக்கிறேன் தெரியுமா?" என்ற போது குரல் தழுதழுத்தது.

சியம்பாவுக்கு உற்சாகம் பீறிட்டது. அவளை அப்படியே கட்டிலில் சரித்து மேலே புரண்டு இளைஞன்போல குதூகலித்தார்.

சியம்பா தன்னிடம் கேட்டதையும், தான் சியம்பாவுக்கு கூறியதையும் அமீனிடம் கூறிச் சிரித்தாள். அமீன் தன்னை சித்திரவதை செய்ததாக கூறியதை மட்டும் கூறவில்லை. அவள் சியம்பாவிடம் கூறியதில் அதுமட்டும் தான் உண்மை.

"பெண்களிடம்தான் சியம்பா போன்றவர்கள் மனதைத் திறப்பார்கள். அதுவும் உன்னைப்போன்ற அழகியிடம் எதையும் மறைக்கவே மாட்டார்கள்!" என்று கண்சிமிட்டிவிட்டு, அவளை கட்டியணைத்துக் கொண்டான்.

மலைப்பாம்பு ஒன்று உடம்பைச் சுற்றி இறுக்குவதுபோல அமீனின் அணைப்பில் திணறினாள்.

இறுக்கம் தாங்காமல் அவளாக கெஞ்சும் வரை கட்டியணைத்தபடி இருப்பான். கெஞ்சினால்தான் தளர்த்துவான்.

"என்னிடம் உண்மையைக்கூறு, சியம்பா கில்லாடியா?" என்று கேட்டான் அவள் காதோடு தன் உதடுகளை உரசிக்கொண்டு.

"இந்தப் பிடி ஒன்று போதாதா? நீங்கள் கில்லாடிக்கு கில்லாடி" என்று கூறியபடியே ஒருவிதமாக பிடியில் இருந்து நழுவி மூச்சு விட்டாள்.

"உன் போன்ற பெண்கள் மூச்சுவிடுவதை இரசிப்பதற்காகவே என் ஆட்சியில் பாதியைத் தரலாம்." என்று அவன் பார்த்த பார்வையில், ஆட்டை ஓநாய் பார்க்கும் பார்வையின் சாயல் இருந்தது.

கலாசார அமைச்சராக இருந்து பதவி விலக்கப்பட்ட எங்கர் மௌனமாக இருந்தார்.

எங்கர் லாங்கி இனத்தைச் சேர்ந்தவர். அந்த இனத்தவர்களான படையினரையும், அதிகாரிகள் பலரையும் வேட்டையாடியவன் அமீன்.

## தருவது ரசிகன்

தங்கள் இனத்தை வேட்டையாடும் அமீனுடன் கைகோர்த்து, அவன் வீசிய பதவி என்னும் எலும்புத்துண்டை சாப்பிட்ட எங்கருக்கு நேர்ந்த கதியை எண்ணி லாங்கி இனத்தவர்கள் மகிழ்ந்தனர்.

தனக்கு தன் இனத்தில் மதிப்பு இல்லாததால் பதவி இழந்த பின்னர் எங்கர் எக்கருத்தும் கூறவில்லை.

எங்கரின் மௌனம் இடி அமீனின் உளவுப் பிரிவுக்கு சந்தேகம் ஏற்படுத்தியது.

"ஏதோ திட்டத்தோடுதான் எங்கர் மௌனமாக இருக்கிறார்" என்று அமீனுக்கு தகவல் கூறப்பட்டது.

எங்கரை கண்காணிக்க நியமிக்கப்பட்ட உளவாளிக்கு அது சலிப்பான வேலையாக இருந்தது.

அவனுக்கு கம்பாலா நகரில் இருந்து எட்டத்தில் உள்ள தன் குடும்பத்தினரை சென்று பார்க்க வேண்டும். அதற்கு இந்த கண்காணிப்பு வேலை உபத்திரவமாக இருந்தது.

அதனால் அவன் கற்பனையான தகவல் ஒன்றை தன் மேலதிகாரிகளுக்கு அனுப்பினான்.

"இரவு நேரங்களில் எங்கர் வீட்டுக்கு லாங்கி இன இளைஞர்கள் வந்துபோகிறார்கள். சதித்திட்டம் தீட்டப்படுகிறது!"

அந்த அறிக்கை அமீனிடம் சென்றது

லாங்கி இனத்தாரை நம்பவேகூடாது. நம்புவதாக கூறலாம், நம்பக்கூடாது. எங்கரை கைதுசெய்து விசாரியுங்கள். உண்மையைக் கூறாவிட்டால் சொர்க்கத்திற்கு வழியனுப்பி வையுங்கள்" என்று கூறிவிட்டான் அமீன்.

எங்கர் கைதானார். எப்படி விசாரித்தும் அவர்கள் அறிய நினைத்த தகவல்கள் அவரிடம் இருந்து வரவில்லை.

அப்படி எதுவும் இருந்தால்தானே வருவதற்கு. எங்கர் பொய் சொல்கிறார் என்று உளவுப்பிரிவு நினைத்தது.

"மிகப் பொல்லாத ஆள் எங்கர். யாரும் இப்படி உண்மை சொல்லாமல் முரண்டு பிடித்ததில்லை. அதனால் இவரை விட்டு வைப்பதே ஆபத்து" என்றது புலனாய்வு அறிக்கை.

"நல்ல நேரம் பார்த்து சுட்டுக் கொன்றுவிடுங்கள்" என்று அமீன் கூறிவிட்டான்.

எங்கர் கொல்லப்பட்டார். அவர் சிறையில் கொல்லப்பட்ட தகவல் அவரது குடும்பத்தினருக்குக்கூட உடனடியாக தெரியப்படுத்தப்படவில்லை.

அமைச்சர்களுக்கு இச் செய்தி எப்படியோ எட்டியிருந்தது.

தன் செயலாளரான அழகியை அமீனிடம் பறிகொடுத்தவர் கல்வியமைச்சர் எட்வட்ருகு.

அவருக்கு காதலி ஒருத்தி இருந் தாள். அந்தக் காதலிக்கும் அமீனால் ஆபத்து வரலாம் என்று பயந்தார்.

அரச அலுவலாக மொம்பாகா நாட்டுக்கு சென்ற கல்வி அமைச்சர் திரும்பிவரவேயில்லை.

"அப்படியா? அந்தாள் போகட்டும். அந்தாளின் காதலி மிக அழகாக இருப்பாளாமே, எங்கே?" என்றான் கண்களில் ஆர்வமுடன் அமீன்.

பதில் அமீனுக்கு கோபத்தைக் கொடுத்தது.

"முன்கூட்டியே அவளை நாட்டை விட்டு அனுப்பி விட்டுத்தான் போயிருக்கிறார்" என்று கூறியதும், முகம் சிவந்து, மேசையில் ஓங்கிக் குத்திய குத்தில், பதில் சொன்ன அதிகாரி பயந்து போனார்.

அந்த அமைச்சரை கண்காணிக்க நியமிக்கப்பட்ட புலனாய்வு அதிகாரிக்கு வேலை போனது.

கல்வி அமைச்சரிடம் இருந்து அமீனுக்கு ஒரு தந்தி வந்திருந்தது.

"இரத்த ஆறு பெருக்கெடுத்தோடும் ஒரு நாட்டில் காலடி எடுத்து வைக்க எனக்கு விருப்பமில்லை" என்று தெரிவித்திருந்தார் அமைச்சர்.

"வெளியே செல்ல கால்களே இல்லாமல் பண்ணியிருப்பேன். அவன் இரத்தத்தில் சூப் போட்டு குடித்திருப்பேன். தப்பிவிட்டான். அவன் காதலி கிடைத்திருந்தாலாவது கொத்துக் கறி போட்டிருக்கலாம்!" என்று திட்டித் தீர்த்தபடி தந்தியை சுக்கு நூறாக கிழித்து வீசினான்.

உடனடியாக அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டினான். அனைவரும் நடுங்கிக் கொண்டே கூட்டத்திற்கு வந்தனர்

"உங்களில் யாருக்காவது அமைச்சர் பதவியில் இருந்து விலக விருப்பம் இருந்தால், இப்போதே எழுந்து ஓடிவிட வேண்டும். இரகசியமாக ஓட முயன்றால் எவர் தலையும் தப்பாது!" என்று தன் தொண்டை நரம்புகள் புடைக்க கத்தினான் அமீன்.

அசாதாரண அமைதி அங்கு குடிகொண்டிருந்தது.

ஒரேயொரு அமைச்சர் மட்டும் எழுந்தார். "நான் பதவி விலக விரும்புகிறேன்" என்றார்.

அமீனின் புருவம் உயர்ந்தது. அவன் எண்ணத்தை முகம் காட்ட மறுத்தது.

"வேறு யாராவது விரும்புகிறீர்களா?" என்றான்.

ஏனைய அமைச்சர்கள் "இல்லை, இல்லை" என்றனர்.

"கூட்டம் இத்தோடு கலைகிறது. இராஜினாமாவை சமர்ப்பிக்க நீர்மட்டும் நில்லும்" என்றான், விலக விரும்பிய அமைச்சரிடம்.

அடுத்த சில நிமிடங்களில் அங்கு ஒரு விபரீதம் உருவாகவிருந்தது.

(இடி தொடரும்)

# ஆடம்பரத்துக்காக கொலைகள்



நான்கு கொலைகள், பன்னிரண்டு கொலை முயற்சிகள், இரண்டு வழிப்பறிகள், இரண்டு ஆள் கடத்தல்கள் என்று குற்றம் மேல் குற்றம்.

யார் அந்த ஆள் என்று பொலிஸ் வலைவீசித் தேடி, ஒருவிதமாக மடக்கிப்பிடித்தது.

பிடித்ததும் செமர்த்தியான அதிர்ச்சி. பிடிபட்டது ஒரு அழகி, பிரபல மொடல் அழகி. இச்சம்பவம் பாரிசில் நடந்துள்ளது.

மொடல் அழகியின் பெயர் பிளாரன்ஸ்ரே. இருபத்து மூன்று வயதான எடுப்பான அழகி.

"மலையேறும் வீரனான ஆட்ரி மாவ்பின்னைக் காதலித்து கல்யாணம் செய்து கொண்டேன். இரண்டு பேரும் சேர்ந்து ஆடம்பரமாக வாழ முடிவு செய்தோம். முடியவில்லை. ஆட்ரி கலவரம் ஒன்றில் கொல்லப்பட்டுவிட்டான். மொடலிங் செய்து சம்பாதித்த பணம் வசதியாக வாழப் போதவில்லை. அதனால்தான் இப்படி இறங்கினேன்" என்று கண்ணீர் வழிய வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார் அழகி.

சபலப் பேர்வழிகளான பணக்கார ஆண்களை மயக்கி பெரும் பணத்தை கடனாக வாங்கிவிட்டு, அவர்களை தீர்த்துக் கட்டிவிடுவாராம். கூலிக்காகவும் சில கொலைகளை கச்சிதமாகச் செய்துள்ளாராம்.

# நான் யார்? நீங்கள் யார்?



இலண்டனைச் சேர்ந்த 40 வயதான ஸ்டிபானிக்கு மூன்று பிள்ளைகள். கணவர் விமான பைலட்.

குதூகலமாக நகர்ந்து கொண்டிருந்த குடும்ப வாழ்வில் ஸ்டிபானிக்கு வயிற்றுவலி உருவில் வந்தது பிரச்சனை.

வயிற்றுவலி என்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவரை சோதித்துப் பார்த்த போது டாக்டர்களுக்கே அதிர்ச்சி.

'அக்யூட் இன்டர்மிட்டென்ட் பொர்பிரியா' என்றழைக்கப்படும் மறதிக்குணம் கொண்ட நோய் இருப்பது தெரியவந்தது.

அதற்குள் கோமா நிலையில் விழுந்தார் ஸ்டிபானி. 'இனிமேல் பிழைப்பது கஷ்டம்' என்று கூறினாலும் ஏழு வாரங்களாக போராடினார்கள் டாக்டர்கள்.

முயற்சிக்கு பயன் இருந்தது. கோமா நிலையில் இருந்து மீண்டார் ஸ்டிபானி.

ஆனாலும் தான் யார்? தன் குடும்பம் யார்? என்பதை மறந்துவிட்டார்.

அற்புதமாக சமைப்பார். குடும்பத்தை ஒழுங்காக நிர்வகிப்பார். நளினமாக உடையணிவார். இப்போது எல்லாமே மறந்துவிட்டது.

கணவரும், பிள்ளைகளும் அன்புடன் பராமரிப்பதால்தான் கொஞ்சம் தேறி வருகிறார். என்றாலும் இழந்த நினைவுச் சக்தி முழுதாக திரும்ப வாய்ப்பில்லை.

# வாரிசு வேண்டும்



எகிப்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானி ஒருவரும் பேராசிரியர் ஒருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

"நான் செய்து கொண்டிருக்கும் ஆராய்ச்சி முடியும்வரை குழந்தை பெற்றுக் கொள்ளமாட்டேன். சம்மதமா?" என்று கேட்க, பேராசிரியரும் சம்மதித்தே திருமணம் நடந்தது.

திருமணத்தின் பின்னர் ஆராய்ச்சி ஆராய்ச்சி என்று மனைவி அலைய, தவித்துப் போனார் பேராசிரியர். மனைவியை மெல்ல அணுகியிருக்கிறார்.

'ஆராய்ச்சி முடித்த பின்னர்தான் எல்லாம். இப்போது கிடையாது!' என்று கறாராகச் சொல்லிவிட்டார் மனைவி.

பொறுமை இழந்த கணவர் நீதிமன்றத்தில் முறையிட்டார். அவரது புலம்பலை செவிமடுத்த நீதிபதி மனமிரங்கி, "முதலில் கணவரைக் கவனியுங்கள். பின்னர் ஆராய்ச்சியை பார்க்கலாம்" என்று தீர்ப்புக்கூறி விட்டார்.

# நஷ்டஈடு தேவை



போல் ஷிம்கோனிஸ் என்பவர் லேசாக மது அருந்த அமெரிக்கா மதுபான விடுதிக்கு சென்றார்.

அங்கு விடுதிகளில் கவர்ச்சியான அழகிகள் இருப்பார்கள். வாடிக்கையாளர்களுடன் குறும்பு பண்ணுவார்கள்.

போல் ஷிம்கோனிஸ் நாற்காலியில் அமர்ந்ததும் அழகி ஒருத்தி வந்து அவர் மடியில் அமர்ந்தாள். அவ்வளவு தான் அவளை உதறிவிட்டு எழுந்த போல் விடுதி நிர்வாகத்தோடு சண்டை போடத் தொடங்கிவிட்டார்.

"நஷ்டஈடு கொடுத்தால்தான் இடத்தை விட்டு நகருவேன். என் முகத்தை காயப்படுத்திவிட்டாள்" என்று கூச்சல் போட்டார்.

"நான் முத்தம்கூட தரவில்லையே எப்படிக் காயப்படுத்தியிருக்கலாம்" என்று கவர்ச்சிப் பெண் கேள்வி எழுப்பினாள்.

"அவள் தன்னுடைய அழகை எடுப்பாகக் காட்ட உலோக மார்பு உடை அணிந்திருக்கிறாள். அது என் முகத்தை குத்தி காயப்படுத்திவிட்டது" என்று கூறினார் போல்.

விடுதி நிர்வாகம் அவரது கோரிக்கையை ஏற்க மறுத்ததால் போல் நீதிமன்றம் சென்றார். நஷ்டஈடு வழங்க உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றம்.

# புகைக்கும் பெண்கள்



புகை பிடிக்கும் பெண்களின் தொகை உலகில் அதிகரித்து வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

அமெரிக்கா. பிரிட்டன் போன்ற வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் 10 ஆண்களில் 4பேரும், 10 பெண்களில் 02 பேரும் புகைபிடிக்கின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் ஆறு இலட்சம் கோடி சிகரெட்டுக்கள் உலகில் விற்பனையாகி வருகின்றன.

இந்தப் புள்ளி விபரங்களை வெளியிட்டுள்ள அமெரிக்க சஞ்சிகை, புகைபிடிக்கும் பெண்கள் பலர் போதை வஸ்துகளை நாடுவதாகவும், செக்ஸ் ஆர்வம் உள்ளவர்களாக இருப்பதாகவும் கூறுகிறது.

அதிக புகைபிடிக்கும் ஆண்களுக்கு செக்ஸ் ஆர்வம் குறைந்துவிடுகிறது. நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்களும் ஏற்படுகின்றன என்றும் தகவல் வெளியிட்டுள்ளது.

# அந்தப்புர மாணவிகள்



இந்தியாவில் தமிழ் நாட்டில் நெல்லையில் தாதிகள் பயிற்சிக் கல்லூரி நடத்தியவர் மீரான் மைதீன்.

தாதிகளாக வேலை பெற்றுத் தருவதாகச் கூறி பல மாணவிகளுடன் பாலியல் உறவு வைத்திருக்கிறான்.

தனது அந்தப்புரநாயகிகள் போல மாணவிகளை வைத்திருந்து இம்சைப்படுத்தியிருக்கிறான்.


பிரேமானந்தா பாணியில் மாணவிகள் குளிப்பதையும் இரகசியமாக இரசித்திருக்கிறான். வீடியோப்படம் எடுத்துமுள்ளான்.

பாதிக்கப்பட்ட சில மாணவிகள் புகார் கூறியதால் மீரான் மைதீன் கைது செய்யப்பட்டுள்ளார். திடுக்கிடும் தகவல்களும் வெளியாகி வருகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## கொழு கொழு



தற்போது உலக சாதனைக் குழந்தையாக பெயர் பொறித்திருப்பது இந்தக் குழந்தைதான். ஸாக் ஸ்ரேண்கேட் என்பது பெயர். அமெரிக்காவைச் சேர்ந்தது.

கொழு கொழு என்று இருக்கிறது. மள மளவென்று புட்டி புட்டியாக பாலைக் குடிக்கிறது.

17 மாதக் குழந்தையாக இருக்கும்போது எடுத்த படம் இது. எடை 31.75 கிலோ. அதாகப்பட்டது 100 இறாத்தல் இது. 14 வயதில் இருக்க வேண்டிய எடை. தூக்கிக் கொஞ்சுவதற்கு பலர் அஞ்சுகிறார்கள். மூச்சுப் பிடித்தல்லவோ தூக்க வேண்டும்! ■

## நீள முடி

**தா**ய்லாந்தின் சியாங் மெங் மாகாணத்தைச் சேர்ந்த மக்களில் ஆண்கள் பரம்பரை பரம்பரையாக நீளமான தலை முடிகளை வளர்த்து வருவார்கள்.

அங்கு வாழும் நூற்றுக்கணக்கான நீண்ட முடிக்காரர்களில் ஒருவர் ஹூசயெலோ என்பவர். 70 வருடங்களாக அவர் வளர்த்துவரும் தலை முடியின் நீளத்தை ஆறுபேர் சேர்ந்து அளக்கிறார்கள். நீளம் எவ்வளவு தெரியுமா? ஆக 5.5 மீட்டர் (16 அடி 10 அங்குலம்) (வாசகிகளும் பிரமித்துப்போய் இருப்பீர்கள்தானே.)

தாய்லாந்தில் மிக நீளமான முடிக்காரர் என்ற பெருமை இந்த அண்ணாச்சிக்குத்தான்! ஆனால் உலக சாதனை இதுவல்ல. இந்தியாவைச் சேர்ந்த மாதா ஜெகதாம்பா (74) என்பவரது முடியின் நீளம் 6.4 மீட்டர் (21 அடி) இந்த முடிச் சாதனையை யாரும் முறியடிக்க முடியவில்லை. ●





## கையோடு வரும்

**மி**ஸ்டர் ஜிங்பொங் ரயில் நிலையம்வரை சைக்கிளில் சென்றுவிட்டு பின்னர் சைக்கிளை மடித்து கையில் வைத்தபடி ரயிலில் பயணத்தை தொடர்கிறார். சக பயணிகளுக்கு தொந்தரவாக இருக்குமே என்று எண்ணுகிறீர்களா? அதுதான் இல்லை.

இதன் மொத்த எடை ஆறரைக்கிலோ. வசதியாக மடித்து வைத்துக்கொள்ளலாம். ஜப்பான் உற்பத்தி. அவர்களுக்கு இருக்கிறது தொழில் நுட்ப புத்தி. ■

## காதுக்குள் ஓசை

வயலின் மீட்டுவோரையும் இரசிக்கவைக்கும். அந்த மீட்டும் ஒலியை கேட்பவர்களையும் இரசிக்க வைக்கும். ஆனால் இங்கு இவர் வைத்துள்ள வயலின் மீட்டுகிறவருக்கு மட்டும் காதுக்குள் கேட்கும். ஏனையோருக்கு கேட்கவே கேட்காது.




வயலினில் உள்ள எயார் ஃபோன் வழியாக இசை காதுக்குள் செல்கிறது. ஏனையோருக்கு இடையூறு இல்லாமல் வயிலின் பயிற்சி பெற இது உதவும். ஜப்பானின் யமஹா கம்பனி இந்த எஸ்.வி.110 என்னும் சைலண்ட் வயலினை தயாரித்துள்ளது. ■

## பொம்முக்குட்டி

**வி**த்தியாசமான பொம்மையாக்கும் என்று நினைத்தால் ஏமாந்து போவீர்கள். ஏன் தெரியுமா? இது உருளைக்கிழங்கு!

மூக்கு, கண்கள், காதுகள் எல்லாம் தத்ருபமாக பொம்மை போன்றே காட்சியளிப்பதால் இது அபூர்வ உருளைக்கிழங்காக இடம்பெற்றுவிட்டது. இயற்கையின் விசித்திரங்களில் இதுவும் ஒன்று. ●



## தகவல் பெட்டி





## ஹையா ஹையா பாம்பப்பா

**ஹை**யா ஹையா பாம்பப்பா என்று இவர் கையில் தூக்கி விளையாடுகிறார் பாருங்கள். ரப்பர் பாம்பைக் கையால் பிடிக்கக்கூட எமக்கு கூசும். நிஜப்பாம்பை பிடித்து விளையாடுகிறார்.

அமெரிக்கரான ஜோன்சனின் செல்லமான இந்த மலைப்பாம்பின் நீளம் 12 அடி.

இவர் என்னதான் செல்லம் கொஞ்சினாலும் அக்கம் பக்க வீடுகளில் உள்ளோர் பயங்கர பயத்தில் பொலிசில் புகார் சொல்வதால் பலவீடுகள் மாறி மாறி குடியிருக்கிறார். அப்படியிருந்தும் 'என் செல்லத்துக்காக என்ன கஷ்டமும் அனுபவிக்கலாம்' என்கிறார் கொஞ்சமும் அசராமல். ●

## எம்மாம் பெரிசு!

**கா**ளான்தான் இது. ஆனால் உலக சாதனைக் காளான். சாதனைக்கு காரணம் இதன் அளவு. அளவெடுத்துக் காண்பிக்கிறார் பாருங்கள். இந்த இராட்சத காளானின் மொத்த சுற்றளவு 76 அங்குலம். மொத்த எடை 21 இறாத்தல். ■



படிப்பகம்

திரையுலக மறுபக்கம் 75

# மீண்டும் சந்தித்த காதல் ஜோடி

## எம்.ஜி.ஆருக்கு விழுந்த சூடு

தமிழ்ப் பட நடிகர், நடிகைகள் பலர் வேற்று மொழிக்காரர்கள். தமிழக சஞ்சிகை ஒன்றில் பெரிய பட்டியலே போட்டிருந்தார்கள்.

ரஜினிகாந்த்-மராத்தியர், நெப்போலியன்-தெலுங்கர், அர்ஜுன்-கன்னடர், பிரபுதேவா-கன்னடர், பாக்யராஜ்-தெலுங்கர், மம்முட்டி-மலையாளி, ஜெமினி கணேசன்-தெலுங்கர், ஊர்வசி-மலையாளி, ரம்பா-தெலுங்கு, ரோஜா-தெலுங்கு, சிம்ரான்-பஞ்சாபி, நக்மா-மராத்தி, ரேவதி-மலையாளி, ஐஸ்வர்யாராய்-வங்காளி, சுஷ்மிதா சென்-வங்காளி, சித்தாரா-மலையாளி என்று பட்டியல் நீள்கிறது.

### மீண்டும் சந்திப்பு

திலக நடிகரின் வாரிசும், பூ நடிகையும் வெளிப்புறப் படப்பிடிப்புக்காக தங்கியிருந்த ஹொட்டலில் எதிர்பாராத விதமாக சந்தித்தனர்.

பூ நடிகைக்கு கண்கள் கலங்கிவிட்டன. சுந்தரமான காதலருடன் மூன்றெழுத்து நடிகை விவகாரத்தில் பூ நடிகைக்கு சிறு மனத்தாங்கல். அந்த நேரம் பார்த்து தன் முன்னாள் காதல் துணைவரைக் கண்டதும் உணர்ச்சிவசப்பட்டுவிட்டார்.

திலக வாரிசான மூன்றெழுத்து நடிகரும் நடிகையைக் கண்டதும் திக்குமுக்காடிப்போனார்.

கண்ணும், கண்ணும் கொள்ளையடிக்க, பழைய நினைவுகள் மின்னலடிக்க, தன் ரூமுக்கு வருமாறு அழைத்தார் திலக வாரிசு.

நடிகையும் தயங்காமல் அவரைப் பின் தொடர்ந்தார். ரூமுக்குள் சென்றதும் பூ நடிகையை வாரியணைத்துக் கொண்டார் நடிகர். நடிகையும் அவரது மார்பில் முகத்தைப் புதைத்து குலுங்கிக் குலுங்கி அழுது தீர்த்துவிட்டார்.

ஏ.சி ரூமாக இருந்தபோதும் இயற்கை காற்றை சுவாதிப்பதற்காக ஏ.சியை நிறுத்திவிட்டு, சன்னல்களை திறந்துவைத்திருந்தார் நடிகர்.

பூ நடிகையும், நடிகரும் மெல்ல மெல்ல தம்மை மறந்து தழுவலில் சுகம் கண்டு கொண்டிருப்பதை சன்னல் வழியாக கண்டுவிட்டார் துணை நடிகை ஒருவர்.

ஈருயிரும், ஒருடலுமாக இருவரும் மெய் மறந்து போயிருந்ததால் சன்னலையும் மறந்து விட்டனர். பூ நடிகை வாரிசு நடிகரின் கழுத்தை வளைத்து அவரது உதடுகளில் ஆவேசமாக முத்தமிட்டுவிட்டுத்தான் பிரியாவிடை பெற்றாராம்.

இந்த சமாச்சாரம் படப்பிடிப்புக் குழுவினருக்கு துணை நடிகை மூலம் தெரியவர, 'அந்த நாள் ஞாபகம்' பாட்டுப்பாடி வாரிசு நடிகரை கிண்டலடிக்க வழிந்து கொண்டிருந்தார்.

### எம்.ஜி.ஆருக்கு சூடு

1967ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 'பேசும் படம்' என்னும் தமிழக சஞ்சிகையில் வெளிவந்த செய்தி:

"சென்ற மாதம் 12ம் திகதி இரவு சென்னை நகரிலும், ஏன் தமிழ்நாடு முழுவதும் ஒரே பரபரப்பு. மக்கள் திலகம் எம்.ஜி.ஆரை, எம்.ஆர்.ராதா துப்பாக்கியால் சுட்டுவிட்டார். பின்னர் தன்னைத்தானே இரு முறை துப்பாக்கியால் சுட்டுக்கொண்டதாகச் செய்தி வந்தது.

யாவரையும் திடுக்கிட வைத்த இந்தச் செய்தி பொய்யாகிப் போய்விடக் கூடாதா? என்று வேண்டாதவர்களே கிடையாது. ஆனால் அருவருக்கத்தக்க அந்தச் சம்பவம் உண்மையில் நடந்துவிட்டது துரதிஷ்டமாகும்.

எம்.ஜி.ஆர், எம்.ஆர்.ராதா இருவருமே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருவருமே பிழைத்துக் கொண்டனர். தற்போது எம்.ஜி.ஆர். உடல் தேறி வருகிறார்.

## ஒன்பது எழுத்து

டி.ராஜேந்தர் இயக்கி நடித்து இசையமைத்து மற்றும் சகல பொறுப்புக்களையும் ஏற்றுள்ள படம் 'மோனிஷா'. இரண்டு வருடங்களாகியும் படம் வெளிவந்தபாடில்லை. அதனால் பெயரை மாற்றிவிட்டார். 'மோனிஷா என் மோனலிசா' என்று வைத்திருக்கிறார். புதிய பெயர் ஒன்பது எழுத்தில் வருகிறது. ஒன்பது எழுத்து தனக்கு ராசி என்பது அவரது நம்பிக்கை.

## ஃபிரான்ஸில் ப

அர்ஜுன்-மனி
ராலா இணைந்து ந
வன்' படத்தின் பட
ஃபிரான்ஸ் நாட்டில்
இதனையும் பி
படைக்கப்போகிறா
ஜுன், ஷங்கர்
திருப்புமுனை தந்த
டில் மேன். 'முதல்வல்
திருப்பமாக
இருக்குமாம்.








## காதோடு சொல்லுகிறோம்

மலையாளப் பக்கம் சென்றுவிட்டு தமிழில் கவர்ச்சி காட்ட வந்துள்ள பிரியமான நடிகை படு விவரமான ஆளாக மாறிவிட்டார். தன்னுடன் தமிழில் நடித்துவரும் 'பா' நடிகரையும், கன்னக்குழி அழகரான மூன்றெழுத்து 'பி' நடிகரையும் கைக்குள் போட்டுக்கொண்டாராம். பகலில் படப்பிடிப்பில் பந்தா காட்டுகிறார். இரவில் தனது கடற்கரையோர மதுபான விடுதி வசதியுடன் கூடிய பங்களாவில் லூட்டியடிக்கிறாராம்.

தமிழக முதல்வரின் பவள விழாவில் இசைஞானி வைரமான கவிஞரை மறைமுகமாகச் சாடிவிட்டார். எப்படி பதிலடி கொடுக்கலாம் என்று யோசித்து வருகிறாராம் வைரமான கவிஞர்.

உச்ச ஸ்டாரின் புதிய படத்தில் சிம்ம நடிகையை போடத்தான் முதலில் தீர்மானிக்கப்பட்டதாம். உச்சநடிகருக்கும் சிம்ம நடிகையை போடத்தான் விருப்பம். ஆனால் இயக்குபவர்தான் தலையிட்டு தடுத்தாராம். ஏற்கனவே இரண்டு படங்களில் அதே இயக்குநர் சிம்ம நடிகைக்கு வாய்ப்புக் கொடுத்தார். படத்தின் ஹீரோக்களை மட்டும் அனுசரித்த சிம்ம நடிகை, இயக்குநரின் விருப்பத்தை பூர்த்தி செய்யவில்லை. அதுதான் உரிய நேரம் பார்த்து பழிவாங்கிவிட்டார் இயக்குநர்.

'கா' நடிகரை பூவின் பெயர் கொண்ட இரண்டெழுத்து நடிகை புகழ்ந்து பேசுவதை மணியான இயக்குநரால் தாங்க முடியவில்லை. 'என்னை வெறுப்பேத்தாதே!' என்று எச்சரிக்கை விடுத்தும், நடிகை 'கா' நடிகரின் புராணம் பாடுகிறார். போதாக்குறைக்கு சமீபத்திய படத்தில் கடும் நெருக்கமாக 'கா' நடிகருடன் நடித்தும் இருக்கிறார்.

## மினி சினி

- அதிக செலவில் பிரமாண்டமான படங்களைத் தயாரிப்பதில் பெயர் பெற்றவரான கே.டி.குஞ்சுமோன் அடுத்துத் தயாரிக்கவுள்ள படத்தில் விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.
- 'தினந்தோறும்' படத்தை இயக்கிய நாகராஜ் அடுத்து இயக்கும் 'ஆகாயம்' படத்தில் முரளி கதாநாயகனாக நடிக்கிறார். இப்படத்தில் முரளிக்கு ஜோடியாக சிம்ரானை நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளனர்.
- சத்ய ஜோதி ஃபிலிம்ஸ் பங்குதாரர்களில் ஒருவரான தியாகராஜன் தற்போது அஜித்குமார்-சிம்ரான் ஜோடியாக நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கிறார். இந்தப் படத்தை 'நினைத்தேன் வந்தாய்' இயக்குநர் செல்வபாரதி இயக்குகிறார்.
- கே.பாக்யராஜின் 'சுந்தர காண்டம்' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் சிந்துஜா. இப்போது இவரது தங்கை ருபிகா 'தாலாட்டும் பூங்காற்று' என்ற படத்தில் கதாநாயகியாக தமிழில் அறிமுகமாகிறார்.
- பேபி ஷாமிலி நடித்த 'தங்கப்பாப்பா' படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடித்தவர் பிரபல நடன இயக்குநரும், பிரபுதேவாவின் தந்தையுமான சுந்தரம். இவர் தற்போது 'எஞ்சினியர்' படத்தில் மாதுரி டிக்ஷித்திற்கு அப்பாவாக நடித்து வருகிறார்.
- அப்பாஸ் முதன் முறையாக நடிக்கும் மலையாளப் படத்தின் பெயர் என்ன தெரியுமா? 'பியானோ'.
- சுந்தர்.சி, இயக்கிய 'நாமிருவர் நமக்கிருவர்' படத்தில் ஒன்றாக நடித்த மீனாவும், மகேஸ்வரியும் 'வெளுகு நீடலு' என்ற தெலுங்குப் படத்தில் மறுபடி ஒன்றாக நடித்து வருகின்றனர்.
- லிவிங்ஸ்டன்-கௌசல்யா ஜோடியாக நடித்து வெற்றி பெற்ற 'சொல்லாமலே' இந்தியில் தயாராகவுள்ளது. தமிழில் லிவிங்ஸ்டன் நடித்த வேடத்தில் இந்தியில் நானா படேகர் நடிக்கவுள்ளார்.
- ரஜினியுடன் முதன் முதலாக 'தம்பிக்கு எந்த ஊரு' படம் மூலம் நடிக்கத் தொடங்கிய வினுச்சக்கரவர்த்தி இதுவரை ரஜினியுடன் சேர்ந்து 25 படங்களில் நடித்துள்ளார்.

## பொற்கால ஜோடி

முரளி, மீனா ஜோடி பொற்காலம் படத்தில் அசத்தியிருந்தது. தற்போது வெளியாகியுள்ள தேசிய கீதம் படத்திலும் மீனாதான் நடிப்பதாக இருந்தது.

சேரனுக்கும் மீனாவுக்கும் இடையே படு நெருக்கம் என்று செய்தி பரவியதால், மீனாவுக்கு பதிலாக ரம்பாவை நடிக்க வைத்தார் சேரன்.

தற்போது வின்சென்ட் செல்வா இயக்கும் படம் ஒன்றில் மீனாவும் முரளியும் ஜோடியாகிறார்கள். விஜய் நடித்த ப்ரியமுடன் படத்தை இயக்கியவர் வின்சென்ட் செல்வா.

படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்தான் முரட்டு ரகமாக இருக்கிறது. 'வாட்டாக்குடி இரணியன்' என்று பெயர் சூட்டியுள்ளனர். இரணியனாக முரளி நடிக்கிறார். நாசர், ரஞ்சித் உட்பட பல முன்னணி நட்சத்திரங்கள் நடிக்கவுள்ளனர்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

பிடிப்பு
கொய்
கும் 'முதல்
டிப்புக்கள்
கவுள்ளன.
ண்டமாக
ங்கர். அர்
வருக்கும்
டம் ஜென்
ன்னொரு

## தங்கைக்கு ஒரு வாய்ப்பு

பாரதிராஜா அறிமுகம் செய்த நடிகைகள் சோடை போனதில்லை. விதிவிலக்கு ராஜஸ்ரீ. 'கருத்தம்மா' படத்தில் கதாநாயகியாக நடித்தார். படம் மகா வெற்றி. அப்படியிருந்தும் ராஜஸ்ரீக்கு தகுந்த வாய்ப்பில்லை.

இயக்குநர்கள் கதை விவாதத்துக்காக பிரபல ஹொட்டல்களில் ரூம் போடுவார்கள். அங்கு கம்பனிகொடுக்க தயங்காமல் சம்மதிப்பவர் ராஜஸ்ரீ. அப்படி வளைந்தும், நெளிந்தும், குனிந்தும், பணிந்தும் நடந்தும்கூட போதிய வாய்ப்புக்கள் வரவில்லை.

அதனால் தனது தங்கையை கதாநாயகியாக்க தனக்கு நெருக்கமான இயக்குநர்களிடம் அலைந்து கொண்டிருக்கிறார் ராஜஸ்ரீ.

'உன் தங்கையை அனுப்பு. டிஸ்கஷன் பண்ணுகிறோம்' என்று கேட்கும் இயக்குநர்களிடம், "அவள் ரொம்ப சின்னப் பொண்ணு. அவளுக்காக நான் டிஸ்கஷன் பண்ண வருகிறேன்" என்று கூறிச் சமாளிக்கிறாராம்.




## முகப்பில்

குஷ்பு

பிரகாஷ்ராஜ்

இந்து

## உன்னைத் தேடி

'உன்னைத் தேடி' படத்தில் அஜித் ஜோடிகளாக லைலா, சுவாதி ஆகியோர் நடிக்கின்றனர். வான்மதி படத்தில் அஜித் ஜோடியாக நடித்த சுவாதி அவரைக் காதலித்து ஏமாந்த கதை பரகசியம். இருவரும் பழையதை மறந்துவிட்டு தொழில் ரீதியாக இணைகின்றனர். இயக்கம் சுந்தர்-சி.

## பிளாஸ்டர் தேவி

ஸ்ரீதேவி இப்போது கணவர் கூடவே எங்கும் ஆஜராகிறார். கணவர் போனி கபூருடன் பல பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார். அப்படிக் கலந்துகொள்ளும்போது கணவரின் தோளை இடித்து இடித்து ஒட்டிக் கொள்கிறாராம்.

ஸ்ரீதேவியின் இந்த இடி நெருக்கத்தை பார்த்ததும் அவருக்கு மும்பாய் பட உலகில் ஒரு பட்டம் சூட்டிவிட்டனர். பிளாஸ்டர்!

## அப்பா–அம்மா–விஜய்

விஜய் பற்றி இரண்டு செய்திகள்.

50 கிலோ தாஜ்மஹாலான ஐஸ்வர்யாராயுடன் ஒரு படத்தில் நடிக்கப்போகிறார். படத்தை விஜய்யின் தந்தையான எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்குகிறார். இப்படம் இந்தியிலும் வெளியாகும்.

அம்மா ஷோபா சந்திரசேகர் இயக்கும் படத்திலும் விஜய் நடிக்கிறார். இது விஜய்யின் சொந்த தயாரிப்பு. இரண்டு படங்களுக்கும் இன்னமும் பெயரிடப்படவில்லை.

வருங்கால சூப்பர் ஸ்டார், இளைய தளபதி என்றெல்லாம் விஜயைப் புகழும் ரசிகர்களுக்கு சிறு ஏமாற்றம். தீபாவளிக்கு விஜய் படம் எதுவும் வரவில்லையே. அதுதான்.

## சினி விசிட்




விஜயகாந்த்-ரோஜா
படம்: வீரம் வெளைஞ்ச மண்ணு



செல்வா- மோனிகா நெருக்கம்
படம்: கோல் மால்

## பிரபுவின் இரு நாயகிகள்

இரண்டு நாயகிகளுடன் நடிப்பது என்றால் குசிதான். ஜாலிதான். ரசிகர்களுக்கும் தங்கள் ஹீரோவை இரண்டு அழகான ஹீரோயின்கள் பாடாய் படுத்துவதைக் காண உற்சாகம்தான் என்று கூறுகிறார் பிரபு.

குஷ்புக்கு பின்னர் பிரபுவுக்கு பொருத்தமான தனி ஜோடி கிடைக்கவில்லை. அதனால் ஒன்றுக்கு இரண்டாக ஜோடிகளை சேர்த்துக்கொண்டு ரசிகர்களுக்கு உற்சாகமளிக்கிறார் பிரபு.

இரண்டு நாயகிகளுடன் ஜோடி சேர்ந்த படங்களில் பிரபுவுக்கு பிடித்த படம் 'மாப்பிளைக் கவுண்டர்.' சாக்ஷி, சுவாதி இருவரும் ஜோடிகள். இருவரும் இருவேறு தினுசாக அசத்திவிட்டனர் என்கிறார்.

## சூப்பர் நெருக்கம்

'சீமைப்பசு' என்று பார்த்திபனால் பட்டம் சூட்டப்பட்டு, பார்த்திபன் உள்ளத்தையும், உடலையும் கொள்ளையடித்தவர் ரவளி. இப்போது தெலுங்கில் சூப்பர் நடிகர் ஒருவருடன் சூப்பர் நெருக்கத்தில் இருக்கிறார்.

"தேக வனப்பு இருந்தும், நடிப்பு திறன் இருந்தும் பயனில்லை. நெளிவு சுழிவுகளும் தெரிந்தால்தான் சினிமா உலகில் முன்னேற்றம் வசப்படும்" என்கிறார். எல்லாம் அனுபவம்தான்.



திலீப்-ஷாலினி
படம்: நிலவே உனக்காக

## அழகர்கள்

விஜயகாந்த் நடிக்கும் படத்திற்கு 'கள்ளழகர்' என்று பெயர் சூட்டிய பின்னர், சத்யராஜ் நடிக்கும் படத்திற்கு 'அழகர்சாமி' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

இரண்டு படங்களும் ஒரே சமயத்தில்தான் திரைக்கு வரப் போகின்றன. இதில் இன்னொரு பொருத்தம் என்னவென்றால், விஜயகாந்தின் தந்தையின் பெயர் அழகர்சாமி.

## மருதநாயகி

மருதநாயகம் படத்தின் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகியும் கதாநாயகி யார் என்பது மட்டும் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது.

அப்படியிருந்தும் தகவல் கசிந்துவிட்டது. கமலுக்கு ஜோடியாக நடிக்கும் ஃபிரெஞ்சு அழகியின் பெயர் பாருக்தாரா. அவர் எப்படி இருப்பார் என்பதை வெண்திரையில் தான் காணவேண்டும் என்கிறார்கள்.

## குஷ்பு ஏன் இல்லை?

இயக்குநர் கஸ்தூரி ராஜாவுக்கு குஷ்புவில் ஒரு பிரியம். தனது படங்களில் குஷ்பு நடித்தால் ஹிட்டாகும் என்ற நம்பிக்கையும் உள்ளவர்.

அப்படியாகப்பட்ட கஸ்தூரிராஜாவின் படமான என் ஆச ராசாவில் குஷ்பு நடிக்கவில்லையே ஏன்? சிவாஜி நடித்ததால் குஷ்புவை தியாகம் செய்ய வேண்டிய கட்டாயம் கஸ்தூரி ராஜாவுக்கு.

பிரபு-குஷ்பு சமாச்சாரத்தில் சிவாஜிக்கு குஷ்பு மீது மகா கோபம். குஷ்பு நடிப்பதாக தெரிந்தால் அவர் நடிக்கவே சம்மதித்திருக்கமாட்டார். அதனால்தான் குஷ்புக்கு கட். அப்படியிருந்தும் படம் ஹிட்.


படிப்பகம்

## ஜயசிக்குறுய் தொடர்கிறது

பனைகளின் தேசம் போரில் வீழ- புதிய
பாதைகள் தோன்றி வன்னியில் முடிந்தன
ஆறு பிரிந்தது கண்ணனின் காவியம்- இங்கே
கிளாலி பிரிந்தது தமிழரின் காவியம்!

▫▫▫

கண்ணீர் மழையில்காளான் முளைத்ததாய்-வன்னி
காடுகள் முழுவதும் குடிசைகள் பூத்தன
மக்களின் மனதில் மகிழ்ச்சியும் இல்லை-அவர்கள்
மண்டியிடவும் விரும்பவும் இல்லை!

▫▫▫

வானம் பார்த்து வயல் செய்த மக்கள்
வானம் பார்த்து பங்கர்கள் தேடினர்
நதிகள் அலைந்து திரியும் வன்னியில்
நம்மவர் அலைந்துவாழ்வை தேடினர்!

▫▫▫

ஆட்டிலறி மேகங்கள் செல்மழை பொழிய
அரண்களில் தெரிந்தது மரணத்தின் வாசல்
உயிர்களின் நாணய பெறுமதி குறைய
வன்னி வயல்களில் உடல்களின் அறுவடை

▫▫▫

காட்டு மண்ணில் அடிமரவேர்கள்
குருதியை குடித்துசுவைத்து மகிழ்ந்தன
இலைகளின் உடலும் துளைகளைத் தாங்க
இதழ்விட்ட பூக்களில் குருதியின் வாசனை!

▫▫▫

ஆயுத கடலில் முத்துக்குளித்து
அரச இராணுவம் வெற்றியைத் தேட
அமைதி மட்டும் மறைந்து நின்று
அரசியல்வாதியை மனதுள் சபித்தது!

▫▫▫

புளியங்குளமும் மாங்குளமும்
போரில் உழலும் நகரங்களாகின
குளங்கள் தேடி யானைகள் போக
முதலைகள் சேர்ந்து முற்றுகை போட்டன!

▫▫▫

பாதை திறப்பு முடிவுறும்போது-அதில்
மண்டையோடுகள் ஊர்வலம் நடத்தும்
பாதை திறப்பு முடிவுறும்போது-அதை
பிணங்கள் மட்டும் கைதட்டி இரசிக்கும்.

ஆர். முரளீஸ்வரன்- மட்டக்களப்பு.

தேன்கிண்ணம்

## சுமை தாங்கிகள்

பொழிவதில்
வானம்
பொய்த்தாலும்
விமானம்
பொய்ப்பதில்லையே..

••

சமாதானத்திற்காக
சமாதிகள்தான்
எத்தனை..?

••

இங்குள்ள
தாவரங்கள்
உறிஞ்சியது,
இரத்தமும் பிண
உரத்தையுமல்லவா..?

••

சொத்திழந்து
சொந்தபந்தமிழந்து
ஆறுதல்
கூறுவதில்கூட
"யாருக்கு யார்?"
என்ற கேள்வி..!

••

இயற்கைக்கு
இரக்கம்
அதிகம்தான்-
இந்த
மனிதரிலும் பாரக..!

••

நம் தேசத்தை
இலகுவில்
இனங்காணலாம்-
அதன் நிறம்
சிவப்பல்லவா..?

••

நாங்கள்
சுமக்கும் சிலுவை
இறக்கப்படுமா?
இல்லை
இறுக்கப்படுமா..?

••

'சமாதானம்'
என்று சொல்வதற்கே
உதடுகள்
ஒட்டிக்கொள்ள
வேண்டுமே...!

இணுவையூர்.
இராகுலன்.

## ஓயாத மூச்சு

மழைவரப்போகுது...
மழை வரப்போகுது...
கெதியாத்தோண்டி-எங்களை
சரியாய்ப் பாருங்கோ!

••

கந்தையார்ர மகளும்
கணபதியின் மருமகனும்
செல்வத்தின்ர அவரும்
செபஸ்ரியாம் பிள்ளையும்...
ஓங்கிவிடும் மூச்சு
ஒருத்தருக்கும்
கேக்கேல்லையோ.....?

••

பாவிமக்கள்
மண்டையில்
பக்குவமாய் போடும்போது
கூவி நாங்கள்
போட்ட குரல்
சாதிசனம்
ஒருத்தருக்கும்
சத்தியமாய்
கேட்கேல்லையோ?

••

ஆச்சி நாங்கள்- வந்து
ஆட்சி செய்தமெண்டால்
பூச்சி புழுக்கூட
புரத்தால வராதெண்ட
நாசமறுப்பாருக்கு
நல்லா கேட்குதோடா?

••

அவுஸ்திரேலியாவில-
உங்கட
அவையள்;
கனடாவில- உங்கட
கடைக்குட்டியள்;
செம்மணியில்
நாங்கள் மட்டும்
செத்தெல்லோ போனம்...!

••

ஓ.எல். எடுத்துப்போட்டு
ஒரு தொகை பக்கத்தில்
ஏ.எல். எழுதிப்போட்டு
எத்தனைபேர்
ஏக்கத்தில்....
தோண்ட நாதியில்லை
உங்கள்
இயக்கத்தில்!

••

ஆவி ஓயும்வரை
பாவி
நான் கத்துவேன்
மேவி
தண்ணி நிண்டாலும்
மெதுவாய் முணங்குவேன்
ஓடிவந்து
எங்கட ஏக்கம்
பாருங்கோடா- இல்லாட்டி....
கந்தப்பு கடையில
கழுத்துக்கு
கயிறு- என்ர
கணக்கில
வாங்குங்கோடா!!

பாலகமலன்-வவுனியூர்.

# யுத்த நிர்வாணம்



இரண்டாம் உலக யுத்தத்தில் ஒரு காட்சி இது. துப்பாக்கியுடன் நிற்பது அமெரிக்கப் படைகள்.
யுத்தம் ஆளை மட்டுமல்ல, வாழ்க்கையையும் நிர்வாணமாக்கிவிடும். யுத்தம் எல்லாவற்றையும் ஆம், மனிதப் பண்புகள் உட்பட அனைத்தையும் உருவிக் கொள்கிறது. எங்கும் யுத்தத்தின் குணம் ஒன்றுதான்.

## பேனா நண்பர்கள்



பெயர்: வி. ஆனந்த்.
வயது: 19
முகவரி: 10/4, உமையாள்புரம், உவர்மலை, திருகோணமலை.
பொழுது போக்கு: பேனா நட்பு, பத்திரிகை.



பெயர்: ஏ. சத்தியப்பிரியா
வயது: 19
முகவரி: வேவெல்ல குறூப், வேவெல்ல டிவிஷன், பதுளை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

## இந்த வாரம் உங்கள் பலன்

(01.11.1998 தொடக்கம் 07.11.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

துலாம் — சூரியன், சுக்கிரன்.
விருச்சிகம் — புதன்.
சிம்மம் — செவ்வாய், ராகு.
கும்பம் — குரு, கேது.
மீனம் — சனி.
சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

| (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பணச் செலவு. | காலை 7 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| புதன்- எதிர்பார்த்த நன்மை, மன மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், மன நிம்மதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், மனச் சஞ்சலம். | பி.ப. 1 மணி |
| சனி- இனசன வருகை, குடும்ப சுகம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்:

| (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், பண வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்-அதிஷ்டதிசை, கௌரவம். | மு.ப. 10 மணி |
| புதன்- அரச பீதி, மனச் சஞ்சலம். | பகல் 11 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், நிம்மதி. | மாலை 6 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, பொருட் செலவு. | பி.ப. 2 மணி |
| சனி- இனசன வருகை, பணச் செலவு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்:

| (கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, அலைச்சல். | பி.ப. 1 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், செலவு அதிகம். | காலை 7 மணி |
| வெள்ளி- மனச்சஞ்சலம், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- இனசன நன்மை, மனத்துயர். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்:

| (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், பொருள் வரவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, செலவு அதிகம். | பகல் 12 மணி |
| புதன்- எதிர்பார்த்த நன்மை, நல்லோர் இணக்கம். | பகல் 11 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், மன நிம்மதி. | காலை 8 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், கௌரவம். | மு.ப. 10 மணி |
| சனி- தொழில் மந்தம், பலவிதபேறு. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்:

| (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால) | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பண வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- பெரியோர் உறவு, மன நிம்மதி. | பகல் 12 மணி |
| புதன்-உடல் நலம் பாதிப்பு, பணச் செலவு. | காலை 8 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பலவிதபேறு. | மாலை 6 மணி |
| வெள்ளி- ஆலயதரிசனம், உறவினர் வரவு. | பி.ப. 3 மணி |
| சனி- இனசன நன்மை, குடும்ப மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்:

| (புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்) | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வீண்துறை கேட்டல, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், மனக்கிலேசம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, பணச்செலவு. | மாலை 6 மணி |
| வியாழன்- இனசனச் சேர்க்கை, மன மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| சனி- பொருள் வரவு, பிரயாண மிகுதி. | பாகல் 12 மணி |

அதிஷ்டநாள்-ஞாயிறு, அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்:

| (உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பணவருவாய். | பகல் 11 மணி |
| செவ்வாய்- மனமகிழ்ச்சி, பணவரவு. | மாலை 6 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வியாழன்- பெரியோர் உறவு, மன நிம்மதி. | மாலை 5 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், பணச்செலவு. | காலை 7 மணி |
| சனி- புதிய முயற்சி, இனசன வருகை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### சிம்மம்:

| (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்ச்சி, பணச்செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் வாக்குவாதம், மனச்சஞ்சலம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. 9 மணி |
| வியாழன்- ஆலயதரிசனம், நிம்மதி. | மாலை 6 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | மு.ப. 9 மணி |
| சனி- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### தனு:

| (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இல்லச் சிறப்பு, மன மகிழ்ச்சி. | மாலை 6 மணி |
| திங்கள்- உறவினர் வருகை, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரியத் தடை. | பி.ப. 3 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், கௌரவம். | பகல் 11 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், தேகசுகம் நன்மை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், பாராட்டு. | காலை 8 மணி |
| சனி- தொழில் மந்தம், மனச் சஞ்சலம். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:

| (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, அலைச்சல். | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| புதன்- எதிர்பார்த்த நன்மை, புதிய சிந்தனை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, யோசனை. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், மன நிம்மதி. | பகல் 12 மணி |
| சனி- பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்:

| (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் உயர்வு, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| புதன்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வீண் வாக்குவாதம், சஞ்சலம். | மாலை 7 மணி |
| சனி- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்34

### கன்னி:

| (உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், மனக்கவலை. | பகல் 11 மணி |
| புதன்- தொழில் இலாபம், உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பொருள் வரவு. | மாலை 6 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், மன நிம்மதி. | பகல் 12 மணி |
| சனி- தேகசுகம் பாதிக்கும், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

# நகம் உடையுமா?



நம் கை, கால் விரல் நகங்கள் மெல்லியதாக இருப்பதால் எளிதாக உடைந்து விடுகின்றன. நகங்களைச் சரிவரப் பாதுகாப்பதற்குச் சில வழி முறைகளைப் பின்பற்றுவது இன்றியமையாததாகும்.

* அரம் போன்ற எஃகுக் கருவிகளால் நகத்தைத் தேய்க்கக் கூடாது. நகங்களில் உள்ள கெரட்டின் படலங்களை இவை சிதைத்து விடும்.
* மிருதுவான சாணைத்தாளினால் ஒரு பக்கத்தில் இருந்து மறுபக்கத்திற்குத் தேய்க்க வேண்டும்.
* நகங்களை நறுக்கும்போது, அவற்றின் பக்கங்களை நறுக்கக்கூடாது. இதனால் நகம் வளரும் வேகம் குறையக் கூடும்.
* நகத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பசைப்பொருட்களை நகத்தின் அடிப்பாகத்தில் தடவ வேண்டும்.

இவற்றைவிட நகங்களை முறையாகப் பாதுகாப்பதற்கு உணவில் கல்சியம் மிகுந்துள்ள பொருட்கள் அவசியம்.

உடல் ஆரோக்கியம் சீர் கெட்டால் நகங்கள் மிருதுவாகி எளிதாக உடைந்து விடும். உடல் நலம் குறைந்தால் நகத்தில் கோடுகள் உண்டாகும்.

வயிற்றில் அமிலத்தன்மை அதிகமாக இருந்தால் நகத்தில் வெண்புள்ளிகள் தோன்றும்.

# நேரத்தோடு–அளவோடு



நம் உடலுறுப்புக்களின் இயக்கத்திற்கும், நாம் வேலை செய்வதற்கும் வேண்டிய ஆற்றலை அளிப்பது நாம் உண்ணும் உணவேயாகும். அது சரியான முறையில் சமிபாடு அடையாவிட்டால் நமது உடல் இயங்குவதற்குத் தேவையான சக்தி கிடைக்காது. அத்துடன் உடலில் கோளாறுகளும் ஏற்படும்.

எனவே ஒவ்வொருவரும் கீழ்க்காணும் பழக்கத்தைக் கடைப்பிடித்தால் மிகச் நல்லது!

1. உணவுப் பழக்க வழக்கங்களை சீராக அமைத்துக் கொள்ளுதல்.
2. நேரத்துடன் உண்ணுதல்.
3. அளவோடு உண்ணுதல்.
4. அவசரமாக அள்ளி அடைக்காமல் நிதானமாக மென்று உண்ணுதல்.
5. உண்ணும்போது அளவுக்கதிகமாக நீர் அருந்தாமல் இருத்தல்.
6. உண்ணும்போது கோபம், கவலை கொள்ளாதிருத்தல்.
7. உணவில் எண்ணெய்ப் பொருட்களை அதிகம் சேர்க்காதிருத்தல்.
8. உணவுண்டதும் உடனே படுக்கைக்குச் செல்லாமலிருத்தல்.
9. உண்டவுடன் பளுவான வேலைகளைச் செய்யாமலிருத்தல்
10. உணவருந்தியதும் வயிறு எதோ ஒரு மாதிரி இருக்கிறதென்று சோடா, ஜிஞ்சர்பீர் போன்றவற்றை அருந்தாமலிருத்தல்.

## மினி யோசனைகள்

### தலைவலியா?

சுக்கு, மிளகு, இரண்டையும் சம அளவில் கொஞ்சம் எடுத்து, ஒரு தேக்கரண்டி பால் விட்டு அரைத்து நெற்றிப் பொட்டிலும், மூக்கின் மேலும், நெற்றியின் மத்தியிலும் தடவினால் 15 நிமிடத்திற்குள், கடுமையான தலைவலியாக இருந்தாலும், பறந்துவிடும்.

□□□

### உடல் வலியா?

புளியம் இலைகளைத் தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்த பின் அதை ஆறவிட்டு, வெதுவெதுப்பாக ஆனதும், அதில் குளித்துப் பாருங்கள், உடல் வலி எல்லாம் மறைந்துவிடும்.

●●●

### வாய்ப்புண்ணா?

வாய், உதடு, நாக்கில் சிறு புண்கள் வந்தால் கவலைப்படவேண்டாம். மணத்தக்காளி இலை அல்லது துளசி இலை ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைப் பறித்து சுத்தம் செய்து, வாயில் போட்டு மென்று தின்றால் புண்கள் மாயமாய் மறைந்து விடும்.

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலை பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்:--→

**செல்வி எம். விஜயலட்சுமி**
**இல. ஜே.21, நவகம்புர,**
**ஊறுகொடவத்தை**


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EQ

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

**உண்மை–நேர்மை–வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 07-11-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 59

புவனா

## மாயமான மோதிரம்



சாள்ஸும், டயானாவும் தற்காலிகமாக பிரிந்திருந்தால் மறுபடி ஒன்று சேரும் மனமாற்றம் ஏற்படலாம் என்று அரச குடும்பத்திற்கு நெருக்கமானவர்கள் நினைத்திருந்தனர்.

அந்த நினைப்பு பொய்த்தது. மேலும் விரிசல்கள் அதிகமாகினவே தவிர, மனமாற்றம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் எதனையும் காணவில்லை.

விவாகரத்து ஏற்படுமானால் டயானாவின் எதிர்பார்ப்பு என்னவென்று கேட்டபோது, அவர் உடனடியாகக் கூறியது இதுதான்:

"எனது பிள்ளைகளை மட்டும் நான் பிரிந்துவிடாமல் இருப்பதற்கு வழிசெய்தால் போதும். வேறு எதுவும் எனக்கு வேண்டாம்!"

மிஷ்கொன் பிரபு தலைமையில் செயற்பட்ட சட்ட வல்லுநர் குழு, டயானா அரச குடும்பச் சொத்தில் பங்கு கேட்க வேண்டும் என்று கூறியது.

அவ்வாறு எதுவும் கேட்காமல் பிரிந்து போனால் அரச குடும்பத்தினர் டயானாவை வெகுளி என்று கேலியாக நினைப்பார்களே தவிர, பெருந்தன்மை என்று நினைத்துக் கொள்ளப்போவதில்லை எனவும் டயானாவின் சட்ட வல்லுநர்கள் எடுத்துக் கூறினார்கள்.

டயானாவின் சிநேகிதிகளும் "நியாயமாக உனக்கு சேரவேண்டியதை விட்டுக் கொடுக்காதே!" என்று கூறினார்கள்.

டயானாவும் அது பற்றி யோசிக்கத் தலைப்பட்டார்.

இதற்கிடையே ஒருநாள் தனது மகன் வில்லியமுடன் மத்திய இலண்டனிலுள்ள பிரபல உணவு விடுதி ஒன்றுக்குச் சென்றார் டயானா.

அங்கு ஒரு மஜிக் வித்தைக்காரர் வித்தைகள் காட்டிக்கொண்டிருந்தார்.

டயானாவும், வில்லியமும் அவர் செய்து காட்டிய வித்தைகளை ஆவலோடு பார்த்து இரசித்தனர்.

வித்தைக்காரர் டயானாவிடம் வந்து அவரது மோதிரத்தைத் தருமாறு கேட்டார்.



டயானாவின் திருமண மோதிரம்

தனது திருமண நாளன்று சாள்ஸ் அணிவித்த மோதிரத்தைக் கழற்றிக்கொடுத்தார் டயானா.

சாள்ஸ்- டயானா திருமணத்தில் வெகு பிரபலமாகப் பேசப்பட்ட மோதிரம் அது.

நிரந்தரமாக விவாகரத்துப் பெற்றபின்னர் அதனைக் கழற்றலாம் என்று விட்டிருந்தார் டயானா.

அந்த மஜிக்காரர் கேட்டதும் கழற்றிக் கொடுத்து விட்டார்.

அந்த மோதிரத்தை ஒரு கைக்குட்டைக்குள் சுற்றினார் மஜிக்காரர்.

உடனடியாகவே கைக்குட்டையை உதறினார்.

உதறப்பட்ட கைக்குட்டைக்குள் மோதிரத்தைக் காணவில்லை.

அதனைக் கண்ட டயானா, "நல்ல தாய்ப் போயிற்று!" என்று வாய்விட்டு உரத்து கூறியபடி பலமாகச் சிரித்து விட்டார்.

பின்னர் மஜிக்காரர் மோதிரத்தைக். கொடுக்க டயானா அதை அணிந்து கொண்டார்.

### குற்றச்சாட்டு

ஒரு வாரத்திற்கான டயானாவின் செலவு மூவாயிரம் பவுண்ஸ் என்றும், டயானா ஊதாரித்தனமாகச் செலவு செய்வதாகவும் பத்திரிகை ஒன்றுக்கு சாள்ஸ் தெரிவித்திருந்தார்.

இளவரசி சாராமீதும் இப்படியான குற்றச்சாட்டுக்கள் முன்பு அரச குடும்பத்தால் சுமத்தப்பட்டன.

சாராவுக்கு மக்களிடம் செல்வாக்கு இல்லாமையால் அக் குற்றச் சாட்டுக்கள் எடுபட்டன. சாராமீது மக்கள் வெறுப்புற்றனர்.

டயானாவை மட்டம் தட்டவும் 'ஊதாரித்தனமானவர்' என்ற குற்றச் சாட்டு பயன்படும் என்று கருதினார் சாள்ஸ்.

டயானாவின் மதிப்பை இறக்குவதற்கு எத்தனையோ முயற்சிகள் செய்த சாள்ஸின் மற்றொரு முயற்சி இது.

பத்திரிகையில் குற்றச்சாட்டு வந்ததும் டயானா பதில் கொடுத்தார்.

தனது சட்டவல்லுநர்களுடன் கலந்தாலோசித்துவிட்டு, அவர்கள் கூறியதையே பத்திரிகைகளுக்கு தெரிவித்தார்.

"நான் இளவரசர் சாள்ஸிடம் இருந்து பிரிந்து வாழும் அவர் துணைவி. நான் பிரச்சனைக்குரிய ஒருத்தி என்று அவர்கள் கருதுகிறார்கள். மிக முக்கியமான இந்த சாம்ராஜ்ஜியத்துள் பிரதானமான இரு பிள்ளைகளின் தாய் நான். அதனால் எனக்கு முக்கியமான கடமைகளும் உள்ளன!" டயானாவை மட்டம் தட்டும் இந்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

### எதிர்ப்பிரசாரம்

அரச குடும்பத்துப் பெண்கள் தங்கள் கணவர்மாருடன் ஏற்பட்ட பிரச்சனைகளை



வெளியே கூறியுள்ளனர்.

தொலைக்காட்சிகளில் தோன்றி தங்கள் கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

சாள்ஸும், அரச குடும்பமும் டயானாமேல் அவதூறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக் கொண்டிருந்தனர். டயானாவும் தனது கருத்துக்களை, தொலைக்காட்சியில் தோன்றிக் கூறலாம் என்று அவரது சிநேகிதிகள் கூறினார்கள்.

பி.பி.சி. தொலைக்காட்சி ஊடாக உலகம் எங்கும் டயானாவின் கருத்தை எட்டவைக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டனர்.

தனது பேட்டியால் பிள்ளைகள் இருவருக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் பற்றி ஆழமாக யோசித்துவிட்டு முடிவு செய்வதாக டயானா கூறி இருந்தார்.

### கமீலா பார்க்கர்

இக்காலகட்டத்தில் சாள்ஸின் காதலி கமீலா பார்க்கர் பற்றிய சுவையான தகவல்களை சேகரித்து பத்திரிகைகள் வெளியிட ஆரம்பித்தன.

இலண்டனின் பிரபல பத்திரிகை ஒன்று பின்வருமாறு எழுதியது:

"நள்ளிரவு தாண்டிய வேளை. தொழில் காரணமாக கணவன் வெளியே எங்கோ சென்றுவிட்டார். தன்னுடைய காதலனுடன் அந்தரங்க உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள அதனையே தக்க தருணமாகக் கொள்வார் கமீலா.

1992ம் ஆண்டில் ஒரு நாள் இரவு ஆறே ஆறு நிமிடங்கள் தொலைபேசியில் நடத்திய காதல் உரையாடல் அபாரமானது.

அதே போல் அடிக்கடி தொலைபேசியூடாக- எழுத்தில் வடிக்கவியலாத வார்த்தைப்பிரயோகங்களை இருவரும் பரிமாறிக்கொள்வார்கள்.

இங்கிலாந்து நாட்டின் கிரீடத்தை தனது தலையில் சுமக்கப்போகும் ஒருவர், தன் காதலியின் அங்க அளவுகளையும், அதுபற்றிய அபிப்பிராயங்களையும் உணர்ச்சி ததும்ப வர்ணித்துக் கொண்டிருக்கிறார்.

நள்ளிரவில் கமீலாவின் தனிமையைப் போக்கி தொலைபேசி உரையாடல் மூலமே இன்பக் கிறக்கத்தை ஊட்ட வல்லவராக இருக்கிறார் இளவரசர்.

கமீலாவும் 40 வயதில் 20 வயதுக்குரிய உடல்வாகுடன் காட்சி அளிப்பவர். தொலைபேசி உரையாடல்களில் உணர்ச்சி ததும்ப தன் எண்ணங்களைக் கொட்டுகிறார்.

கமீலா பற்றி நமது நிருபர் திரட்டிய ருசிகரமான தகவல்களை தருகிறோம்!" என்று அப்பத்திரிகை அவற்றை வெளியிட்டிருந்தது.

அவை என்ன தகவல்கள் என்பதை அடுத்தவாரம் பார்க்கலாம்.

**(அடுத்த வாரமும் வரும்)**

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## வெள்ளவத்தை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**த. விக்னேஸ்வரி,**
42, பாமன்கடை வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்

இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு- அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 25

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
* தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.






www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com





மூட நெஞ்சே! முப்பது கோடி
முறையுனக் குரைத்தேன்; இன்னும் மொழிவேன்;
தலையிலிடி விழுந்தால் சஞ்சலப் படாதே!
ஏது நிகழினும் 'நமக்கென்?' என்றிரு!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# அவனா முட்டாள்?

அழகனும், அறிவனும் ஒரு பாடசாலையில் 5ம் ஆண்டு படிக்கும் மாணவர்கள்.

ஒருநாள் அவர்கள் இருவரும் தமது கிராமத்தில் இருக்கும் ஏரியின் அருகே சென்று கொண்டிருந்தார்கள். அந்த ஏரிக்கரையின் அருகே இருந்த சிறிய மரங்களில் மஞ்சள் நிறத்தில் அழகான பழங்கள் பழுத்துத் தொங்கின.

இவற்றைக் கண்ட அழகன் ஓடிப் போய் இரண்டு பழங்களைப் பறித்தான். அந்த இரண்டில் ஒன்றை அறிவனிடம் கொடுத்து, "சாப்பிடுவோமா?" என்று கேட்டான்.

"அழகாகவும், நிறமாகவும் இருந்தால் அது நல்ல பழம் என்று நினைப்பதும், அதைச் சாப்பிடுவதும் முட்டாள்தனம். எதற்கும், அதோ அந்த ஆடு மேய்க்கும் சிறுவனைக் கேட்டுப்பார்ப்போம்!" என்றான் அறிவன்.

"என்ன அறிவா, அந்த ஆடு மேய்க்கும் சிறுவன் எம்மைப் போல் படித்தவனா? எமக்குத் தெரிந்ததைவிட அவனுக்கு அதிகம் தெரியுமா? அவனிடம் போய்க் கேட்கச் சொல்கிறாயே?" என்று கேலியாகக் கூறிச் சிரித்தான் அழகன்.

"அழகா! நாம் தினமும் குடிக்கும் கோப்பியைக் கண்டுபிடித்தவர்களே ஆடு மேய்த்தவர்கள்தான். அதனால் அவர்களைக் குறைவாக மதிப்பிடாதே!" என்று கூறிவிட்டு ஆடுமேய்க்கும் சிறுவனிடம் அழகனையும் அழைத்துச் சென்றான் அறிவன்.



இவர்கள் இருவரின் கைகளில் இருந்த பழங்களைக் கண்டு ஆடு மேய்க்கும் சிறுவன், அப்பழங்களைத் தட்டி விட்டான். பின் அவற்றை ஒரு குழிதோண்டிப் புதைத்தான்.

வேகமாக ஓடிப்போய் அந்த ஏரியில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து இருவரது கைகளையும் நன்றாகக் கழுவிவிட்டான்.

"நல்லவேளை, என் கண்ணில் பட்டீர்கள். இந்தப்பழம் கொடிய விஷம் கொண்டது. இது எமது வாயில் பட்டாலே உயிர் போய் விடும்!" என்று சொன்ன ஆடு மேய்க்கும் சிறுவன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

அறிவன், அழகனைப் பார்த்து,

'ஆடு மேய்த்தால் அவன் முட்டாளா? அவனது அன்பைப் பார்த்தாயா? மற்றவர்களுக்குத் துன்பம் வராமல் காப்பாற்ற வேண்டும் என்ற மனித நேயத்தை அறிந்தாயா?' பார்வையிலேயே கேட்டான்.

'ஒரு அன்புள்ளம் கொண்ட நல்ல மனிதனை ஏளனமாகப் பேசி விட்டேன். என்னை மன்னித்து விடு!' என்று பார்வையாலேயே மன்னிப்புக் கேட்டான் அழகன்.

"கடவுளே! இரண்டு பேரைக் காப்பற்றினாயே, உனக்கு நன்றி" என்று ஆடுகளை மேய்த்தபடி சென்றான் அந்தச் சிறுவன்.

## அதிசயம் - ஆனால் உண்மை!



↑ நிலத்திலும், நீரிலும் வாழும் பீவர் என்ற விலங்கு, தண்ணீரில் இருக்கும்போது எதிரி விலங்குகளைக் கண்டு விட்டால், தனது வாலை தண்ணீரில் படபடவென்று அடிக்கும். இதைப் புரிந்து கொண்ட மற்ற பீவர்கள் பதுங்கித் தப்பிக்கொள்ளும்.

↓ கண்ணுக்குத் தெரியாத பக்டீரியாக்களின் உற்பத்தி வேகம் மிகவும் வியப்புக்குரியது. ஒரு பக்டீரியா 24 மணித்தியாலங்களில் ஒரு கோடி பக்டீரியாக்களை உருவாக்கி விடுகிறது.





↑ பண்டைய ரோமனியாவில் தொழிலாளர்களுக்கு சில சமயங்களில் சம்பளமாக உப்பு வழங்கப்பட்டது.

நத்தையின் வாயில் மொத்தம் 135 பல் வரிசைகள் உள்ளன. ஒவ்வொரு வரிசைக்கும் 105 பற்கள் வீதம் மொத்தம் 14,175 பற்கள் உள்ளன.



## வாரம் ஒரு நாடு

### எகிப்து



தலைநகர்- கெய்ரோ
பரப்பு - 9,97,677 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை - 2.29 கோடி
மொழி - அரபி, ஆங்கிலம்
எழுத்தறிவு - 44%
சமயம் - இஸ்லாம், கிறிஸ்தவம்
நாணயம் - பவுண்
தனிநபர் வருமானம் - 700 டொலர்.

**அமைவிடம்:**

வடகிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ளது. இதன் மேற்கே லிபியாவும்; தெற்கில் சூடானும்; கிழக்கில் செங்கடல் மற்றும் இஸ்ரேல் எல்லைகளாக அமைந்துள்ளன. வடக்குப் பகுதியில் மத்தியதரைக் கடலும் இடம்பெற்றுள்ளன.


**வரலாறு:**

பிரிட்டனின் முன்னைய காலனிகளுள் ஒன்று. 1922ல் சுதந்திரமடைந்தது. மன்னராட்சி. 1952ல் ஏற்பட்ட இராணுவப் புரட்சியின் பின் 1953ல் குடியரசானது. இஸ்லாமியத் தீவிரவாதம் நாட்டிற்குப் பெரிய அச்சுறுத்தல். மொத்த மக்கள் தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் 20 வயதிற்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**பொருளாதாரம்:**

பருத்தி, பெட்ரோலியம் போன்றவை முக்கிய ஏற்றுமதிப்பொருட்கள். உணவுற்பத்தி இன்னமும் தன்னிறைவு அடையவில்லை. அரிசி, கோதுமை, உருளைக் கிழங்கு இங்கு விளைவிக்கப்படுகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.11.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 269
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 267

**பரிசுக்குரியவர்:**
ஏ. வனராஜ்,
ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| தருமரெத்தினம் பிரபாகரன், மட்/கருதாவளை மகாவித்தியாலயம், கருவாஞ்சிக்குடி. | எம். பிரியந்தி, புனித அன்னம்மாள் மகளிர் ம.வி., கொழும்பு. |
| செல்வன் என். முஹமட் ஸியாத், அப்துல் மஜீத் வித்தியாலயம், சின்னக் கிண்ணியா. | கு. கௌதமி, செவிப்புலன் இழந்தோர் பாடசாலை, லிங்கநகர், திருமலை. |
| பேர்னாடேட் றுக்ஷிலா, நல்லாயன் கன்னியர் மடம், கொழு-13. | எம்.ஏ. உம்முகுல்தும் அஸ்னா, சாஹிரா சிறுவர் தேசிய பாடசாலை, புத்தளம். |
| இஸட்.ஏ. சித்தீக், கமு/அல் அஷ்றப் ம.வி., இறக்காமம். | சி. பாரத், தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. |
| வி. பிரசாந்தன், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு-03. | உ. சஜீவ், சென். ஜோன் பொஸ்கோ, அட்டன். |

## சொற்கள் வந்தது எப்படி?

**பட்ஜெட் (BUDGET)**

பட்ஜெட்டி என்ற ஃபிரெஞ்ச் வார்த்தையில் இருந்து வந்ததுதான் பட்ஜெட் என்ற சொல். பட்ஜெட்டி என்றால் நிதி அமைச்சர் தமது ஆவணங்களை வைக்கும் பெட்டி என்று பொருள்.

***

**பிஸ்கட் (BISCUIT)**

பிஸ்க்கோட்டாமா என்ற இலத்தீன் சொல்லில் இருந்து தான் பிஸ்கட் என்ற சொல் வந்தது. பிஸ்க்கோட்டாமா என்றால் இருமுறை சுட்டது என்று அர்த்தம்.

***

**மெடிசின் (MEDICINE)**

மெடிசின் என்ற சொல் மெடிக்கார் என்ற இலத்தீன் சொல்லில் இருந்து வந்தது. மெடிக்கார் என்றால் குணப்படுத்தும் பொருள் என்று அர்த்தம்.

***

**பஸ் (BUS)**


ஓம்னி பஸ் என்ற இலத்தீன் சொல்லில் இருந்து வந்தது தான் பஸ் என்ற சொல். ஓம்னி பஸ் என்றால் எல்லாவற்றிற்கும் என்று பொருள்.

***

**சிவல்ரி (CHIVALRY)**

குதிரை மீது அமர்ந்து சாதனை புரிவது சிவல்ரி என்பதாகும். இது சிவல் என்ற ஃபிரெஞ்சுச் சொல்லில் இருந்து வந்தது. சிவல் என்பதன் பொருள் குதிரை என்பதாகும்.

## ஸ்கை ஸ்க்ராப்பேர்ஸ் (SKY SCRAPERS)



**★ 'ஸ்கை ஸ்க்ராப்பேர்ஸ்' என்றால் என்ன?**
உலகில் உள்ள பெரிய நகரங்களில் காணப்படும் வானளவு உயர்ந்த கட்டடங்களை 'ஸ்கை ஸ்க்ராப்போஸ்' என்று அழைப்பார்கள்.

**★ முதல் வானுயர்ந்த கட்டடம் எங்கு கட்டப் பட்டது?**
அமெரிக்காவில் உள்ள சிக்காக்கோ நகரில் 19ம் நூற்றாண்டில் கட்டப் பட்டது.

**★ வானுயர்ந்த கட்டடங்களின் தந்தை யார்?**
வில்லியம் லி பேரன் ஜென்னி என்ற சிவில் எஞ்ஜினியர்.

**★ இந்த வானுயர்ந்த கட்டடங்கள் உருவாவதற்குக் காரணம் என்ன?**
இட நெருக்கடி, மற்றும் மக்கள் தொகைப் பெருக்கத்தால் நிலத்தின் விலை நாளுக்கு நாள் ஏறியதால் சில பொறியியலாளர்களின் மூளையில் உருவானதுதான் இந்தத் திட்டம்.

**★ உலகின் மிக உயரமான கட்டடம் எது?**
மலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூரில் அமைந்துள்ள பெட் ரோனஸ் டவர். இதன் உயரம் 451.9 மீட்டர்.

## பெரிய பூ



உலகிலேயே மிகப் பெரிய பூ என்ற பெருமைக்குரிய பூவின் பெயர் ரஃப்லீசியா. இதன் குறுக்களவு சுமார் ஒரு மீட்டர். இதன் நிறை 7 கிலோ. இப்பூவின் நடுவில் உள்ள கிண்ணம் போன்ற பகுதியில் 10 லீட்டர் தண்ணீர் ஊற்றலாம்.

செடியிலோ, மரத்திலோ இந்தப் பூ பூப்பதில்லை. இது ஒரு ஒட்டுண்ணி. இந்தப் பூ முழுமையாக வளர்ச்சியடைந்து மலர்வதற்கு ஒரு மாதம் ஆகும். முழுமையாக மலர்ந்தவுடன் ஓரிரு நாட்களில் வாடிவிடும்.

பல ஆசிய நாடுகள் இங்கிலாந்தின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தபோது, சேர் ஸ்டம்ஃபோர்ட் ராஃப்ல்ஸ் என்ற அதிகாரி இந்தோனேஷியாக் காடுகளுக்குச் சென்றபோது இந்தப் பூவைக் கண்டுபிடித்து, வெளியுலகிற்குத் தெரிவித்தார்.

சிறந்த தாவரவியல் நிபுணரான சேர் ராஃப்ல்ஸ் கண்டுபிடித்த காரணத்தால்தான் இப்பூ அவரது பெயரால் ராஃப் லீசியா என்ற பெயரால் அழைக்கப் படுகிறது.

இப்பூக்கள் இந்தோனேஷியாவின் சுமாத்திராக் காடுகளில் மட்டுமே காணப்படுகின்றன.

## தேனீ



* தேனீக்களுக்கு 5 கண்கள் உள்ளன.
* தேனீஒரு நாளைக்கு 60 கிலோ மீட்டர் தூரம் பறக்கும்.
* தேனீயால் புறஊதாக் கதிரைப் பார்க்க முடியும்.
* தேனீயால் 750 மீட்டருக்கப்பால் உள்ள பூவின் மகரந்தத்தை உணர முடியும்.
* தேனீ ஒரு மணி நேரத்தில் 800 பூக்களில் இருந்து தேனை எடுத்து விடும்.
* தேன் கூட்டைக் கட்ட ஒரு தேனீ 1 1/2 அவுன்ஸ் மெழுகைப் பயன்படுத்தும்.

## சிவப்பு நரி (RED FOX)



இங்கிலாந்து நாட்டின் மேற்குப் பகுதியில் இந்த நரி இனம் அதிகம் காணப்படுகிறது. மிகவும் குள்ளமாகக் காணப்படும் இந்நரி நிலத்திற்குக் கீழே வளை தோண்டி பதுங்கி வாழும்.

இந்த நரி வளைக்குள் இருந்து தனக்கு வரும் ஆபத்தை இலகுவாகக் கண்டு கொள்ளும். இதனால் இது மனிதர்களிடமோ அல்லது வேறு எதிரிமிருகங்களிடமோ சுலபத்தில் சிக்கிக் கொள்வதில்லை.


படிப்பகம்

www.padippakam.com

அட்டகாச ஆரம்பம்

# டிசம்பர் பௌர்ணமி

மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்

01

அந்த டிசம்பர் வெள்ளிக்கிழமையின் அதிகாலையில் பாலசூரியனின் ஆரஞ்சு வர்ணம் கொஞ்சம் அதிகமாய் ஒட்டியிருக்க பொழுது ஸ்லோமோஷனில் விடிந்து கொண்டிருந்தது. பாலிதீன் பைக்குள் போட்டு வைத்த பண்டம் மாதிரி சென்னை பனி மூட்டத்துக்குள் வசமாய் சிக்கியிருந்தது. விசுக்கென்று வீசிய காற்றில் இமயமலைச் சாரலின் குளிர்.

உல்லன் சால்வையைப் போர்த்திக் கொண்டு பங்களாவின் மாடியறை ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்த ருத்ரமூர்த்தி பின்பக்கம் காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினார். வாயில் பைப் புகைந்தது.

அவருடைய செகரெட்டரி பரசுராம் நின்றிருந்தார்.

"குட்மார்னிங் சார்."

பதிலுக்கு குட்மார்னிங் சொல்லாமல் வாயிலிருந்த பைப்பை எடுத்துவிட்டு கேட்டார்.

"ஏர்போர்ட்டுக்கு ஃபோன் பண்ணி கேட்டீங்களா?"

"கேட்டேன் ஸார்..."

"ஃப்ளைட் லேட்டா...?"

"ரைட் டைம் ஸார். ஷெட்யூல் டைம்படி செவன் ஃபார்ட்டி ஃபைவ்க்கு ஃப்ளைட் லாண்ட் ஆயிடும் ஸார்..."

"இப்போ மணி என்ன?"

"ஃபைவ் ஃபார்ட்டி ஸார்..."

"இங்கிருந்து ஆறரை மணிக்கு ஏர்போர்ட் கிளம்பிப் போனா போதும் இல்லையா?"

"போதும் ஸார்..."

"பேண்ட் வாத்திய கோஷ்டி எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருவாங்க?"

"ஏழு மணிக்கெல்லாம் வந்துடுவாங்க ஸார்..."

"பரசுராம்...."

"ஸார்..."

"என்னோட மகன் நித்தியன் ஒரு வருஷம் பூராவும் வெளிநாடுகளல்ல தங்கியிருந்து ஃபைபர் ப்ராடக்ட் தொழில் நுணுக்கங்களை கத்துக்கிட்டு வெற்றிகரமாக ஊருக்குத் திரும்பறான். அவனுக்கு தரப்போகிற விளம்பரமும் வரவேற்பும் அமர்க்களமா இருக்கணும்... என்னோட ஃப்ரண்ட்ஸ் சர்க்கிளிலேயும் சரி... ரிலேடிவ் சர்க்கிளிலேயும் சரி. எல்லாரும் அசந்து போற மாதிரி இருக்கணும்..."

பரசுராம் புன்னகைத்தார்.

"அதைப்பத்தி நீங்க கவலையேபட வேண்டாம் ஸார். அது சம்பந்தமா எல்லா ஏற்பாடுகளையும் நான் பண்ணிட்டேன். முக்கியமான நாலு தமிழ் டெய்லி பேப்பர்லேயும் ரெண்டு இங்கிலீஷ் பேப்பர்லேயும் கலர் ஃபோட்டோவோடு முழுப் பக்க விளம்பரம் கொடுத்துட்டேன். ஆள் உயர ரோஜா மாலை சரியா ஏழு மணிக்கு ஏர்போர்ட்டுக்கே வந்துடும்."

பரசுராம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அறையின் மூலை டீபாயில் இருந்த டெலிஃபோன் முணு முணுத்துக் கூப்பிட்டது.

"ஃபோன்ல யார்ன்னு பாருங்க.."

பரசுராம் வேகவேகமாய் போய் ரிஸீவரை எடுத்து செவிமடுத்துவிட்டு ரிஸீவரின் மவுத் பீஸை இடதுகை விரல்களால் பொத்திக்கொண்டு ருத்ரமூர்த்தியிடம் பவ்யமாய் சொன்னார்.

"ஸார் உங்களுக்கு சம்மந்தியாகப் போகிற விஜயராகவன் லைன்ல இருக்கார். உங்ககிட்ட பேசணுமாம்..."

ருத்ரமூர்த்தி ரிஸீவரை வாங்கி காதுக்கு ஒட்ட வைத்து "ஹலோ விஜய ராகவன்... குட்மார்னிங்..." என்றார்.

"குட்மார்னிங்! என்ன மகன் ஃபாரினிலிருந்து வரப்போற சந்தோஷத்துல இராத்திரி பூராவும் தூங்கவேயில்லை போலிருக்கே?"

"எப்படி தூக்கம் வரும். மகனைப் பார்த்து ஒரு வருஷம் ஆச்சே... நேத்து இராத்திரி பூராவும் ஒரு பொட்டு தூக்கமில்லை."

"உங்களுக்கு நேத்து இராத்திரி மட்டும் தான் தூக்கம் இல்லை. இங்கே என்னோட பொண்ணு விசாலிக்கு ரெண்டு வாரமா தூக்கம் கிடையாது. இருபத்திநாலு மணி நேரமும் அவ கையில உங்க சன் நித்தியனோடப் ஃபோட்டோதான்."

"என் மருமக அவ்வளவு பாசமா இருக்காளா?"

"அதையேன் கேக்கறீங்க ருத்ரமூர்த்தி. சதா சர்வகாலமும் அவளுக்கு நித்தியனோட பேச்சுதான்."

"ரெண்டு வருஷத்துக்கு முன்னாடியே இந்தக் கல்யாணம் முடிஞ்சிருக்க வேண்டியதுதான். எப்படியோ தள்ளி தள்ளிப் போயிட்டது..."

"இனியும் தள்ளிப் போடக்கூடாது. ருத்ரமூர்த்தி. உங்க பையன் வந்ததுமே கல்யாணப் பேச்சை ஆரம்பிச்சு முகூர்த்தத்துக்கு நாள் பார்க்க வேண்டியதுதான். நீங்க லேட் பண்ணினா மறுபடியும் உங்க பையன் வெளிநாட்டுக்கு கிளம்பிப் போயிடலாம்."

"இல்லை... இந்த தடவை கல்யாணம் தள்ளிப் போகாது. அடுத்த வாரத்துல ஒரு நல்ல நாள் பார்த்து நிச்சயதார்த்தம் நடத்திடலாம். கல்யாணத்தை தை மாசம் வைச்சுக்கலாம். என்னோட மருமக விசாலி பக்கத்துல இருக்காளா?"

"ம்... இங்கதான் இருக்கா..."



"பேசச் சொல்லுங்க..."

"இதோ..."

அடுத்த பத்தாவது விநாடி விசாலியின் சாக்லேட் குரல் கேட்டது.

"குட்மார்னிங் மாமா..."

"என்னம்மா விசாலி, எப்படியிருக்கே?"

"உங்க சன் இந்த மெட்ராஸ் மண்ணை மிதிக்கிற வரைக்கும் நான் சுகம் இல்லை மாமா."

ருத்ர்மூர்த்தி சிரித்தார். "இன்னும் ரெண்டே மணி நேரம்தான். நித்தியன் உன் பக்கத்துல இருப்பான்."

"மாமா...!"

"ம்..."

"எனக்கு ஒரு சந்தேகம்..."

"என்ன?"

"உங்க சன் வெளிநாட்டிலிருந்து வரும்போது இவதான் என் பொண்டாட்டின்னு யாரையாவது கூட்டிக்கிட்டு வந்துட மாட்டாரே?"

"சேச்சே! அவன் என்னோட புள்ளைம்மா..! அப்படியெல்லாம் விளையாட்டுக்குக் கூட கற்பனை பண்ணிப் பார்க்காதே... நித்தியன் உனக்குத் தான்னு ரெண்டு வருஷத்துக்கு முந்தியே நானும் உன்னோட அப்பாவும் பட்டா போட்டு வெச்சுட்டோம்."

"மாமா...!"

"என்ன?"

"நானும் ஏர்போர்ட்டுக்கு வரலாமா?"

"அதுக்குப் போய் நீ என்கிட்ட பர்மிஷன் கேட்கணுமா என்ன? தாராளமா வரலாம்."

"தேங்க்யூ மாமா... நானும் அப்பாவும் சரியா ஏழுமணிக்கு எங்க வீட்லயிருந்து கார்ல புறப்பட்டு ஏர்போர்ட்டுக்கு வந்துடறோம்."

"வாங்க... நான் லௌஞ்சுல வெயிட் பண்ணிட்டிருக்கேன்..."

ரிஸீவர்கள் சாத்தப்பட்டன.

★★★

ஏர்போர்ட்.

காலை மணி 7.25

பொன்னை உருக்கி நெய்தது போன்ற தினுசில் ஒரு பட்டுச்சேலையைக் கட்டியிருந்த விசாலி கொஞ்சம் அதிகப்படியான மேக்கப்பில் அமர்க்களம் செய்தாள். அவளுக்குப் பக்கத்திலேயே அப்பா விஜயராகவனும் அம்மா புவனேசுவரியும் டை அடித்த தலைகளோடு பிடிவாதமாய் இளமையைக் காட்ட முயற்சி செய்திருந்தார்கள். ஒரு பெரிய ஆள் உயர ரோஜா மாலையை ரெண்டு பேர் தாங்கிப் பிடித்தபடி தெரிய, பக்கத்திலேயே ருத்ரமூர்த்தி நின்றிருந்தார். வீசிக்கொண்டிருந்த காற்றில் ரோஜாவின் இதழ்கள் இலவசமாய் மணத்தன.

விசாலி மெல்ல பக்கத்தில் வந்து நின்று "மாமா" என்றாள்.

"என்னம்மா?"

"இந்த மாலையை அவருக்குப் போடப் போறது யாரு?"

"ஏம்மா நான்தான்..."

"நான் போடறேனே..."

"சரி...போடு...நான் போடறதைக் காட்டிலும் நீ போடறதுதான் நித்தியனுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்."

"அப்புறம்... இன்னொரு ரிக்வெஸ்ட் மாமா."

"என்ன?"

"வெளிநாட்டுக்கு போய் தொழில் நுணுக்கங்களைக் கத்துக்கிட்டு வெற்றிகரமாக திரும்பியிருக்கிற உங்க 'சன்' னுக்கு ஹொட்டல் 'சோழா'வில் ஒரு டின்னர் பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணி யிருக்கு."

"இதெல்லாம் எதுக்கும்மா...?"

"நோ... நோ...ஏற்பாடு பண்ணியாச்சு."

"என்ன விஜயராகவன் இது...?"

அவர் சிரித்தார்.

"எனக்கே தெரியாது ருத்ரமூர்த்தி. ஹோட்டலுக்குப் போய் எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிட்டு வந்து சொல்றா... கல்யாணத்துக்கு முன்னாடி அப்படியெல்லாம் பிஹேவ் பண்ணக்கூடாதுன்னு

க்ரைம் சக்கரவர்த்தி

**ராஜேஷ்குமார்**

அவளுக்குத் தெரியலை. எல்லாத்தையும் ஜோலியலா எடுத்துக்கற மாதிரி இந்தக் கல்யாணத்தையும் அதேமாதிரி எடுத்துக்கிட்டா. உங்களுக்கு இதுல இஷ்டம் இல்லேன்னா கான்ஸல் பண்ணிடலாம்."

"என்னது கான்ஸலா? நோ...நோ... நானும் நித்தியனும் டின்னர்ல கலந்துக்கறோம்... ஒகே..."

"தாங்க்யூ. மாமா."

செகரட்டரி பரசுராம் பக்கத்தில் வந்து நின்றார். "ஸார் ஃப்ளைட் இன்னும் பத்து நிமிஷத்துல லேண்ட் ஆயிடும்- ரிசப்ஷன்ல போய் கேட்டுட்டு வந்தேன்...."

காத்திருக்க ஆரம்பித்தார்கள். சரியாய் பத்தாவது நிமிஷம்.

கிழக்கு திசையின் ஒரு மூலையில் சின்னதாய் ஒரு வெள்ளிப்பறவை முளைத்து விநாடிக்கு விநாடி பெரிதாக ரன்வேயின் கோடியில் தன் ராட்சஸ உலோக முகம் காட்டி இறங்கியது.

ரன்வேயின் ஒரு கிலோமீட்டர் தூரத்தை விழுங்கி வேகம் குறைந்து நின்றது. விமானத்தின் இடுப்போடு படிகள் போய் ஒட்டிக்கொள்ள பயணிகள் இறங்க ஆரம்பித்தார்கள்.

ருத்ரமூர்த்தியின் பார்வை ஒவ்வொருவராய் தாவ பத்து பதினைந்து பயணிகளுக்குப் பிறகு நித்தியனின் முகம் தெரிந்தது.

கண்களில் பரவசம் காட்டி கைகளை அசைக்க... நித்தியனும் அசைந்தான்.

விசாலி இமைக்காமல் நித்தியனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுக் கேட்டாள்.

"மாமா...! உங்க சன் போன வருஷம் பார்த்ததைக் காட்டிலும் இப்போ கொஞ்சம் இளைச்சிருக்கார்."

"அவன் சாப்பிடற விஷயத்துல ரொம்பவும் மோசம். இனிமே நீதான் அவனைக் கவனிச்சுக்கணும்."

"எனக்கு ஆறே ஆறு மாசம் டயம் கொடுங்க மாமா. உங்க சன்னை எஸ்.பி. பாலசுப்ரமணியம் மாதிரி உங்க முன்னாடி கொண்டு வந்து நிறுத்தறேன்."

"இன்னியிலிருந்து அது உன்னோட பொறுப்பு"- 27 வயதுடன் அழகாய் இருந்த அந்த நித்தியன் கும்பலிலிருந்து பிரிந்து லௌஞ்சுக்கு வந்து ருத்ரமூர்த்தியின் காலைத்தொட்டு கும்பிட்டான்.

புன்னகையுடன் நிமிர்ந்தவனின் கழுத்தில் அந்த கனமான ரோஜா மாலை விழுந்தது. முகம் பூராவும் சிரித்த விசாலியிடம் கேட்டான்.

"எப்படியிருக்கே விசாலி?"

"ஃபைன்- நீங்க...?"

"டபுள் ஃபைன்!" சொன்னவன் பக்கத்தில் நின்றிருந்த விஜயராகவனையும் புவனேசுவரியையும் பார்த்து கும்பிட்டான்.

"அங்கிள்! ஆன்ட்டி... நல்லாயிருக்கீங்களா?"

"எங்க சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல் நித்தியன். நானும் உங்க அத்தையும் இப்பத்தான் புதுசா கல்யாணம் பண்ணிக்கிட்ட ஜோடிமாதிரி சந்தோஷமாயிருக்கோம்...ரெண்டாவது ஹனிமூனுக்கு காஷ்மீர் போலாமான்னு ஒரு வாரமா யோசனை..."

எல்லோரும் சிரிக்க புவனேசுவரி கணவனின் முதுகில் குத்தினாள்.

"உங்களுக்கு விவஸ்தையே கிடையாது."

ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்தார்கள்.

விசாலி விஜயராகவன் புவனேசுவரி அவர்களின் காரில் போய் திணித்துக் கொள்ள ருத்ரமூர்த்தி நித்தியனோடு தன் மாருதிக்கு வந்தார்.

"காரை நீ டிரைவ் பண்றியா... நான் பண்ணட்டுமா?"

"நீங்களே பண்ணுங்கப்பா..."

நித்தியன் ஏறி உட்கார்ந்தான்.

ருத்ரமூர்த்தி காரை மெல்ல நகர்த்தினார். சாலையில் அது வேகம் பிடித்ததும் நித்தியன் "அப்பா" என்றான்.

"ம்..."

"எதுக்காக இந்த ஆர்ப்பாட்டமான வரவேற்பு? எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கலை."

"உனக்குப் பிடிக்காதுன்னு எனக்குத் தெரியும். எனக்கு ஊரை நம்பவைக்கணும். நீ வெளிநாட்டுக்குப் போய்ட்டுதான் வந்துருக்கேன்னு எல்லாமே நம்பணும். முக்கியமா உனக்கு பெண் கொடுக்கப்போகிற விஜயராகவன் குடும்பமும் நம்பணும்..."

"அப்பா..வந்து..."

"நீ எதுவும் பேசாதே... பம்பாய்ல உன்னோட ஒரு வருஷ ஜெயில் வாழ்க்கை எப்படி இருந்தது சொல்லு...?"

(பௌர்ணமி தொடரும்)

---

அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன்

13

கெய்ரோவில் சதாம் நான்கு ஆண்டுகள் தங்கியிருந்தான். தனது 24-வது வயதில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தான். பிறகு சட்டம் பயில்வதற்காக கெய்ரோ பல்கலைக்கழகத்தில் சேர்ந்தான்.

சதாம் கெய்ரோவில் வாசம் பண்ணுகையில், அவனது அரசியல் வாழ்க்கையில் ஒரு துயர நிகழ்ச்சியும், சொந்த வாழ்க்கையில் ஓர் இனிய நிகழ்ச்சியும் நடந்தேறின...

அரபு நாடுகளெல்லாம் ஒரே தேசமாய் இணைவதற்கு முன்னோடி என்று சதாம் போற்றி வந்த எகிப்து- சிரியா இணைப்பு, 1961ல் தகர்ந்தது. இது சதாமை மிகவும் பாதித்து வேதனையடையச் செய்தது.

இனிய நிகழ்ச்சி- திருமண நிச்சய தார்த்தம்!

சாஜிதா. வயது 20. பள்ளி ஆசிரியை. சிறுவனாய் கிராமத்திலிருந்து வந்திருந்த சதாமை பாக்தாத்தில் படிக்க வைத்து வளர்த்து ஆளாக்கி, அரசியலில் ஈடுபாடு கொள்ளச் செய்த தாய் மாமன் கயருல்லாவின் மகள்.

சாஜிதாவை சதாமுக்கு திருமணம் செய்து கொடுக்க விரும்பினார் கயருல்லா.



ராஜையா

அண்ணன் மகளை மருமகளாக்கிக் கொள்ள சதாமின் அம்மாவுக்கும் விருப்பம் இருந்தது.

"நாங்கள் இப்படி நினைக்கிறோம். உன் பிரியம் எப்படி?" என்று கெய்ரோவிலுள்ள சதாமுக்கு கேட்டு எழுதினார் கயருல்லா.

சாஜிதாவின் முகம் நினைவுக்கு வந்தது சதாமுக்கு. நான்கு ஆண்டுகளுக்குமுன் அவள் பதினாறு வயதில் இருந்த போது பார்த்த முகம். அப்போது மாணவியாக இருந்தாள். இப்போது மாணவிகளுக்கு பாடம் சொல்லித்தரும் ஆசிரியை ஆகிவிட்டாளாம்...

இத்தனை பெரியவளான பிறகு அவள் முகம் எப்படி இருக்கும்? கற்பனை செய்து பார்த்தான். அதே பதினாறு வயது முகமே மாறுதலில்லாமல் மீண்டும் நினைவில் முகிழ்த்தது.

"சாஜிதாவை திருமணம் செய்துகொள்ள எனக்கு பூரண சம்மதம்" என்று பதிலெழுதிப் போட்டான் சதாம்.

மாப்பிள்ளை கெய்ரோவில் இருக்கையில், மாப்பிள்ளை இல்லாமலே நிச்சயதார்த்தம் பாக்தாத்தில் பெண் வீட்டில் எளிமையாய் நடந்து முடிந்தது. சதாம் சந்தோஷப்பட்டான்.

அடுத்த கணம் முகம் வாடியது...

மாப்பிள்ளை இல்லாமல் நிச்சயதார்த் தத்தை நடத்திவிடலாம். அதுபோல் மாப்பிள்ளை இல்லாமல் திருமணத்தையும் நடத்தவிட முடியுமா?

'நான் பாக்தாத்துக்குப் போய்தான் ஆகணும். ஜனாதிபதி காசிம் உயிரோடு இருக்கிறவரை அது நடக்காது.' என்று மனம் வருந்தினான். அப்போதுதான் அந்த மகிழ்ச்சியான செய்தி அவனுக்கு கிடைத்தது...

"ஜனாதிபதி காசிம் க்ளோஸ்! முன்பு காசிமினால் சிறையிலடைக்கப்பட்டிருந்த ஆரி*ப்புடன் கூட்டு சேர்ந்த நம் மறுமலர்ச்சிக் கட்சி ஈராக் ஆட்சியைப் பிடித்து விட்டது...!"

◆◆◆

அது அரண்மனை.

அங்குதான் ஈராக்கின் கடைசி மன்னரான இரண்டாம் *பைசாலும், அவரது குடும்பத்தினரும் 1958-ல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். மன்னராட்சியை ஒழித்த அந்த புரட்சியின் நினைவாக அது 'கடைசி அரண்மனை' என்று அழைக்கப்படுகிறது.

ஆரி*ப்- மறுமலர்ச்சிக் கட்சியினர் கூட்டாட்சி 1963 பிப்ரவரி 8-ந் திகதி அமைக்கப் பட்ட பிறகு- ஆரி*ப் ஜனாதிபதியான பிறகு- இந்த அரண்மனை அரசியல் கைதிகளை கொடூரமான முறையில் விசாரணை செய்யும் சித்ரவதைக் கூடமாக மாற்றப்பட்டது.

எகிப்திலிருந்து பாக்தாத் திரும்பிய சதாம் இந்த கூடத்தில் அரசியல் கைதிகளை விசாரணை செய்யும் 'விசாரணை அதி காரியாக நியமிக்கப்பட்டான். அரசியல் கைதிகளிடமிருந்து உண்மையைக் கறக்கும் மிகக் கடினமான வேலை சதாமிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஈராக் அரசியல் கைதிகள் வன்முறையில் நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் லேசில் வாய் திறக்க மாட்டார்கள்.

அப்படிப்பட்ட அரசியல் கைதிகளிடமிருந்து உண்மையை வரவழைக்க அமெரிக்கா உட்பட உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் பல சித்ரவதை முறைகள் கையாளப்படுகின்றன...

சதாம் விசாரணை அதிகாரியாக இருந்த சித்ரவதைக் கூடமும் இதற்கு விதிவிலக்கு அல்ல...

இங்கு பிடித்து வரப்படும் ஒவ்வொரு கைதியின் கைகளும், கால்களும் கட்டப்பட்டன. உத்திரத்திலிருந்து தொங்கும் இரும்புச் சங்கிலியில் அவர்கள் தலைகீழாகக் கட்டி தொங்கவிடப்பட்டார்கள். அப்போதும் அவர்கள் வாய் திறக்க மறுத்தால் எரிச்சலில் பொறுமையிழந்த சதாம் அவர்களை கண்மண் தெரியாமல் அடித்ததும் உண்டு.

சதாமின் சித்ரவதைக் கூடத்தில் எல்லா வகையான சித்ரவதைக் கருவிகளும், வழிமுறைகளும் பயன்படுத்தப்பட்டன.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

அமோக வாரம்

சுபா



சுரேஷ்–பாலா இருவரும் இணைந்து சுபா என்றபெயரில் தூள் கிளப்பி வருகின்றனர். 'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் வசனமும் இவர்கள் கைவண்ணமே.




அரசாங்கத்திற்குச் சொந்தமான அந்த அம்பாசிடர் கார் புதுடில்லியின் அகலமான சாலைகளில் அதிவிரைந்து சென்றது.

சிகரெட்டை உதடுகளில் பொருத்திக் கொண்டான் அரவிந்த். ஸ்பீக்கர்களில் பீம்சென் ஜோஷி ஹிந்துஸ்தானியா வழிந்து கொண்டிருந்தார். தபேலாவும், புல்லாங் குழலும் பின்சீட்டில் உட்கார்ந்து வாசிக்கப்பட்டன.

பயணத்தின்போது டிரைவரும், அரவிந்தும் அதிகபட்சம் ஆறு வார்த்தைகள் பேசியிருப்பார்கள்.

கிளம்புமுன் ஜ்யோதியைச் சீண்டியது நினைவில் புரண்டது. அவனுக்கும் அவளுக்கும் மட்டும் புரியும் பிரத்யேக வார்த்தை ஜில்ஜிட்டா. அந்த வார்த்தைப் பிரயோகத்திலேயே அவள் சிவந்து போவதை ஒவ்வொரு முறையும் அவனால் இரசிக்க முடிந்தது. இப்போதுகூட அந்த நினைப்பே அவன் இதழ்களில் குறும்பான புன்னகையைக் கொண்டு வந்தது.

விக்ரம் வருவதாய் ஃபோன் செய்தானாமே. ஜ்யோதி ஏன் விக்ரமை அவ்வளவு தூரம் வெறுக்கிறாள்? அவள் பேரில் அவன் ஆசை வைத்தது கூட தப்பா? எந்த விஸ்வாமித்திர ரிஷியாக இருந்தாலும், ஜ்யோதியை எதிர்கொண்டால் எப்படி ஆசைப்படாமல் இருக்க முடியும்?

கார் அமைச்சரின் வீட்டை நெருங்கி விட்டது.

ஒவ்வொரு தெரு திருப்பத்திலும் மாருதி ஜிப்ஸி நின்றிருந்தது. டில்லி பொலிஸ் பான்பராக்கைமென்று கொண்டு சாவதானமாக வாகனங்களை நோட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஒயர்லஸில் தகவல்கள் கொட்டிக்கொண்டிருந்தன.

அடையாளம் சரிபார்க்கப்பட்டு காருக்கு கேட் திறக்கப்பட்டது.

வீட்டிற்கு நூறு மீட்டர் முன்பே வண்டியிலிருந்து இறங்கினான் அரவிந்த். செக்யூரிட்டி ஏற்பாடுகள் அப்படி. மூன்றடுக்கு பாதுகாப்பு முறைகள். மெட்டல் டிடக்டர். பாம் ஸ்கேனிங். அப்புறம் அவன் உடலில் அங்குலங்கள் தட்டிப் பார்த்து ஆயுதங்கள் எதற்கும் சாத்தியமில்லை என்ற தீர்வு.

முன் அறையில் டைப்ரைட்டர். ஷார்ட் ஹேண்ட் நோட் புத்தகம். இருபத்து நான்கு மணிநேரமும் ஷிஃப்ட் முறையில் ஒரு ஸ்டெனோ கிராஃபர்.

தாண்டியதும் குளிர்விக்கப்பட்ட அறை. பித்தளை அறிவிப்புடன் அமைச்சரின் அந்தரங்க செயலாளர் ஹேம்நாத்.

"குட்மார்னிங் சார்" என்றான் அரவிந்த்.

ஹேம்நாத் நாற்காலியில் உட்காராமலும், முழுவதும் எழுந்து நிற்காமலுமான ஒரு நிலையில் குனிந்திருந்ததிலிருந்து நிமிர்ந்தார். அவருடைய முக அமைப்பிலேயே ஒரு கடுமை இருந்தது. புருவங்களின் சரிவில் ஒரு கோபம். உதடுகளின் வளைவில் ஒரு இகழ்ச்சி. மூக்கின் கூர்மையில் ஒரு குற்றம் சாட்டும் தன்மை.

"குட் மார்னிங்" என்று அவர் சொன்னது கூட 'என் நேரத்தை வீணாக்காதே' என்பது போல தொனித்தது.

அவருடைய முக அமைப்பு, மொற மொறப்பு, வார்த்தைகளின் கூர்மை எல்லாம் அவருக்கு நரசிம்மாவதாரம் என்ற செல்லப் பெயரை ஈட்டித் தந்திருந்தன. 'அவதார்' என்று சுருக்கமாக அவர் முதுகில்மற்ற ஊழியர்கள் பேசுவது அவருக்குத் தெரிந்திருக்கலாம் என்பது அரவிந்த் பலமுறை யோசித்ததுண்டு.

ஹேம்நாத் பற்றி யார் எது சொன்னாலும், முன்பிருந்த எந்த மத்திய அமைச்சருக்கும் இவ்வளவு துல்லியமான செக்ரட்டரி அமைந்ததில்லை என்பதை இரண்டாவது கருத்தில்லாமல் ஒப்புக்கொள்வார்கள்.

"சிகரெட் பிடித்தாயா அரவிந்த்?" ஹேம்நாத் குரலை அவன்மீது எறிந்தார்.

அரவிந்த் தன்னிச்சையாக தன் முகத்துக்கு முன் ஈ ஓட்டினான்.

"காலையில் பிடித்தது சார்."

"சிகரெட் வாசனையை விட அதை மறைக்க நீ பயன்படுத்திய ஃப்ரெஷ்னரின் வாசனை இன்னும் அபத்தமாக இருக்கிறது."

"ஸாரி, சார்..."

"இன்னும் இருபது நிமிடங்களில் மதுரை புறப்படுகிறோம். அங்கு மூன்று நிகழ்ச்சிகள். இன்றிரவே திரும்புகிறோம்."

டெலிஃபோன் ஒலித்தது. எடுத்தார். "ஸாரி, ராங் நம்பர்" என்று ரிசீவரைக் குப்புறத் தள்ளினார். "மாதவன் ஒய்ஃப்! ஹஸ்பெண்டுடன் ஒரு நிமிஷம் பேச வேண்டுமாம். கொஞ்சலோ, குலாவலோ, குரைத்தலோ வீட்டோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அமைச்சரின் அலுவலகத்திற்கு வந்த பிறகு அவன் கவனமெல்லாம் வேலையில்தான் இருக்க வேண்டும். பெண்டாட்டி கூப்பிட்டுப் பேசினால், அப்புறம் அந்த அதிர்வுகளிலிருந்து மீளவே அவனுக்கு அதிக நேரம் பிடிக்கும். ராங் நம்பர் என்று வைத்து விட்டேன்."

'உன் பெண்டாட்டியிடமிருந்து ஃபோன் வந்தாலும் இப்படித்தான் நடந்து கொள்வாயா, ராட்சஸா? அரசாங்க காம்பவுண்டிற்குள் நுழைந்ததும் இயந்திரங்களாகி விட வேண்டுமா நாங்கள்?'

"நீ போய் விமானத்தை தயார் செய். அமைச்சருடன் வருகிறேன்."

இங்கிருந்து ஐந்து நிமிட கார் ஓட்டம். விமானப் படையின் பிரத்யேக விமானத்தளம். அங்கே அவன் கையாள வேண்டிய விமானத்தின் இயந்திரங்கள் செக் பண்ணப்பட்டிருக்கும். பெட்ரோல், இன்ஜின், கம்யூனிகேஷன் சிஸ்டம் எல்லாம் செக்யூரிட்டி ஆபீஸர்களால் ஒ.கே. செய்யப்பட்டிருக்கும்.

அவன் விமானத்தில் ஏறி அதை உசுப்பி விட்டுக் காத்திருக்க வேண்டும். அமைச்சரின் கார் வரும் வரை.

அமைச்சர்!

இரண்டு வருடங்களுக்கு முன்பு வரை பிரகாஷ் குப்தா அமைச்சராக இருக்கவில்லை.

பம்பாயின் நெருக்கடியான நாரிமன் பாயிண்ட் பகுதியில் சொந்தமாக பதினான்கு அடுக்குக் கட்டடம். அதன் வெவ்வேறு தளத்தில் அவருடைய வெவ்வேறு தொழில்கள் இயங்கிக் கொண்டிருந்தன. அவருடைய விழி அசைவுகளுக்குத் தகுந்தபடி பங்கு மார்க்கெட் எழும், சரியும். அரசியல் கட்சிகள் அவரிடம் அடிமைப்பட்டுக் கிடந்தன. டெலிஃபோன் டயலில் அவர் விரல்கள் நடனமாடினால், ஆட்சிகளே மாறும்.

இருபத்திரண்டு கார்கள் அவர் பயணம் செய்யக் காத்திருக்கும். சொந்தமான சிறு விமானம் அவரை மட்டும் ஏற்றிச் செல்லும்.

அப்போதும் அவருடைய பிரத்யேக விமானத்திற்கு அரவிந்த்தான் பைலட்.

அப்புறம் அவருடைய மூத்த மகனிடம் வியாபாரப் பொறுப்புக்களைக் கொடுக்கும் தருணம் வந்ததும், எதனாலோ பிரகாஷிற்கு அரசியல் ஆர்வம் வந்தது. இப்போதும் மத்தியில் பாதுகாப்புத்துறை அமைச்சர்!

அவருடைய செகரட்டரி ஹேம்நாத் கையெழுத்தைக் கிறுக்கி நீட்டிய அடையாள பாஸை வாங்கிக்கொண்டு அரவிந்த் திரும்பியபோது, டெலிஃபோன் ஒலித்தது. ரிசீரைவரை எடுத்தவர், அரவிந்த்தை அரைக்கண்ணால் நிமிர்ந்து பார்த்து, "ராங் நம்பர்" என்று கவிழ்த்தார். அந்த ராங் நம்பர் ஜ்யோதியிடமிருந்து வந்தது என்று அரவிந்திற்குத் தெரியாது.

★★

ஜ்யோதி கோபத்துடன் ரிசீவரை வைத்தாள். அவளுக்குத் தெரியும் அது ராங் நம்பர் இல்லை என்று. ஆனாலும் அரவிந்துடன் பேச விடமாட்டார்கள். என்னவோ அவன் அரசாங்கத்திற்குச் சொந்தம் போலவும், இரவுகளில் அதுவும் சில இரவுகளில் மட்டும் அவனை அவளுக்கு இரவல் தருவது போலவும் நடந்து கொள்வார்கள்.

வலது கையிலிருந்த பித்தளை பூ ஜாடியை பொத்தென்று மேஜைமீது வைத்தாள். அரை நிமிடத்திற்கு முன்பு ஆயுதமாக உபயோகமான பூ ஜாடி!

சோபாவிற்கு அடியிலிருந்து இரத்தம் கசியும் நெற்றியை வருடிக்கொண்டு விக்ரம் எழுந்தான்.

"ஜ்யோதி!" அவன் குரல் நடுங்கியது. "என்னிடம் நீ இவ்வளவு மோசமாக நடந்து கொள்வாய் என்று நான் எதிர்பார்க்க வேயில்லை."

"என்னிடம் நீ கேவலமாய் நடந்து கொள்வாய் என்று நானும் எதிர்பார்க்கவில்லை, விக்ரம்."

"என்னுடைய சின்னச் சின்ன ஜோக்கிற்கெல்லாம் விழுந்து விழுந்து சிரித்தவள் நீ..."

"இன்றைக்கும் சிரிக்கத் தயாராயிருக்கிறேன்- நீ அபத்தமாக நடந்து கொள்ளாத வரை..."

"உன்னை ஆசைப்படுவது அபத்தமா?"

"நானும் உன்னை ஆசைப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது அபத்தம்..."

"ஜ்யோதி, அரவிந்த் உன்னை மகுடி வாசித்து மயக்கியிருக்கிறான்.... அவனுடைய நிழல் கிடைத்ததும் நீ விக்ரமைத் தூக்கி எறிகிறாய். அன்பான நேசிப்பைப் புரிந்து கொள்ள முடியவில்லை உன்னால்..."



"இன்றைக்கும் நேசி, விக்ரம். உன் அன்பை எதிர்க்கவில்லை. என்னைப் பார்க்கும் போதெல்லாம் படுக்கையில் தள்ளத் துடிக்கிறாயே- அதுதான் உன் அன்பு என்றால், அந்த அன்பை உனக்கு மனைவியாக வரப்போகிறவளுக்காக சேமித்து வை... என்னிடம் வீணாக்காதே..."

"ஜ்யோதியைத் தவிர வேறு யாரும் எனக்கு மனைவியில்லை."

"விக்ரம்.. நட்பைக் கொச்சைப்படுத்தாதே."

"என்னிடம் என்ன இல்லை? அரவிந்த்தை விட நான் எதில் குறைந்தவன்?"

"விக்ரம்! ஸ்டாப் இட்! உன் புத்தி சிதறி விட்டது. உன்னை நான் நிரந்தரமாக வெறுக்கும்படி செய்து விடாதே... போ...போய்விடு..."

விக்ரம் திடீரென்று மண்டியிட்டான். "ஜ்யோதி... ப்ளீஸ்.. என்னைப் புரிந்து கொள்... ஒரு நாள்... ஒரே நாள் நீ என்னுடையவளாகக் கூடாதா?"

"நீ குடித்திருக்கிறாய்... நான் எவ்வளவு சொன்னாலும் உனக்கு ஏறாது."

"என்னைக் குடிகாரனாக்கியதே நீதான்... இந்த அம்மைத் தழும்புகள் உனக்குப் பிடிக்கவில்லையா.... பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொள்கிறேன். ஜ்யோதி... அரவிந்தைப் போல எனக்கு மழமழவென்ற கன்னம் இருந்தால் விரும்புவாயா?"

"விக்ரம் எழுந்திரு" ஜ்யோதியின் உதடுகள் நடுங்கிக்கொண்டிருந்தன. "அர்த்தமில்லாமல் உளறிக்கொண்டே போகிறாய்... இனி அரவிந்த் இல்லாத போது இங்கே வராதே!"

விக்ரம் தடுமாறி எழுந்தான். "அரவிந்த், அரவிந்த், அரவிந்த்! அவனுடைய உடம்பு உன்னை மயக்கியிருக்கிறது. வெண்ணெய் போல இருக்கும் மூஞ்சி உன்னை அடிமைப்படுத்தியிருக்கிறது. அந்த மூஞ்சி நாளைக்கு மாறி விட்டால், நீயும் மாறி விடுவாய்."

"விக்ரம், தட் இஸ் தி லிமிட். நீ புறப்படு."

"அரவிந்தை நீ வெறுக்கும்படி பண்ணுகிறேனா இல்லையா பார்."

"கெட் அவுட்."

விக்ரம் நாற்காலியை உதைத்துக் கவிழ்த்து விட்டு கொதிக்கக் கொதிக்க புறப்பட்டான்.

ஜ்யோதி கதவை உட்புறம் தாளிட்டாள். டெலிஃபோனுக்கு ஓடினாள். டயல் செய்தாள்.

"ஹலோ... நான் கேப்டன் அரவிந்த் மனைவி பேசுகிறேன். எனக்கு உடனே என் கணவருடன் பேசியாக வேண்டும். மனைவிக்கு உடம்பு சரியில்லை என்று கூப்பிடுங்கள் எமர்ஜென்ஸி ப்ளீஸ்..."

"ஸாரி. ராங் நம்பர்" என்று எதிர்முனையில் ரிசீவர் பொத்தென்று வைக்கப்பட்டது.

ஜ்யோதி எட்டி உதைத்ததில் டெலிஃபோன் ஸ்டூல் கவிழ்ந்து உருண்டது.

சோபாவில் குப்புற விழுந்து குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள். டீப்பாயில் இருந்த அரவிந்தின் ஃபோட்டோ மௌனமாகச் சிரித்தது.

(○–வரும்–○)

# கவியரசுவின் சுயசரிதை

21

விடுதலை ஆனது மாலை ஐந்து முப்பது மணிக்கு....!

அங்கிருந்து நேரே தியேட்டருக்குப் போனான்.

தான் முதன் முதலாக எழுதிய படத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல்.

கொட்டகையில் பெரும் பகுதி காலியாகக் கிடந்தது.

திருச்சி நண்பர்கள் சிலரும் அவனோடு வந்திருந்தார்கள்,

படித்தவர் எல்லாரும் வசனத்தையும் பாட்டையும் புகழ்ந்ததாக அவர்கள் சொன்னார்கள்.

படிக்காதவர்களுக்கு அவனைப்பற்றி எப்படிப் புரியும்...!

தானே படத்தைப் பார்த்து அனுபவித்துவிட்டு ஊருக்குப் புறப்பட்டான்.

அப்பாடா...! ஐந்து மாதம் முடங்கிக் கிடந்த சிறகுகள் விரிந்தன.

பஸ்ஸிலே ஊருக்குப் புறப்பட்டான்.

ஒரு மாதம் 'C' வகுப்பிலும், நான்கு மாதங்கள் 'B' வகுப்பிலுமாக ஒரே சோறு, ஒரே கறி, ஒரே பார்வை, ஒரே உலகம் என்று அலுத்துப் போய்க்கிடந்த அவன்- விரிந்த வெளி உலகக் காட்சியில் மெய் மறந்தான்.

கிராமத்திலிருந்து குடும்பத்தினரைக் கூட்டிக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டான்.

"நான் யார் என்பதை இந்த உலகத்திற்குக் காட்டுகிறேன்...!" என்ற வெஞ்சினத்தோடு ரயிலேறினான்.

**கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

புத்தியும் சக்தியும் புது உணர்ச்சியும் பொங்கி வழிந்த நிலையில் சென்னையில் இறங்கினான்.

சென்னை நகரம் இப்போது பழைய நகரமாக அவனுக்குத் தோன்றவில்லை.

ஏதோ ஒரு சொர்க்க பூமிக்கு வந்து சேர்ந்துவிட்ட உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

திருச்சி நகரத்தில் பட்டபாடு சென்னை நகரத்தை இன்ப பூமியாகக் காட்டிற்று

சிறிது காலமாவது ஜெயிலிலிருந்து வெளியே வந்தால், வெளி உலகத்தின் சிறிய சுகங்கள்கூடப் பெரிதாகத் தெரிகின்றன.

திருச்சி நகரத்தில் அலையும்போதும் சிறைச்சாலையில் வதியும்போதும் தான் பெரும் தவறு ஒன்றைச் செய்துவிட்டதாகவே அவன் கருதியிருந்தான். ஆனால், அது தவறல்ல நியாயமே என்பதை அவன் சென்னைக்கு வந்ததும் உணர்ந்தான்.

'நிழல் அருமை வெயிலிலே' என்றபடி வாழ்வின் அருமை, வாழ்வு கொஞ்சநாள் மறுக்கப்பட்டதன்மூலம் அவனுக்குப் புலனாயிற்று.

சென்னை இராயப்பேட்டையில் சண்முக முதலி தெரு என்பது மிகச்சிறிய தெருவாகும்.

ஆறு ஏழு வீடுகள்தான் அங்கே உண்டு என்றாலும், அந்தத் தெருவிற்கு வரலாற்று முக்கியத்துவம் உண்டு.

இணையில்லாத மேதை ஒருவர் அந்தத் தெருவிலே வசித்து வந்தார்.

பள்ளிப்படிப்பு இல்லாமலேயே உலகத்தை அளந்து முடித்த பகுத்தறிவாளராக அவர் வீற்றிருந்தார்.

மனித மனத்தின் இளகிய தன்மை முழுவதும் அவரிடம் குடியிருந்தது.


இதயம் என்பதற்கு அடையாளமே அவர் தான்.

மிக மிக நல்லவன் மிகமிகத் துன்பங்களை அனுபவிக்க வேண்டுமென்பதற்கும் அவரே சான்றாக விளங்கினார்,

அவர் பெயர் தமிழர். சமுதாயம் மறக்க முடியாத பெயராகும்.

கலைவாணர் என். எஸ்.கிருஷ்ணனே அவராவார்!

அவர் வசித்து வந்த தெருவிலேயே அவனுக்கும் ஒரு வீடு கிடைத்தது.



அங்கே அவன் குடியேறியவுடனேயே தன் பத்திரிகைக்குத் தலைப்புத் தேடத் தொடங்கினான்.

அதற்கு முன்னால் அவனது நண்பர் கவிஞர் குயிலன் நடத்தி நிறுத்தி விட்ட 'தென்றல்' அவன் நினைவிற்கு வந்தது.

முதன் முதலில் அந்தப் பெயரே அவனுக்கு நினைவு வந்தது.

எந்த விஷயத்திலும் முதலாவதாக அவன் மனத்தில் எது படுகிறதோ அது சரியாகவே இருக்கும்.

தென்றலையே தன் பத்திரிகைத் தலைப்பாக அவன் கொண்டுவிட்டான்.

அரசாங்க அனுமதிக்கு எழுதக்கூட வில்லை.

அப்படி ஒரு பத்திரிகை வருவதாகச் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்துவிட்டான்.

குடியிருந்த இடத்திலேயே ஒரு பகுதியை அலுவலகமாக ஆக்கிக் கொண்டான்.

தன்னோடு சேலத்தில் பணியாற்றி வந்த நாகலிங்கம் என்பவரை நிர்வாகியாக்கிக்கொண்டான்.

விற்பனையாளர்களின் கடிதங்கள் வரத்தொடங்கின.

சுமார் இரண்டாயிரம் பிரதிகளுக்கு விற்பனை வேண்டுகோள் வந்திருந்தது.

அரசாங்க அனுமதிக்கு எழுதினான்.

அதுவும் கிடைத்தது.

அந்த அனுமதியைப் பெறுவதற்காக பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் அவன் கையெழுத்திடப்போனபோது, ஒரு வேடிக்கையான சம்பவம் நடந்தது.

அவன் ஆங்கிலத்திலே 'கண்ணதாசன்' எனக் கையெழுத்திட்டான்.

அந்தக் கையெழுத்தைக் கொண்டு அவன் பெயரை யாரும் கண்டுபிடிக்கமுடியாது என்பது என்னவோ உண்மைதான்.

(சரிதம் தொடரும்)

www.padippakam.com

# முன்னோடி



மாமனார் சிவராமனின் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான் மகேஷ்... சமீபத்தில்தான் அவருடைய மூத்த மகள் கௌரியை திருமணம் முடித்திருந்தான். திருமணப் பேச்சு வார்த்தையின்போது எதுவும் செய்ய இயலாத நிலையில் இருப்பதாகக் கூறிய சிவராமன் தனக்கிருக்கும் ஒரே வீட்டை மகேஷுக்கு தருவதாகச் சொல்லியிருந்தார்.

வேலை செய்யுமிடத்தில் ஒருவருக்கொருவர் காதலித்து.... கௌரியே தந்தையிடம் சொல்ல.... மகேஷை அழைத்து பேசி, அவன் பெற்றோர் சம்மதத்துடன் திருமணத்தை முடித்து விட்டார் சிவராமன்.

கௌரியின் திருமணத்துக்காக வீட்டை விற்க முன்னதாகவே திட்டமிட்டிருந்தார் சிவராமன்.... ஆனால் திருமண பேச்சுவார்த்தைக்கு முன்பே. "திருமணத்துக்குபின் தனிக்குடித்தனம் போய் விடுவோம்!" என்று மகேஷ் சொன்னதின் பெயரில்தான் வீட்டை விற்காமல் அவர்களுக்கே வழங்க முடிவு செய்துவிட்டார்.

கதவு தட்டும் சத்தம் கேட்... அது மகேஷ்தான் என்று நினைத்தபடியே திறந்தார் சிவராமன்.

"வாங்க மாப்பிள...." அழைத்து உட்கார வைத்தவர் உள்ளே சென்று சாவியை எடுத்து வந்து மகேஷிடம் தந்தார்.

"இன்னிக்கு நல்லநாள்... பால் காய்ச்சிக் கொள்ளுங்க..."

இடையில் அங்கே வந்த சிவராமனின் மனைவி மகேஷுக்கு காபி தந்தாள்.

"இந்த கொழும்பு நகரில வாடகை தந்து கட்டுப்படியாகாது... அந்தப் பணத்தைச் சேர்த்து வச்சா வீட்டுக்குத் தேவையானது வாங்கிக்கலாம்..." என்றாள்.

"சரியா சொன்னிங்கத்தே... நான் முன்னால போய் ஆக வேண்டியதப் பாக்கறேன்... நீங்க சீக்கிரம் கிளம்பி வாங்க..." என்று கூறி கிளம்பினான்.

வீட்டை சுத்தம் செய்து கொண்டிருந்தான் மகேஷ்... கௌரியும் ஒத்தாசை செய்தாள்.

அந்த வீட்டின் தற்போதைய மதிப்பு எப்படியும் 10 இலட்சம் பெறும்... இது மகேஷுக்கும் தெரியும்... இதற்கு முன் இரண்டாயிரம் ரூபாய் வாடகைக்கு விட்டிருந்தார் சிவராமன்.

அனைத்து வேலைகளும் முடிய... பால் காய்ச்சி முடித்தார்கள்.... கௌரி பெற்றோரை எதிர்பார்த்திருந்தாள்.

"இனி நமக்கு வீட்டுப் பிரச்சனையும் இல்ல... வாடகை பிரச்சனையும் இல்ல...." கௌரி சொல்ல.

"ஆமாம் கௌரி....! உங்க அம்மா சொன்னமாதிரி வாடகை மிச்சம்...." என்றான் மகேஷ்.

பதிலுக்கு கௌரி.... "இந்த வீட்டை வாங்கறதுக்கு எங்க அப்பா அம்மா படாத பாடு பட்டாங்களாம்... ஜாதி பிரச்சனையில வீட்டுக்காரர்கள எதிர்த்து, கல்யாணம் பண்ணி பெரும் கஷ்டப்பட்டாங்களாம்... வாடகை வீட்ல இருந்துகொண்டே குருவி சேக்கற மாதிரி கொஞ்சம் கொஞ்சமாச் சேத்து அப்ப பத்தாயிரத்துக்கு இந்த வீட்ட வாங்கினாங்களாம்... இப்ப நமக்கு உதவுது...." என்றாள்.

யதார்த்தமாய் அவள் கூறிய வார்த்தைகள் மகேஷை ஆழமான சிந்தனைக்குள் அழைத்துப் போனது.

'சொந்தக் காலில் நின்று கஷ்டப்பட்டு கௌரியின் பெற்றோர் இந்த வீட்டை வாங்கி இருக்கிறார்கள்.... ஆனால்... நான்?

கௌரியைக் கைப்பிடித்த ஒரே காரணத்துக்காக இவ்வீட்டை அபகரித்து விட்டேன்... உண்மை தெரிந்தும் இந்த வீட்டில் நான் சுகமாக வாழ்ந்தால் கையாலாகாதவன் என்ற குற்ற உணர்வு அனுதினமும் என்னைக் கொல்லும்... வரதட்சணை என்ற பெயரில் எனக்குத் தந்தாலும். அவர்கள் இதுபோல் வாங்கவில்லையே...'

சிந்தனையிலிருந்து விடுபட்டு கௌரியைப் பார்த்தான்.

"கௌரி... உனக்குக் கணவனா இந்த வீட்ல இலவசமாக் குடியிருக்க நான் விரும்பல..."

"என்னாச்சு உங்களுக்கு...? நமக்காகத் தானே இந்த வீட்டத் தந்திருக்காங்க...!"

"இல்ல கௌரி... சிறுகச் சிறுக சேர்த்து அவங்க வாங்கின இந்த வீட்டை சீதனம்

**எம். மகாலட்சுமி**

பேர்ல நான் அனுபவிக்க விரும்பல... இது எங்க அப்பா வீடுன்னு நீ பெருமையா சொல்லிக்கலாம்... ஆனா நான் மாமனார் வீடுன்னு பெருமையாச் சொல்லிக்க முடியாது... இந்த வீட்லயே வாடகைக்கு இருந்துட்டு நாமளும் சம்பாதிச்சு சொந்தமா ஒரு வீடு வாங்கணும்... நாளைக்கு நம்ம பிள்ளைங்க வாயிலிருந்து இது தாத்தா வீடுன்னு வரக்கூடாது... அப்பா வீடுன்னு சொல்லணும்... அப்பதான் எனக்கொரு மதிப்பு இருக்கும்..!" என்றான்.

மகேஷின் திடீர் மாறுதல் ஒரு புறம் ஆச்சர்யமாக இருந்த போதும், மறுபுறம் நியாயமிருப்பதாகவே கௌரிக்கு உணர்த்தியது. அதே நேரம் தனக்குப் பின் திருமணத்துக்கு தயாராக இருக்கும் தங்கைக்காக பெற்றோர் கஷ்டப்படத் தேவையில்லை என்பதை நினைத்து பேரானந்தம் கொண்டாள் கௌரி. ◎

# தேவதை



**அனுபாரதி**

"சரோ...! உனக்கு எண் சோதிடத்தில நம்பிக்கை இருக்கா?"

சரோஜா பார்க்கின் ஒதுக்குப்புற மறைவில் சுந்தரின் மடியில் அரைக்கண் மயக்கத்தில் சாய்ந்திருந்தாள்.

"ஏய்... கேட்கிறேன் இல்ல... பதில் சொல்லு!"

"போங்கப்பா... நீங்களும் உங்க நியூமரோலஜியும்... ஆமா... நாம இப்படியே தெனமும் பார்க், பீச் சென்று.. அலைய வேண்டியதுதானா..? சீக்கிரமா நம்ம கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க... வீட்ல வேற சந்தேகப்பட ஆரம்பிச்சுட்டாங்க.."

அவள் சொன்னதை, அவன் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. எதேச்சையாய் அவன் முகத்தைக் கவனித்தவள் பயந்தாள். சுந்தர் கண்களை உருட்டி உருட்டி அவளையே வெறித்துப் பார்த்திருந்தான். முகம் இறுகி, உதடுகள் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

தன் மடியிலிருந்து திடுக்கிட்டு எழ முயன்றவளை இரு கைகளாலும் பலமாக அழுத்திக்கொண்டான்....

"என் குருவான சித்தர்ஜி வாக்கு எப்போதும் பொய்ப்பதில்லை. எந்த செயல் செய்தாலும் 'ஒன்பது' என்ற எண் வருவது போல இருந்தால்... எனக்கு வெற்றிதான் என்பது சித்தரின் வாக்கு. இன்னிக்கு தேதி ஒன்பது. ஆமாம்... என்ன கேட்டாய்? கல்யாணமா..? பேதைப் பெண்ணே... கேவலம், ஒரு கம்பெனி குமாஸ்தாவின் பெண்... எனக்கு மனைவியா...? நேவர்.. ஆனாலும் உனக்கு இதைவிடப் பெரிய பதவி ஒன்றை இப்போது கொடுக்கப்போகிறேன்.... இந்திர பதவி... இல்லையில்லை... சொர்க்கலோக பதவி...! ஏற்றுக்கொள் பெண்ணே!"

"அய்யோ... சுந்தர்... என்னென்னமோ சொல்றீங்களே.... என்னை விட்டுடுங்கப்பா... நான் கேட்டது தப்புதான்... ப்ளீஸ்.. என்னைய விட்டுடுங்கப்பா..."

அவள் அவனிடமிருந்து விடுபடும் முன்பே... அவன் மடியில் சாய்ந்திருந்த அவளின் கழுத்தை விரல்களால் வெகு அழுத்தமாக நெரிக்கத் தொடங்கினான்.

சரோஜாவின் மரணம் பத்திரிகைச் செய்தி ஆயிற்று. பொலிஸ், அதை தற்கொலை என்று ஜோடித்து வழக்கை முடித்துக் கொண்டது.

•••

"ஹலோ.. மிஸ்... உங்க பின் சீட்ல என்னமோ ஒட்டிட்டு இருக்கு...."

முதல் முறையாக சுந்தரின் சொற்கள் அந்த ஹோண்டா மோட்டார் சைக்கிள் தேவதையின் காதுகளில் வட்டமிட, அவள் புன்னகையுடன் தன் பின்புறம் அழகாகத் திரும்பினாள்.

பின் சீட்டில் ஒன்றுமில்லை என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். இன்று அவனை எப்படியும் தன்வலைக்குள் வீழ்த்த வேண்டும் என்ற தீர்மானத்துடன்தான் அவள் வந்திருந்தாள். அவனாகப் பேச்சுக் கொடுத்து மாட்டியிருக்கிறான். தப்பவிடக் கூடாது...

"இட்ஸ்... ஆல் ரைட்... மிஸ்டர்.. பேரென்ன?"

"சுந்தர்!"

"ஓ... வெரி நைஸ் நேம்.. ஆமா... நானும் இந்த வழியில போறப்ப எல்லாம் உங்களை நோட் பண்ணிட்டுத்தான் இருக்கிறேன். என்னையே தினமும் கவனிச்சிட்டு இருக்கிறீங்க... கமோன், டெல் மி..டு பிஃபிராங்க்... உங்களுக்கு நான் அவசியம் தேவைன்னு ஃபீல் பண்றீங்க.... அப்படித்தானே மிஸ்டர்... சுந்தர்..?"

ஒற்றைக் கண்ணைச் சிமிட்டியபடி அவள் ஐஸ்கிரீம் குரலில் கேட்க, அவன் நிஜமாகவே விக்கித்துப் போனான்... ஆச்சரியம் அவன் முகத்தில் ஒட்டிக்கொண்டது. அவள் வாவென்று சைகை காட்ட, மந்திரத்தில் கட்டுப்பட்டவன்போல் அவளது பைக் பின்னால் ஒட்டிக்கொண்டான்...

பைக்.. அந்தப் பார்க் முன்பு நின்றது...

ஒரு ஒதுக்குப்புறமான நிழலில், புல் தரையில் அமர்ந்தார்கள். சால்வாரை சற்று விலக்கியபடி சாய்ந்து உட்கார்ந்தாள். அவன் திக்குமுக்காடி திணறிப் போனான்.

"இன்னிக்கு தேதி இருபத்தேழு-இரண்டையும் கூட்டினா ஒம்பது. உங்களுக்கு எண் கணித சாத்திரத்தில நம்பிக்கையிருக்கா..? மிஸ்டர்... சுந்தர்... சித்தர்ஜி எனக்குச் சொல்லியிருக்கார்... நான் எதை அடைய விரும்பினாலும் ஒன்பதாம் எண் வர்றமாதிரிதான் அமையணுமாம்... நீங்க பாக்கறதுக்கு அமிதாப் பச்சன் மாதிரி இருக்கிறீங்க... அஜித்குமார் மாதிரியும் தெரியுறீங்க... சோ.. நீங்க எனக்கு வேணும்..."

அவள் ஹிஸ்டீரியா வந்தவள் போல் பேசினாள். திடீரென அவனை மல்லாக்கத் தள்ளி, அவன் மேல ஏறி அமர்ந்தாள்... கண்களில் அதீத வெறி தெரிந்தது.... அவன் சட்டையின் பட்டன்களை ஆத்திரத்துடன் பிடுங்கி எறிந்தாள். அவன் மேல் அப்படியே கவிழ்ந்தாள்.

மறு நாள் பேப்பர்களில்...

அவன் கொலையான செய்தியும் பரபரப்பாக வெளியிடப்பட்டிருந்தது.

வழக்கம் போலவே பொலிசும் இதைக் கண்டுபிடிக்க அக்கறை ஏதும் எடுத்துக் கொள்ளவில்லை.

"சரோ... என்னுயிர் சிநேகிதியே...! உன்னைக் கொன்றவனை இல்லை, இல்லை... உன் போல அழகான பல இளம் சரோஜாக்களை தன் இச்சைக்காக அநியாயமாகக் கொன்றவனை... அவன் வழியிலேயே... போய் மடக்கிப் பழி தீர்த்து விட்டேன்... நீ... அமைதியடைவாய்...!"

அந்த ஹோண்டா தேவதை சரோஜாவின் படத்திற்கு மாலை போட்டுத் தன் பிரபாவத்தை மனமுருகிச் சொல்லிக் கொண்டிருந்தாள். ●

# இல்லை... இல்லை...



போடியார் யாரையோ எதிர்பார்த்து திண்ணையில் காத்திருந்தார். அடிக்கடி அவர் பார்வை படலையை நோக்கியது. காலையில் வருவதாய்ச் சொன்ன தரகர் கந்தையா மதியமாகியும் வரவில்லையே என்று எண்ணியபோது படலை திறக்கும் சத்தங்கேட்டது.

தரகரைக் கண்ட போடியார் "வாடாப்பா கந்தையா! காலமில வாறெண்ட நீ.... நானிண்டைக்கி வாடிக்கும் போகாமக் காத்திற்றுக் கிடந்தன்," என்று கூறியபடி வரவேற்றார்

"செல்லம்மா! சத்தவாவன்; நம்மட தரகர் வந்திரிக்கார். அந்தக் கல்பன் பாயையும் வெத்தில வட்டாவையும் கொண்டுவா!" என்று குரல் கொடுத்தார். செல்லம்மா பாயை விரித்துப் போட்டு, "இரிங்க அண்ணன்" என்று உபசரித்தாள். "இந்தவேகா, வெயிலுக்கு வந்தவர் தேத்தண்ணியப் போடாத; தேசிக்கா கரச்சியெண்டா நல்லம்," என்றார் போடியார். செல்லம்மா கொல்லைப் பக்கம் தேசிக்காய் பிடுங்கச் சென்றாள்.

"அப்ப கந்தையா நம்மட விஷயத்துக்கு வருவம். உன்னட்டச் சொன்ன விஷயம் என்னபாடு? சுணக்கப்படா. மனோன்மணிக்கு வயசு ஏறுது?" போடியார் அக்கறையுடன் கேட்டார்.

"மாப்பிள தேடுறதெண்டா லேசான அலுவலா? அதுவும் உங்கட போக்குக்கு ஏத்தாப்ப தேட வேணுமே? புள்ளயும் படிச்ச புள்ள." தரகர் வெற்றிலையை மடித்து வாயில் வைக்கப்போனபோது, செல்லம்மா குவளையைக்கொடுத்து, "குடியுங்க அண்ணன்," என்றாள்.

பீ.ஏ. படிச்ச பொடியன். தாய் நம்மட, ஊரில கனகாலம் ரீச்சராயிருந்து மோசம் போயிற்றா. தகப்பன் றிற்றாயட். ஒரே ஒரு மகன். பிக்கல் புடுங்கல் கிடையா-வசதியுள்ள குடும்பம். இத உட்டா உங்களுக்கு நல்ல மாப்பிள இந்த சென்மத்தில கிடையாது. நாளக்கி சாயங்காலம் நாலுமணி போல தகப்பனையும் மகனையும் அனுப்பி வைக்கிறன். சட்டுப் புட்டெண்டு பேசி விசயத்த முடியுங்க. அப்ப நான் வாறன்." சொல்லி முடித்த திருப்தியோடு தரகர் புறப்பட எழுந்தார்.

போடியார், தரகரின் கையைப் பிடித்திழுத்து, "சாப்பிட்டுட்டுப்போங்க!" என்று வற்புறுத்தினார். "இல்ல போடியார் மனிசி பாவம்-சாப்பிடாமக் காத்துக் கிடக்கும். எல்லாம் நல்லபடியா முடியட்டும், விருந்து சாப்பிடுவமே!" சிரித்துக்கொண்டே கந்தையா கிளம்பிவிட்டார்.

மறுநாள் பொழுது மங்களகரமாகப் புலர்ந்தது. போடியாருக்கும் செல்லம்மாவுக்கும் இருப்புக் கொள்ளவில்லை.

"இஞ்சாருங்கோ! மாப்பிள்ளைப் பொடியன் வாறெண்டு தெரியுந்தானே? மண்டபத்து மூலவளிய ஒட்டடை தொங்கிக் கிடக்கு. தூசு தட்டிய எடுத்துத் தட்டிக்கொஞ்சம் கூட்டி விடுங்களன்!" என்றாள் செல்லம்மா.

"அட மருமகன் வரப்போறார் எண்டதும் பெரிய அடுக்குப் பண்றியே?" நமுட்டுச் சிரிப்புடன் கீழ்ப்படிவுள்ள மாணவனாய் செயலில் இறங்கி விட்டார் போடியார்.



"பிள்ளை மனோன், உன்ர விளையாட்டுத் தனத்த உட்டுப்போட்டு, என்னோட கூடமாடக் கொஞ்சம் வேலையப்பாரு, நாளைக்கிக் கட்டிக்க போறவனிட்ட ஏச்சு வாங்காத." செல்லம்மா புருஷனுக்கும் மகளுக்கும் கட்டளையிட்டபடி பம்பரமாய்ச் சுழன்றாள்.

மணி நாலை நெருங்கியது... "மனோ முகத்தை நல்லா சந்தன சோப் போட்டு கழுவிச் சீக்கிரம் உடுடி. வருசத்துக்கு வாங்கின வெங்காய நிறப்பட்டுச் சேலய உடு." என்று அவசரப்படுத்தினாள் செல்லம்மா.

"இஞ்சாருங்கோ..... உங்களத்தான்-கோலங்காட்டிட்டு நிக்காம, உடையார் இந்தியாவில வாங்கி வந்து தந்த மஞ்சள் கரவேட்டிய உடுங்க- நேரம் போகுது." போடியாரை முடுக்கினாள் செல்லம்மா. எல்லாவேலையும் முடிந்தது.

சரியாக நாலரை மணிக்கு அவர்கள் வந்தார்கள். போடியார் வாசலுக்கு விரைந்து வரவேற்றார். வயதான ஒருவர் ஒரு வாலிபனுடன் உள்ளே நுழைந்தார்.

அந்த வாலிபன் வாட்டசாட்டமாய் அழகாய் இருந்தான். மனோனுக்கு ஏத்த சோடிதான் என்று எண்ணியதும் செல்லம்மாவுக்கு மனசு கொள்ளாத மகிழ்ச்சி. செல்லம்மா ஓடியோடி சிற்றுண்டிகள் வழங்கி உபசரித்தாள். வாலிபனின் தந்தை பேச்சை ஆரம்பித்தார்.

"இவன் என் ஒரேமகன். அம்மா இல்லை. குடி புகைப்பழக்கம் எதுவும் கிடையாது. பீ.ஏ. படிச்சிருக்கான். அமைதியான போக்கு. ஆடம்பரம் எங்க இருவருக்கும் பிடிக்காது. அதேபோல சீதனம் வாங்குவதையோ கேட்பதையோ விரும்பமாட்டோம். என்ன சிவா.. நான் சொல்றது சரி தானா?"

"ஆமாப்பா" தலை கவிழ்ந்து சொன்னான் சிவா.

"சரி பொண்ணைப் பார்க்கலாமா?" என்றார், பையனின் அப்பா. மனோன்மணி வந்து நமஸ்காரம் பண்ணினாள். தனக்குப் பிடித்திருப்பதை சிவா தன் தகப்பனிடம் ஜாடையால் தெரிவித்தான்.

"எங்க இருவருக்கும் உங்க குடும்பத்தையும் பொண்ணையும் பிடிச்சிருக்கு. கலியாணத்த உங்க இஷ்டம் போல எப்ப வேணுமெண்டாலும் வைக்கலாம். நாங்க வாறோம்." சொல்லிவிட்டு இருவரும் கிளம்பினர். போடியார் மகிழ்ச்சியில் மெய்மறந்து போயிருந்தார். செல்லம்மாவின் முகத்தில் காலையில் இருந்த மகிழ்ச்சி இல்லை. சாதாரணமாகவே இருந்தாள். மனோன்மணியின் முகத்தில் என்றுமில்லாத ஒரு பூரிப்பு நாணமாகப் படர்ந்து கிடந்தது.

"என்ன செல்லம்மா, இந்த இடம் உனக்குப் பிடிச்சிருக்கா?" என்று மனைவியிடம் கேட்டார் போடியார்.

"எனக்கு என்னவோ பிடிக்கல்ல..."

"என்ன சொல்றா?" போடியார் அதிர்ந்தார். மனோன்மணி கலங்கினாள்.

**ரூபராணி**


"ஒ புடிக்கல்லத்தான். கொஞ்சமெண்டாலும் யோசிச்சீங்களா? அறிவிருக்கா? சீதனம் வேணாமெண்டு லேசில ஆருஞ் சொல்லுவானா? அதுக்கென்ன காரணம்? அவனுக்கு உடம்பில ஏதாச்சும் நோய் இருக்கும். இல்லாட்டி கெட்ட பழக்கம் இருக்கும். குடியில்ல, புகையில்ல. சீதனம் இல்ல. ஆடம்பரம் இல்ல. எல்லாம் இல்ல, இல்ல, இவன் நோமலான ஆள் இல்ல!" செல்லம்மா குரலை உயர்த்திக்கத்தினாள்.

போடியார் இடிந்துபோய் உட்கார்ந்து விட்டார்.



படிப்பகம்

# கண்ணீரும் உயிரும்



காதலும் கண்ணீரும்
பிரிக்க முடியாதவை!

காதல் ஜெயிக்கும்போது
ஆனந்தக் கண்ணீர்!

காதல் தோற்கும்போது
ஆற்றாமைக் கண்ணீர்!

ஜெயித்த காதலிலும்
கண்ணீருக்கு வேலையுண்டு!

இடைக்கால பிரிவு
இடைக்கிடை ஊடல்
என்று கண்ணீருக்கு
காலமெல்லாம்
காதலில் இடமுண்டு!

ஆனாலும்
நிரந்தரப் பிரிவில்
ஊறறெடுக்கும்
கண்ணீரின்
கனம்தான் அதிகம்!

"எங்கிருந்துதான் வருகிறதோ
அருவி அருவியாக
நீளமான கண்ணீர்?"

ஆச்சரியப்பட்டுக்கொண்டே
அவள் அழுதுகொண்டிருந்தாள்!

சூரியன்போல
அவனும் சுட்டுவிட்டு
தூரம் போய்விட்டான்!

சூரியன்போல
அவனும்
ஒரு தொலைவில்
மறைந்துவிட்டான்!

சொற்கள் என்ன
கற்களா?

எறிந்து, எறிந்து
இதயத்தை உடைத்துவிட்டு
எழுந்து போய்விட்டான்!

கண்ணீருக்குள்
நினைவுகள்
தத்தளித்தன!

நெஞ்சக்குள்
நினைவுகள்
சுட்டெரித்தன!

தொண்டைக்குள்
நினைவுகள்
முள்ளாக உறுத்தின!

கண்ணுக்குள்
நினைவுகள்
நீராக மாறின!

கருத்துக்குள்
நினைவுகள்
சோகமாய் ஆயின!

அவள் அழுதாள்
ஆச்சரியப்பட்டுக் கொண்டே
அழுது கொண்டிருந்தாள்!

"கண்ணீரை மட்டும்
காதல் பரிசாக
தந்து போனவனே!
ஏன் என்னை
காதலித்தாய்?"

மூச்சு நிற்கும்வரை
கூட வருவாய்
என்றுதான் நம்பினேன்!

பேச்சையே மாற்றிவிட்டு
போய்விட்டாயே!

நான் கொடுத்த
பரிசுகளை
திருப்பித் தந்துவிட்டாய்!

பொருளாக தந்ததை
திருப்பித் தரலாம்.

உணர்வாலே தந்ததை
எப்படித் தருவாய்?

என் உதடுகளால்
ஒற்றிக்கொடுத்த
கைக்குட்டையையும்
பத்திரமாக தந்துவிட்டாய்!

என் உதடுகள்
ஒட்டி உறவாடிய
உன் உதடுகளை
தரமுடியுமா?

உனக்குள் நானும்
எனக்குள் நீயும்
சுவாசித்தோமே!

பரிமாறப்பட்ட
மூச்சையெல்லாம்
திருப்பித்தர இயலுமா?

எல்லாவற்றையும்
விட்டுவிடலாம்
நான் உனக்கே
உனக்காக தந்தேனே
அன்பு
அதனை
எந்த ஜென்மத்தில்
திருப்பித் தரப்போகிறாய்?

"கண்ணீர்தான்
இனியென் சொத்து!"
என்று கூறினேன்.

'நடிக்காதே' என்று
நீ வெடித்தாய்!

உன்னைப் படிக்காமல்
காதலித்தேனே-ஆகவே
என்னை நீ
நடிகையாக்கியது
நியாயம்தான்!

கண்ணீரில் நான்
கரைந்து கொண்டிருக்க
பன்னீரில் நீ
குளித்து முடித்து
மணமகனாக
தயாராகிக் கொண்டிருப்பாய்!

உனக்கு
காதல் பொழுதுபோக்கு!

எனக்கு
காதல் உயிர் மூச்சு!

உனக்கு
காதலி கைக்குட்டை!

வைத்தும் இருப்பாய்
விசிவிட்டும் போவாய்!

"எனக்கு
காதலன் இதயம்!

இறக்கிவைத்தால்
இறந்துபோவேன்!"

அவளுக்குள்
துக்கம் பீறிட்டது!

தீ மூட்டிவிட்டு
அணைக்காமல் போனவன்.

தோலை உரித்துவிட்டு
கனி புசிக்காமல் போனவன்.

காதலையும், காமத்தையும்
கலந்து தந்துவிட்டு
போனவனும் அப்படியே!

வெள்ளத்தில் அவளை
இறக்கிவிட்டு
கரைசேர முன்னர்
கைவிட்டுப் போனான்.

காதல் நினைவுகள்
துரத்துகின்றன.
காமம் வருத்துகிறது!

நள்ளிரவு
கொல்லிரவாக
உயிரையும், உடலையும்
பிழிகிறது!

## இலக்கிய நயம்

தருவது ரசிகன்

அவள் அழுகை
தடைப்படாத மழையாக
இறங்கிக்கொண்டிருந்தது!

கரை எங்கே?
கரை எங்கே?

உயிரும், உடலும்
உருகி உருகி
தேடிக் கொண்டிருந்தன.

நள்ளிரவில் அவள்
கண்ணீர்
இரவை ஈரமாக்கியது.

நள்ளிரவில்
அவள் சோகம்
இரவை நெகிழவைத்தது.

அவள் காதலையும், காமத்தையும்
பாதி நீந்திவிட்டு
மீதியை கடக்க முடியாமல்
கண்விழித்தபடியிருந்தாள்.

"காமக் கடும்புனல் நீந்திக் கரை
—காணேன்
யாமத்தும் யானே உளேன்"

அதிகாரம்: 117, குறள்: 1167.

(ஸ்போர்ட்ஸ்)

## கிரிக்கெட் புத்தகம்

கிரிக்கெட் இரசிகர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அண்மையில் இந்தியாவின் தலைநகர் நியூடெல்லியில் 'வில்ஸ் கிரிக்கெட் புத்தகம்' வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகத்தில் இதுவரை நடந்த 6 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் பற்றிய சுவாரசியமான பல தகவல்கள் அடங்கியுள்ளன. அது மட்டுமன்றி, அடுத்த வருடம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள 7வது உலகக்கோப்பை பற்றிய அறிந்திராத பல விஷயங்களும் இதில் அடங்கியுள்ளன.

பல்வேறு பிரிவுகளைக் கொண்ட இப் புத்தகத்தில் உலகின் முன்னணி வீரர்களான டெண்டுல்கர், ஜெயசூரிய, அலன் போர்டர், கபில் தேவ், ரிச்சர்ட்ஸ் ஆகியோர் பற்றிய விபரங்களும் உள்ளன.

ஐ.டி.சி. என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இப் புத்தகத்தின் விலை 395 இந்திய ரூபாய்.

## பந்து வீச்சில் தவறு



இந்தியக் கிரிக்கெட் அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் தவறு உள்ளது என்று ஒரு குற்றச்சாட்டு. இதனால் இவர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி.) சார்பில் சுமத்தப்பட்ட இந்தக் குற்றச்சாட்டு இந்தியக் கிரிக்கெட் வட்டாரத்தில் பெரிய வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.. காரணம், சமீப காலமாக ஹர்பஜன் சிங் கலந்து கொண்ட போட்டிகளில் மிகவும் சிறப்பான முறையில் பந்து வீசி வந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக இதே போன்றுதான் இந்தியாவின் இன்னொரு சுழற்பந்து வீச்சாளரான ராஜேஷ் சௌகான் மீதும் குற்றச்சாட்டு எழுந்தது. இதனால் சௌகான் நீண்டகாலம் போட்டிகளில் கலந்து கொள்ளாமல் இருந்தார்.

இதனால் ஹர்பஜன் சிங்கின் கிரிக்கெட் வாழ்க்கை பாதிக்காமல் இருக்க முன்னாள் இந்திய சுழற்பந்து வீச்சாளர் பிரசன்னா முன்வந்துள்ளார். இந்திய அணியின் முன்னாள் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான பிரசன்னா கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். பிரசன்னா தான் சௌகான் விஷயத்திலும் அவருக்குத் துணையாக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புதுமையான விடயங்கள்

ஒக்டோபர் 24 முதல் நவம்பர் 1ம் திகதி வரை நடைபெறும் மினி உலகக் கோப்பைப் போட்டிகள் கிரிக்கெட் இரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பார்ப்புகளுக்கு உள்ளாகியிருக்கிறது. ஏனென்றால் இப்போட்டிகள் பற்றி எழுந்த பல புதுமையான விடயங்கள்தான்.

உலகக் கோப்பைப் போட்டியைத் தவிர இதுவரை வேறு எந்தப் போட்டியிலும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்தைப் பெற்றுள்ள 9 நாடுகளும் கலந்து கொண்டதில்லை. இந்த வகையில் மினி உலகக்கோப்பைப் போட்டியில் டெஸ்ட் விளையாடும் 9 நாடுகளும் விளையாடுகின்றன.

மேலும் இதுவரை எந்தப் போட்டியும் தனிப்பட்ட நொக்-அவுட் முறைப்படி நடத்தப்படவில்லை. ஆனால் மினி உலகக்கோப்பைப் போட்டி முதன் முதலாக நொக்-அவுட் முறையில் நடத்தப்படுகிறது. இதனால் ஒவ்வொரு அணியும் முதல் வாய்ப்பில் வெற்றி பெற்றால்தான் அடுத்த போட்டிக்கு முன்னேறலாம்.

பொதுவாக உதைபந்தாட்டத்திலோ அல்லது ஹொக்கியிலோ தான் சமநிலை தொடர்ந்தால் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க டை-பிரேக்கர் முறை நடைமுறையில் இருந்தது. கிரிக்கெட்டில் இதுவரை காலமும் புகுத்தப்படாத இந்த டை-பிரேக்கர் முதன் முறையாக இப்போட்டிகளில்தான் அறிமுகமாகிறது.

இவற்றைவிட இதுவரை காலமும் கிரிக்கெட் போட்டிகள் தொலைக்காட்சியில் மட்டுமே நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டு வருகின்றன. முதன் முறையாக மினி உலகக் கோப்பைப் போட்டிகள் இண்டர்நெட்டில் நேரடியாக ஒளிபரப்பப்படுகிறது. இதன் மூலம் ஒவ்வொரு பந்து வாரியாக ஸ்கோர் விபரங்களும் படங்களும் இண்டர் நெட்டில் உடனுக்குடன் வெளிவருகின்றன.

இவ்வாறான சிறப்பம்சங்களைக் கொண்டுள்ள இந்த மினி உலகக் கோப்பைப் போட்டிகளை அச்சுறுத்துவது மழை.

## சிந்தியா பதில்கள்

என்பதுதான் சம்பத்திய தகவல். ஊடல்-கூடல் என்பதற்கு அடிக்கடி உதாரணம் தந்துகொண்டிருக்கிறார்கள்.

★ அனுபவம் உள்ளவர்கள் சிலர் படிப்பறிவு உள்ளவர்களைக்கூட மிஞ்சிவிடுகிறார்களே?

ஜெ. கணேஷ், வவுனியா.

உண்மைதான்!

ஒரு வகுப்பில் ஒரு ஆசிரியை கூட்டல் கழித்தல் பற்றிய கணக்குப் பாடத்தை நடத்திக் கொண்டிருந்தார்.

அப்போது அவர்: "ஒரு பட்டியில் பன்னிரெண்டு செம்மறியாடுகள் அடைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஆறு ஆடுகள் வேலியைத் தாண்டி ஓடிவிட்டன. மீதி எத்தனை ஆடுகள் பட்டியில் இருக்கும்?" என்று கணக்குக் கேட்டார்.

சகல மாணவர்களும் "பன்னிரெண்டில் ஆறு போனால் மீதி ஆறு ஆடுகள் இருக்கும்! என்று எழுதினார்கள்.

ஒரே ஒரு மாணவன் மட்டும்: "ஒன்றும் மீதியிருக்காது. காரணம், செம்மறியாட்டின் குணம் யாதெனில், ஆறு ஆடுகள் ஓடும்போது மீதியுள்ளவையும் கூடவே ஓடி விடும். ஒன்றும் மிஞ்சியிருக்காது" என்று எழுதினான். உண்மை அதுதான்.

★ சிந்தியா! மனிதர்களைவிட விலங்குகள் உயர்ந்தவைபோல எனக்குத் தெரிகிறது. உங்களுக்கு?

எம். ரிஸ்வான், கல்முனை.

மனிதனுடைய பரிணாம வளர்ச்சி பற்றி ஆராய்ச்சி செய்த டார்வின் கூறியது இது:

"பொதுவாக சிறிய குரங்கு வளர்ந்தவுடன் பெரிய குரங்காக மாறும். சிறிய பன்றி வளர்ந்து பெரிய பன்றியாக மாறும். ஆனால் மனிதன் மட்டும் வளர்ந்தபிறகு உண்மையான மனிதனாக இருப்பதில்லை. குணத்தால் குரங்காகவோ, பன்றியாகவோ மாறி விடுகிறான்."



'பிரேம விருதா' படத்தில் சிவபார்வதி

★ ஞாபக சக்திக்கு மாத்திரைகள் உள்ளனவா?

திருமதி தேவி பாலாஜி, பதுளை.

உண்டு. அமெரிக்காவில் 'இன்கோ' என்ற ஒரு தாவர இலையிலிருந்து தயாராகும் நினைவாற்றல் மாத்திரைகள் பரவாயில்லை என்கிறார்கள். இந்த 'டியா' மாத்திரைகளை எலிகளுக்குக் கொடுத்து ஆராய்ச்சி செய்த போது நினைவாற்றல் மேம்பட்டிருந்ததாம்.

முப்பது வயதின் பின்னர் சில ஹார் மோன்கள் சுரப்பது சிலருக்கு குறைவதால்தான் ஞாபக சக்தி சரிகிறதாம். அந்தக் குறையை இந்த மாத்திரை நிவர்த்தி செய்கிறதாம்.

★ ஜனாதிபதியின் பேட்டியில் செம்மணிக்கு விரைவாகத் தீர்வு காண்பதாக கூறியுள்ளாரே?

செ. கிறிஸ்டி, கொழும்பு-05.

எத்தகைய தீர்வு என்று சொல்லவில்லைத்தானே!

★ காதலைக் குறிப்பதற்கு ஏற்ற பூ எது? ரோஜாவா? மல்லிகைப்பூவா?

செல்வகௌரி, திருமலை.

ரோஜாதான்!

ரோஜாக்களின் காதல் குணங்கள் பற்றி சம்பத்தில் படித்த தகவல் இது- பிடித்துக் கொள்ளுங்கள்.

வெள்ளை ரோஜா, 'நான் உன்னை உண்மையாகக் காதலிக்கிறேன்' என்று கம்பீரமாகச் சொல்லுமாம்.

வெள்ளையும் சிவப்புமாக ரோஜாக்கள் சேர்த்து அனுப்பினால், 'நம்முடைய உறவு வலுப்பட ஆசைப்படுகிறேன்' என்று அர்த்தம்.

சாதாரண ரோஜா (பிங்க்) கொடுத்தால், 'ஐயோ என்னை நம்பு, நான் உன்னைக் காதலிக்கிறேன்!' என்று மன்றாடும்.

மஞ்சள் ரோஜா என்றால் நட்பு மட்டும். கறுப்பு ரோஜா என்றால் 'டாட்டா' என்று அர்த்தம். அதாவது காதல் முறிந்து போச்சு!

★ ரணில் ஏன் அமெரிக்கா போனார்?

இ. ரஞ்சித், மட்டக்களப்பு.

ஆளும் அணிக்கும், எதிரணிக்கும் பொது நண்பன் அமெரிக்கா!

★ சிந்தியா! உங்களுக்கு மிகவும் பிடித்தமான இரண்டு வார்த்தைகள் கூறுங்கள்?

சி. நித்தியராஜ், மருதானை.

அம்மா! அப்பா!

★ ஜெயலலிதாவின் பரபரப்பை சமீபத்தில் காணவில்லையே?

எஸ். சிறீதரன், புத்தளம்.

மிஞ்சினால் கெஞ்சும் ஆளல்ல வாஜ்பேயி என்பதைப் புரிந்து கொண்டதும் ஒரு காரணம். மிரட்டி, மிரட்டி அவருக்கே தற்காலிக சலிப்பு ஏற்பட்டது இரண்டாவது காரணம்.

★ அஜித்-ஹீரா காதல் மறுபடி ஓ.கே. என்று சினி விசிட்டில் செய்தி வந்ததே உண்மையா?

அ. பரமநாதன், கொழும்பு-12.

சினி விசிட்டில் பொறுப்புடன் தான் முரசு தகவல் தரும்! மறுபடி சேர்ந்தது மட்டுமல்ல, 'தொடரும்' படப்பிடிப்புக்கு சேர்ந்தே வருகிறார்கள். சேர்ந்தே போகிறார்கள்




★ என்ன சிந்தியா! கிளிண்டன் ஜோக் கைவசம் இல்லையா? அல்லது கிளிண்டனை மறந்து போனீர்களா?

வி. ஜெயக்குமார், பசறை.

நண்பர்: கிளிண்டன் நாளை இரவை தன் இனியவளுடன் கழிக்கப்போகிறாராம்!

மற்றவர்: அப்படியானால் நாளை இரவு முழுக்க கிலாரி தனியாக இருக்கவேண்டுமா?!

★ எத்தகைய ஆசைகள் நல்லவை?

எல்.லீனஸ், மன்னார்.

தனக்கும், அடுத்தவருக்கும் துன்பம் தராத ஆசைகள்!

★ சிந்தியா! கலைஞர் கருணாநிதியும், சிவாஜி கணேசனும் கண்ணீர் விட்டு கட்டித் தழுவிக் கொண்டார்களாமே?

ஆர். அஹமட், கிண்ணியா.

நடிப்பு என்கிறார்கள் சிலர். பழைய நினைவுகளின் துடிப்பு என்கிறார்கள் வேறு சிலர்! எப்படி இருந்தாலும் இருவரும் தமது துறைகளில் இமயங்கள்! இரண்டு இமயங்கள் முட்டிக்கொண்டபோது அனல் தெறிக்காமல் கண்ணீர் தெறித்ததுக்கு காரணம் பக்குவப்பட்ட வயது!

★ நடிகர்கள் பலர் அரசியலில் கொடி கட்டிப் பறந்துள்ளனர். நடிகைகளில் ஜெயலலிதா மட்டும்தானே?

மு. குமாரதாஸ், பண்டாரவளை.

இதுவரை அப்படித்தான்! ஜெயலலிதா போல மாற நினைக்கிறார் என்.டி. ராமராவின் மனைவி சிவபார்வதி. படம் ஒன்றில் பார்வதியாக நடிக்கிறார். முன்னவர் நடித்து விட்டு அரசியலுக்கு வந்தார். பின்னவர் அரசியலுக்கு வந்துவிட்டு நடிக்கிறார்.

★ மிருகங்களுக்கும் குறுக்கு வழி தெரியுமா? அல்லது மனிதர்களுக்கு மட்டும் உரிய சொத்தா?

செ. சிவலோகன், மட்டக்களப்பு.

இந்தக் கதையைக் கேளுங்கள்:

நாய்க் கண்காட்சி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இறுதிச் சுற்றில் இரண்டு நாய்கள் தகுதி பெற்றன. அவற்றின் முன்பாக இரண்டு தட்டுகளில் இறைச்சி வைக்கப்பட்டது.

இரண்டு நாய்களது எஜமானர்களையும் 'தொட வேண்டாம்' என்று தத்தம் நாய்களுக்கு கட்டளை போடச் சொன்னார்கள்.

எந்த நாய் கடைசி வரை தன் எதிரில் உள்ள இறைச்சியை சாப்பிடாமல் கட்டுப்பாட்டுடன் இருக்கிறதோ, அந்த நாய்தான் முதல் பரிசுக்கு ஏற்றது என்று முடிவு செய்யப்பட்டது.

ஐந்து நிமிஷம் கழித்து ஒரு நாய் இரண்டு தட்டையும் பார்த்து விட்டு, தன் எதிரில் இருந்த இறைச்சியைத் தொடாமல், பக்கத்து நாய்க்கு வைக்கப்பட்ட இறைச்சியைத் தின்றுவிட்டு பேசாமல் தன்னுடைய இடத்தில் வந்து அமர்ந்தது. அதன் எதிரில் உள்ள இறைச்சி அப்படியே இருந்ததால் அந்த நாய்க்கே முதல் பரிசு தரப்பட்டது.

# திருமறை தரும் பொது நெறி 33

ஆண்டவரின் ஆணையை ஏற்ற சாமுவேல் பெத்லகேமை நோக்கிப் பயணமானார். கர்த்தர் கூறியபடி தன்னுடன் ஒரு கன்றுக்குட்டியையும் கொண்டு போனார். சவுலின் ஆட்சியில் வெறுப்புற்ற கர்த்தர், இஸ்ரயேலரை நல்லபடி வழிநடத்துவதற்கேற்ற ஒருவரைத் தேடிக்கண்டுபிடித்துத் திருப்பொழிவு செய்வதற்காகவே சாமுவேலை அங்கு அனுப்பி வைத்தார்.



சாமுவேல் பெத்லகேமுக்கு வந்து சேர்ந்தபோது, அங்குள்ள மக்கள் அச்சங்கொண்டனர். தான் ஆண்டவருக்குப்பலி செலுத்தவே வந்திருப்பதாகக் கூறினார். அதற்காக அனைவரும் தங்களைத் தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பெத்லகேமில் எப்ராத்திய வம்சத்தைச் சேர்ந்த ஈசாய் என்றொருவர் இருந்தார். அவருக்கு எட்டுப் புதல்வர்கள் இருந்தனர். அவர்களை ஒருவர்பின் ஒருவராக தன் முன்னால் வரும்படி சாமுவேல் சொன்னார். இவர்களில் எவரை ஆண்டவா இஸ்ரயேலரின் அரசனாகத் திருப்பொழிவு செய்ய நினைத்திருக்கிறார் என்பதனை அப்போத சாமுவேல் அறியமாட்டார்.

தளர்த்தி அமைதியடையச் செய்யும் சக்தி படைத்தது இசை.

தமது மன்னர் சவுல் தீய ஆவியினால் பீடிக்கப்பட்டு நிலை தடுமாறும்போது அவருடைய பணியாளர்கள் மிகவும் பரிதாபப்படுவர். நல்லிசை கேட்டால் ஒருவேளை தம் மன்னரின் மனம் ஆறுதலடையும் என்று அறிந்த ஒரு பணியாளன், இசையின் பெருமையையும் ஆற்றலையும் மன்னன் சவுலிடம் எடுத்து விளக்கினான். பெத்லகேமிலுள்ள ஈசாவின் இளைய மகன் தாவீது யாழ் மீட்டி இசைவிருந்தளிப்பதில் நிகரற்றவன் என்று கூறினான். அவனை அழைத்துவர ஆணையிட்டால், தாவீதை அரண்மனைக்கு அழைத்து வரலாம் என்றான்.

மன்னனும் தனது பணியாளனின் கருத்துக்கு இசைந்தான். ஈசாவிடம் சென்ற பணியாளன் தாவீதை அழைத்து வந்தான். தெய்வீகக்களை பொதிந்த சிறுவன் தாவீதைக் கண்ட மாத்திரத்திலேயே அவனை சவுலுக்குப் பிடித்துவிட்டது. அவனது யாழில் இசைமீட்டச் சொன்னான். அந்த இன்னிசையால் கவரப்பட்ட மன்னன், தாவீதை அரண்மனையிலேயே தங்கிவிடுமாறு

பாதுகாப்பாகக் கொடுத்துவிட்டு போர்க்களம் சென்றான்.

தாவீது சென்றிருந்த சமயம் இஸ்ரயேல் படைகள் கலவரமடைந்து காணப்பட்டனர். பெலிஸ்தியப் படையினரின் முன்னரங்கிலிருந்து சிம்ம கர்ஜனை போன்ற குரல் ஒன்று கேட்டது:

"ஏய்! சவுலின் எலிப்படையில் சேர்ந்து பெலிஸ்தியராகிய எங்களுடன் சண்டை போடவா வந்தீர்கள்? இதோ நான் ஒருத்தன் தனியாக நிற்கிறேன். தைரியமிருந்தால் எவனாவது என்னுடன் பொருத வரலாம். உங்களில் என்னுடன் போரிடவருபவன் என்னை வீழ்த்தினால் பெலிஸ்தியர் அனைவரும் இஸ்ரயேலரின் அடிமைகள். நான் உங்கள் வீரனை வெற்றி கொண்டால் இஸ்ரயேல் இனத்தவர் அனைவரும் எங்கள் அடிமைகள்...! என்ன...? சம்மதமா...? தைரியமிருந்தால் எவனாவது வரட்டும்!"

வானமே இடிந்து விழ்வது போல் கேட்ட கோலியாத்தின் குரல் சுற்றியிருந்த மலைகளில் பட்டு பள்ளத்தாக்கு எங்கும் எதிரொலித்தது. இஸ்ரயேல் வீரர்கள் அருகிருந்த புதர்களிலும் பாறைகளின் பின்புறமும் பதுங்கியிருந்தனர்.

தாவீது அப்போதுதான் தனது மூத்த அண்ணன் எலியாபு என்பவனுடன் உரையாடிக்கொண்டிருந்தான். கோலியாத்தின் குரலையும் அவன் கூறிய வார்த்தைகளையும் கேட்ட தாவீது, அங்கு நடைபெறும் சம்பவங்களை அறிய ஆவலுடன், அருகிலிருந்தவர்களிடம் வினவினான். வயதில் குறைந்தவனான தாவீதை, போர் பற்றிய தகவல்களை அறிய

## தாவீதின் துணிச்சல்

அவர்கள் ஒவ்வொருவரும் தன் முன் வரும்போதும், ஆண்டவர் தமது அதிருப்தியையே கூறி வந்தார். முதல் ஏழு புதல்வர்களும் வந்து போனபின் ஈசாவிடம், அவருடைய புதல்வர்கள் அவ்வளவு பேரும் தானா, அல்லது வேறு சிலரும் உள்ளனரா, என்று சாமுவேல் வினவினார்.

தனது இளைய மகனான தாவீது அப்பொழுது ஆட்டு மந்தைகளை மேய்ப்பதற்குச் சென்றிருப்பதாகச் சொன்னார் ஈசாய். அவனை உடனடியாகத் தருவிக்கும்படி சாமுவேல் சொன்னார். அதன்படி தாவீது சாமுவேல் முன்வந்து நின்றான். அவனுடைய அழகிய தோற்றம் சாமுவேலுக்குப் பரம திருப்தியை அளித்தது. 'கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் இவனே!' என்று சாமுவேல் நிச்சயித்துக்கொண்டார். தன்னுடன் கொண்டு வந்திருந்த எண்ணெயால் நிரப்பப்பட்ட கொம்பை எடுத்து தாவீதின் தலையில் தப்பி திருப்பொழிவு செய்தார். ஈசாயும் அவருடைய ஏனைய ஏழு புதல்வர்களும் இக்காட்சியை பயபக்தியுடன் பார்த்து நின்றனர்.

### யாழ் மீட்டுவதில் வல்லவன்

அழகும் புத்திக்கூர்மையும்- அதேவேளை உறுதியான உடல்வாகும் கொண்ட தாவீதுவிடம் மற்றுமொரு சிறப்பம்சமும் இருந்தது. யாழ்மீட்டுவதில் நிகரற்றவனாகவும் அவனிருந்தான். தன் மந்தைகளை, யாழை மீட்டி அதிலெழும் இன்னிசையாலேயே கட்டுப்படுத்தி வைத்திருந்தான். ஆட்டு மந்தைகளைப் பிடித்துக் கடித்து உணவாக உட்கொள்ளவரும் பல காட்டு விலங்குகளையும் தனது கைகளாலேயே அடித்துக் கொல்லும் வலிமையும் தாவீதிடமிருந்தது. அவன் மீது ஆண்டவரின் அருளும் நிரம்பிப் பொதிந்திருந்தது.

தாவீதை இஸ்ரயேலரின் அரசனாக்குவதற்கு ஆண்டவர் தீர்மானித்ததைத் தொடர்ந்து சவுலின் உள்ளத்தில் தீய சக்திகளின் தாக்கம் ஆட்சி செலுத்த ஆரம்பித்தது. இதனால் அவன் கலக்கமுற்றான். தனது கடமைகளை நிறைவாகச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

ஒருவருக்குத் துன்பம் தோன்றும்போது அவருடைய மனத்தில் அமைதி ஏற்படுத்தத் துணைபுரிவது இசையாகும். இசையை விரும்பாதார் எவரும் இலர். பதற்ற நிலையைத்

கேட்டுக்கொண்டான். தீய ஆவியின் தாக்கம் ஏற்படும் போதெல்லாம் தாவீதின் இசையைக் கேட்டு மன்னன் சவுல் ஆறுதலடைந்தான்.

### கொடியவன் கோலியாத்து

இஸ்ரயேலரை பெலிஸ்தியர் போருக்கிழுத்து சண்டை போடுவது அப்போதும் முடிந்தபாடில்லை. அடிக்கடி இருதரப்புப் படைகளும் மோதிக்கொள்ளுவதுண்டு. பெலிஸ்தியர் படையில் கோலியாத்த என்றொரு வீரன்



இருந்தான். ஏனைய வீரர்களைவிட இவன் மிக உயரமானவனாக இருந்தான். அதுபோல் இவனுடைய உடல் பருமனாகவும் இருந்தது. அதிகபலம் உடையவனாகவும் இருந்தான்.

இஸ்ரயேல் படைகள் மன்னன் சவுலின் தலைமையில் ஏலா என்ற பள்ளத்தாக்கின் ஒரு புறத்தே பாசறை அமைத்திருந்தன. எபேகதம் என்ற இடத்தில் பெலிஸ்தியர் போருக்கு ஆயத்தமாகக் காத்திருந்தனர். பெலிஸ்திய வீரன் கோலியாத்தின் தோற்றத்தைக் கண்டு இஸ்ரயேல் படைகள் நடுங்கிக்கொண்டிருந்தன.

தாவீது தனது தந்தை ஈசாவைப் பார்க்கச் சென்றிருந்தான். போர்க்களத்தில் இஸ்ரயேல் படையில் போர் வீரர்களாக ஈசாவின் மூத்த புதல்வர்கள் மூவர் சேர்ந்திருந்தனர். தாவீதிடம் அவருடைய சகோதரர்களுக்குக் கொடுத்துவிட்டுவரும்படி ஈசா சில உணவுப் பண்டங்களை தாவீதிடம் அனுப்பி வைத்தார். தாவீதும் தனது ஆட்டு மந்தைகளை மற்றுமொருவரிடம்

விடாமல் அவனுடைய அண்ணன் எலியாபு தடுத்தான். உடனடியாகப் போர்க்களத்திலிருந்து வீட்டுக்கு ஓடிவிடுமாறு தாவீதை விரட்டினான். ஆனால் வேறோர் புறம் நின்றிருந்த சிலரிடம் நிலமையைக் கேட்டு அறிந்து கொண்டான் தாவீது.

### வீர முழக்கம்

இஸ்ரயேல் இன மக்களின் வீரத்தை மிகக் கேவலமாக இழிவு படுத்திய ஒருவனுக்கு பல்லாயிரககணககான இஸ்ரயேல் வீராகள் பயந்து நடுங்குவது தாவீதுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய அங்கங்களெல்லாம் கோபத்தால் துடித்தன. "இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரின் பிள்ளைகளல்லவா? இவனை ஏன் இதுவரை உயிரோடு விட்டிருக்கிறீர்கள்? இவனுடன் போர் புரிந்து இவன் உயிரைப் போக்க எவரும் முன்வராவிட்டால், நானே இவனைக் கொல்லப்போகிறேன்!" என்று வீர முழக்கமிட்டான். தாவீதின் ஆவேசக் குரல் கேட்டு அவனுடைய அண்ணன்மாருட்பட அனைத்து வீரர்களும் அதிசயித்து வாய்மூடி நின்றனர்.

தாவீதின் அறைகூவலைக்கேட்ட சிலர் அவனை மன்னன் சவுலின் முன் கொண்டு போய்விட்டனர். "என்ன தாவீது! நான் கேள்விப்பட்டது உண்மையா? யாழ் மீட்டுவதில் மட்டும்தான் நீ வல்லவன் என்றிருந்தேன். உன்னால் வாளெடுத்து வீசவும் முடியுமா? உன்னால் அந்த இராட்சதனை வீழ்த்த முடியுமா?" என்று தாவீதிடம் சவுல் கேட்டான்.

"ஆம் அரசே! யாழ் மீட்டும் இவ்விரல்கள், என் ஆட்டு மந்தைகளை வேட்டையாட வந்த சிங்கங்களையும் கரடிகளையும் கீறிக் கிழித்து எறிந்துள்ளன. போலி உடம்புடன் போர்க்களத்தில் வாய் வீரம் காட்டும் இவனை வீழ்த்தி வெற்றியீட்டுவேன்- விடைகொடுங்கள்!"

தாவீது கூறிய இவ்வார்த்தைகள் சவுல் மன்னனை ஆச்சரியக் கடலில் ஆழ்த்தியது. 'சிறுவனாயிற்றே- இவனால் அவனை வீழ்த்த முடியுமா?' என்ற சிந்தனையில் ஆழ்ந்தான் மன்னன் சவுல்.

கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்பதற்கேற்ப சிறுவனாகத் தோன்றும் தாவீதின் முகக்களையும், எடுத்ததை முடிக்கும் திறமையும் கொண்டவன் என்பதனைக் காட்டும் உணர்வும் சவுலுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது. (தொடர்ந்து வரும்)

**திருமறை (31) விடை** ☛ தாய்: அன்னா, தந்தை: எல்கானா.

**பரிசு பெறுவோர்:**

1. பி.ஏ. ஹர்ஷனா, 88/10, சோமாதேவி இடம், கொழும்பு-5.
2. செல்வி ஓ.ஏ. டெபோரா, இல. 72, கம்பளை வீதி, நாவலப்பிட்டி.
3. சி. அரவிந்தன், 16/5 கல்லலை வீதி, கம்பளை.
4. செல்வி ஏ. பிரேமிளா, ஊரி பிரிவு, பசறை.
5. செல்வன் எஸ்.எஸ். வேணுகரன். 75, ஆரோக்கியம் வீதி, பெரியநீலாவணையூர்-01. கல்முனை.

**திருமறை 33 வினா:-** கோலியாத்து எந்தப் படையைச் சேர்ந்தவன்?

நவ. 07க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 33—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# மூன்றெழுத்தும் கலைஞரும்



கா.பூ.க: பவளவிழா கண்ட கலைஞர் அவர்களே! வணக்கம்!

**கலைஞர்: வணக்கம், வாருங்கள், அதில் பாருங்கள் வணக்கம் என்பதும் ஐந்தெழுத்து, வாருங்கள் என்பதும் ஐந்தெழுத்து.**

கா.பூ.க: இருக்கட்டும்! உங்கள் ஆட்சியின் தலையெழுத்து எந்தளவில் இருக்கிறது?

**கலை: ஜனாதிபதியின் கையெழுத்தில் தங்கியிருக்கிறது!**

கா.பூ.க: உங்களுக்கு பிடித்த எழுத்து என்ன?

**கலை: மூன்றெழுத்து!**

கா.பூ.க: ஏன்? எப்படி?

**கலை: தமிழ் மூன்றெழுத்து. தன் இதயத்தை எனக்கு இரவலாகத் தந்த அண்ணா எனும் நாமம் மூன்றெழுத்து. அந்த அண்ணா என் மேல் காண்பித்த அன்பு மூன்றெழுத்து. நான் அவர் மேல் வைத்த உயிர் மூன்றெழுத்து. அண்ணா கூறிய கடமை மூன்றெழுத்து. மறக்கக்கூடாத நன்றி மூன்றெழுத்து. இப்படி முக்கியமான எல்லாமே மூன்றெழுத்தில் இருக்கின்ற காரணத்தால் பிடித்திருக்கிறது. தன்பால் என்னை பிடித்திழுக்கிறது.**

கா.பூ.க: ஆட்சி, பதவி, 'கட்சி', மகன், வாரிசு, பணம், பந்தா போன்றவையும் மூன்றெழுத்துத்தானே?

**கலை: குளத்து சேற்றுக்குள்தானே தாமரை மலர்கிறது. அப்படித்தான் மூன்றெழுத்தில் சேறும் உண்டு, தாமரையும் உண்டு!**

கா.பூ.க: பவள விழாவில் சிவாஜி உங்களை உருகவைத்துவிட்டாரே?

**கலை: ஆம்! உருக வைத்துவிட்டார், என் விழிகளில் அருவி வரவும் செய்துவிட்டார்!**

கா.பூ.க: முன்பெல்லாம் நீங்கள் வசனம் எழுதிக்கொடுத்து சிவாஜியை நடிக்க வைத்தீர்கள். இப்போது சிவாஜி எழுதிய வசனத்திற்கு நீங்கள் நடித்திருக்கிறீர்கள் என்று விமர்சிக்கிறார்களே?

**கலை: இதயத்தின் துடிப்பு அறியாதோர் நடிப்பு என்பார்கள்! அப்படித்தான் நடித்திருந்தாலும் நடிப்புலக இமயம் முன்பாக அது எடுபட்டிருக்குமா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.**

கா.பூ.க: நீங்கள் ஆட்சியில் இல்லாத போதும் துணிந்து நின்று விழா நடத்திய விஜயகாந்தை இம்முறை ஒதுக்கிவிட்டனரே சிலர்?

**கலை: ஒதுக்கவில்லை, அவராக ஒதுங்கி நின்று ஓய்வெடுத்துக் கொண்டார்! சென்ற விழாவில் அவர் ஓயாது உழைத்து களைத்துப் போனதால், இம்முறையும் அவர் உழைப்பை உறிஞ்ச நான் விரும்பவில்லை!**

கா.பூ.க: சரி, விழாவிலாவது அவரை குறிப்பிட்டு பாராட்டியிருக்கலாமே?

**கலை: உதட்டால் பாராட்டாவிட்டாலும் உள்ளத்தால் பாராட்டத் தவறவில்லை!**

கா.பூ.க: மேடையில் முக்கிய இடம் கொடுத்திருக்கலாமே?

**கலை: மேடையிலே இடம் கொடுக்காது விட்டாலும், என் இதயத்திலே நிரந்தர இடம் கொடுத்திருக்கிறேன்.**

கா.பூ.க: தலைவர் கலைஞர் அவர்களே! ஒரேயொரு சந்தேகம்?

**கலை: என்ன சந்தேகம்?**

கா.பூ.க: உங்கள் குடும்பத்தினருக்கு மட்டும் இதயத்தில் இடம் கொடுக்காமல் இருப்பது ஏன்?

**கலை: என்ன கூறுகிறீர்?**

கா.பூ.க: இதயத்தில் இடமில்லாத காரணத்தால்தானே உங்கள் மகன், மருமகன் போன்றோருக்கு பதவி நாற்காலிகளில் இடம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறீர்கள்?

**(கலைஞர் முறைக்க கா.பூ.கந்தசாமி நழுவி ஒடுகிறார்)**

# கந்தசாமியும் முத்துத் தம்பியும்



க: வர்த்தக சம்மேளனம் கூடிப் பேசியதாம். இனப்பிரச்சனை தேசியப்பிரச்சனை எண்டு கூறியதை அரசும் வரவேற்று இருக்குதாம்!

மு: பாலின் நிறம் வெள்ளை என்று சொன்னால் அதனையும் வரவேற்பினமாக்கும்! இனப்பிரச்சனை தேசியப் பிரச்சனை என்று வர்த்தக சம்மேளனம் சொல்லித்தான் அரசாங்கத்திற்கு தெரியுது எண்டால், இன்னமும் முழுசாக கண் திறக்கவில்லை எண்டல்லோ அர்த்தம்!

**க: விடிய விடிய ராமர் கதை விடிஞ்ச பிறகு ராமர் சீதைக்கு என்ன முறை? என்று கேட்கும் நிலையில்தான் அரசாங்கம் இருக்குது என்கிறியள்?**

மு: தட்ஸ் ரைட்! இன்னொரு விஷயம் தெரியுமோ?

**க: சொன்னாத்தானே தெரியும்.**

மு: சோழியன் குடுமி சும்மா ஆடுமோ?

**க: நோ. நெவர்!**

மு: வர்த்தகர்கள் குடுமியும் அப்படித்தான். எதிர்க்கட்சி கூட்டிய மாநாட்டில் கலந்து கொண்டால் அம்மா கோபிப்பார் எண்டு பகிஷ்கரித்தவை! இப்பவும் கவர்மெண்டுக்கு காவடி தூக்கத்தான் மாநாடு நடத்தினவை.

**க: ஓமோம், ஏதோ தீர்வுக்கான முயற்சிகள் இங்கு நடப்பதாக உலகுக்கு ஷோ காட்ட இப்படியான மாநாடுகள் தேவைதான்! அவை நடத்த, இவை பாராட்ட தூள் கிளப்பல் நாடகமப்பா!**

மு: சரியான பொயின்டில் நிற்கிறீர். எதிர்க்கட்சி மாநாட்டுக்கு இவை போகவில்லையல்லோ, இவை நடத்தும் மாநாட்டுக்கு அவை வரமாட்டினம் என்று தெரிந்துதான் அழைப்பு விடுக்கப்பட்டதாம்.

**க: வரமாட்டார்கள் என்று தெரிந்தும் வருந்தியழைத்த மர்மம் என்னவோ?**

மு: அவை மறுப்பதை வைத்து, அவைதான் தீர்வுக்கு தடை என்று கூறிக்கொண்டிருக்க சான்ஸ் கிடைக்குமல்லோ. அதற்குத்தான்!


**க: நீர் ஒரு பேய்க்காய்! குறிதப்பாமல் பொயின்டில் அடிக்கிறீர் ஐசே!**

மு: தேசியப் பிரச்சனையாக இருந்து இன்று சர்வதேசியப் பிரச்சனைகளில் ஒன்றாகவும் மாறிப்போட்டுது எமது பிரச்சனை. இவை இப்பதான் புதுசா கண்டுபிடிச்ச மாதிரி தேசிய பிரச்சனை எண்டு சொல்லுகினம். கொதியல்லோ வருகுது.

**க: தேசிய இனப்பிரச்சனை எண்டு சொல்லியிருந்தாலாவது பாராட்டியிருக்கலாம்.**

மு: அப்படிச் சொல்லுவினமோ? பேரினவாதம் நெஞ்சில் இருக்கையில் தேசிய இனம் என்ற சொல்லு நஞ்சு மாதிரியல்லோ தெரியும்.

# பேச்சாளர் பேரம்பலம்



நாங்கள் அந்தக் காலத்தில் துரோகிகள், நக்கிப் பிழைப்போர், எட்டப்பர்கள், கூட்டிக் கொடுப்போர், குடிகெடுப்போர், கோடாரிக் காம்புகள், குணக் கேடர்கள் என்று நாகரிகமாக பேசியவற்றை மறக்காமல் வைத்திருந்து நினைப்பூட்டிவரும் நாகரிகமற்ற செயலை சில பத்திரிகைகள் செய்துவருவதை நினைக்க எங்கள் பண்பட்ட உள்ளங்கள் புண்ணாகிவருகின்றன.

**காதிலை பூ கந்தசாமி**

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு. கொழும்பு

436331

# கழுத்த ள(வு)த்






SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657

உணவு மற்றும் விவசாயக் கண்காட்சி உலகளாவியரீதியில் வருடாவருடம் 'கிறீன் வீக்' அதாவது பச்சைவாரம் என்ற பெயரில் நடைபெற்று வருகிறது.

ஜெர்மன் நாட்டில்தான் உலகிலேயே மிகப் பிரமாண்டமாக இந்த விழா நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டுக்கான கண்காட்சி பேர்லின் நகரில் நடைபெற்றது. 60 நாடுகள் கலந்து கொண்டன.

விதம் விதமான உணவுப்பொருட்கள் பெரிசு பெரிசாக செய்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் பலரையும் கவர்ந்த ஆப்பிள் வடிவ இராட்சத பனிஸ் இதுதான். அதனைக் கவ்வ வாய் இரண்டு போதாதுதான். அப்படியிருந்தும் இரண்டு பேர் போட்டிபோட்டு சுவைக்கின்றனர்.

இதனை சாப்பிட்டுமுடிக்க இரண்டு மணி நேரம் சென்றதாம். வயிறு புடைக்க உண்பது என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்த மாதிரியெல்லாம் சாப்பிட்டால் வயிறு புடைக்காது. வெடிக்கும்.

## வேக ருசி



பெண்களின் அவயவங்கள் என்னென்ன அளவுகளில் இருக்க வேண்டும் என்று ஒரு வரையறை உண்டு. 'சாமுத்திரிகாலெட்சணம்' என்று கூறுவர். மியன்மார்- என்றழைக்கப்படும் பர்மா நாட்டில் 'பாடுவாங்' அல்லது 'கரெணி' என்றோர் இன மக்கள் வாழ்கின்றனர். இவ்வினப் பெண்களின் கழுத்து நீளத்தைக் கொண்டே அவர்களின் அழகு கணிக்கப்படுகிறது. ஒரு பெண் குழந்தை பிறந்து 5 அல்லது 6 வயதானவுடன் அவள் கழுத்தில் செப்பு வளையங்களைப் போட்டு விடுவார்கள். இதனால் அவர்களுடைய கழுத்து நீண்டு கொண்டே போகும். அதிக நீளமான கழுத்துடைய பெண்களுக்கு மணமகன் கிடைப்பதில் எத்தகைய சிரமமும் இருக்காது. மணமகளாகும் தகுதியுடைய பெண்ணுக்கு சராசரி 25 சென்ரி மீட்டர் கழுத்து இருக்க வேண்டும் என்ற நியதியுண்டு.

அந்த அளவையெல்லாம் தூக்கிச் சாப்பிடும் நீளத்தில் இருக்கிறது இந்த இளம் பெண்ணின் கழுத்து. இவரது கழுத்து நீளம் எவ்வளவு தெரியுமா? 40 சென்ரி மீட்டர். இந்த கழுத்து தாங்கிக் கொண்டிருக்கும் செப்பு வளையங்களின் எடை 9 கிலோ. நமக்கென்றால் கழுத்து முறிந்துபோகும். இதுதான் உலக சாதனைக் கழுத்தளவு என்று பதியப்பட்டுள்ளது. கழுத்து அளவில் இவரை வெல்ல ஆளில்லை.

## பொறி



இல்[illegible] வேற்பறை மேசையில் அலங்காரமா[illegible] வைக்கும் பூச்சாடிகள் போல் காட்சியளிக்கும் இவை, ஒரு வகைத் தாவரம். சாதாரண தாவரமல்ல- பூச்சிகளைப் பிடித்து வதைத்து அவற்றின் ஊனத்தைக் குடித்து வளரும் தாவரம்.

வட அமெரிக்காவின் கிழக்கு நாடுகளில் காணப்படும் இத்தாவரம் பூச்சிகளையே தனது உ[illegible]ள்ளுகிறது. இதன் இலைகளில் ஒருவகைத் திராவகத்தைச் சுரக்கும். இதன் மணம் பூச்சிகளைக் கவர்ந்திழுக்கும் தன்மை வாய்ந்தது.

கவரப்படும் பூச்சிகள் குழாய் வடிவில் அமைந்த குழிக்குள் புகுந்து விடுகின்றன. அவ்வளவுதான்! பூச்சிகளுக்கு அப்புறம் மீட்சியில்லை.

உட்புறம் சுரக்கும் மற்றொரு திரவத்தில் சிக்கி ஒட்டி விடுகின்றன. மெல்லமெல்ல அப்பூச்சியின் ஊனத்தை உறிஞ்சி தன் பசியைத் தீர்த்துக் கொள்ளுகிறது இந்த மாமிச பட்சணியான தாவரம்.

மழை வரும் என்று முன்கூட்டியே இத்தாவரம் கண்டறிந்து வி[illegible] அப்போது மழைத்துளிகள் உள்[illegible] பூச்சியிலிருந்து உறிஞ்[illegible]ப்படும் ஊனத்துடன் [illegible]லந்து பழுதடைந்து [illegible]டாமல் தனது மேற் [illegible]த்தை முடிக்கொள் [illegible] அசாத்தியப் பாது[illegible]பையும் இத்தாவரத் [illegible] இயற்கை வழங்கி[illegible]கிறது.

[illegible]தர்கள் மட்டுமல்ல, [illegible]ம்கூட பொறிவைத்து [illegible]டுகிறது பார்த்தீர்களா?

## சவாரி



மோட்டார் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடப்பது வழக்கம் தான். ஆனால் இது வித்தியாசமான ஓட்டப்போட்டி.

சின்ன சின்ன மோட்டார் சைக்கிள்கள் பங்குகொண்ட போட்டி இது. இவ் வருடம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஸ்பெயின் நாட்டில் அல்பெசடே என்ற இடத்திலுள்ள மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டிக்கு பலத்த வரவேற்பு கிடைத்தது. உலகிலேயே முதலாவது மிகச் சிறிய மோட்டார் சைக்கிள்கள் ஓட்டப்போட்டி இதுதான் என்று உலக சாதனையாகவும் பதியப்பட்டது. இதனால் 1999ம் ஆண்டு சர்வதேச சிறியரக மோட்டார் சைக்கிள் ஓட்டப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் அமெரிக்காவில் நடந்துவருகின்றன.



## இருவர்

198 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடிய டெண்டுல்கர் 18 சதம் அடித்து உலக சாதனை புத்தகத்தில் தன் பெயர் பொறித்துவிட்டார்.

சயீட் அன்வரா? டெண்டுல்கரா? உலக சாதனையை படைக்கப்போகிறார்கள்? என்று பல காலமாக கேட்கப்பட்டு வந்த கேள்விக்கு டெண்டுல்கர் விடையளித்துவிட்டார்.

சயீட் அன்வர் 158 ஒரு நாள் போட்டிகள் விளையாடி 15 சதம் அடித்திருக்கிறார். டெண்டுல்கருடன் ஒப்பிட்டால் சயீட் அன்வர் குறைந்த போட்டிகள்தான் விளையாடியுள்ளார். ஆகவே அன்வரின் திறமையும் அசாத்தியமானது தான்.

டெண்டுல்கரின் சதங்கள் பற்றி வித்தியாசமான சில தகவல்கள்:

* டெண்டுல்கர் சென்னையில் நடந்த ஒரு நாள் போட்டிகளில் சதம் போட்டதில்லை. அதைப் போல இங்கிலாந்துக்கு எதிராகவும் சதம் போட்டதில்லை.
* தனது முதல் சதத்தை 79வது ஒரு நாள் போட்டியிலும் 18வது சதத்தை 198வது ஒரு நாள் போட்டியிலும் போட்டிருக்கிறார்.
* முதலாவது ஆட்டக்காரராக களமிறங்கி பத்து சதத்தையும், இரண்டாவது ஆட்டக்காரராக களமிறங்கி எட்டு சதத்தையும் அடித்திருக்கிறார்.
* 1995ல் ஒரே ஒரு சதம் மட்டுமே அடித்தார்.
* முதல் சதத்தை 09.09.1994 அன்றும் நிகழ்த்தினார். இதற்காக இவர் சந்தித்த பந்துகள் 2262.
* முதல் சதத்தை அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சிங்கர் கிண்ணப் போட்டியிலும், உலக சாதனை சதத்தை சிம்பாப்வேக்கு எதிரான போட்டியிலும் அடித்திருக்கிறார்.

## 1 வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் ஹிஷோக் கிரிதரன் 23.10.1998

கைதடி மேற்கைச் சேர்ந்த கிரிதரன்-மீசாலை வடக்கைச் சேர்ந்த உஷாநந்தி தம்பதியினரின் செல்வப் புதல்வன் ஹிஷோக் தனது முதலாவது பிறந்த நாளை 23.10.1998 அன்று SWITZERLAND-SCHLIEREN (Z.H) நகரிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். ஹிஷோக் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா(மீசாலை), கைதடியைச்சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, சிறிபெரியப்பா, பேரின்பநாதன் மாமா, கலா அத்தை, மேரு மச்சான் மற்றும் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இருக்கும் உற்றார், உறவினர், தோழர்கள் அனைவரும் அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் அருளும், நல்லாசியும் பெற்று பண்பின் பிறப்பிடமாய்-செல்வச் செழிப்புடன் சகல கலைகளும் கற்று சுகஜீவியாக பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

தகவல்-ச கிரிதரன் (Swiss)



படிப்பகம்